# ஆடத் தெரியாத கடவுள்

மாநுட வாழ்வுக்கு
பொருள் சொல்லும்
கருத்தாழமிக்க கட்டுரைகள்

நீதிபதி
எஸ். மகராஜன்

நர்மதா பதிப்பகம்
நல்ல நூல் வெளியீட்டாளர்கள்
16/7, ராஜாபாதர் தெரு, பாண்டிபஜார்
தியாகராய நகர், சென்னை - 600 017.

ஆசிரியரின் மற்றொரு நூல் --
நர்மதா வெளியீடு :
"சொல் இன்பம்' ரூ. 32-00

N 426
N 426
Pages : 128
Price Rs. 24/-
Paper Used : 11.6 kg. SPB c/w

● Aada Theriyadha Kadavul – A collection of selected articles on life and literature – in Tamil – by Justice S. Maharajan © ● First Edition : 1972 ● This Second Edition : December 1998 ● Published by : T.S. Ramalingam, Narmadha Pathipagam, Chennai – 600 017 ● Printed at : Manian Achagam. 172, Shanmugam Pillai Street, Mylapore, Chennai-4. ●

பொருளடக்கம்


| | |
|---|---|
| 01. ஆடத் தெரியாத கடவுள் | 11 |
| 02. சிந்தைக் கலசம் | 15 |
| 03. வேதம் ஊன்றும் பலா | 19 |
| 04. கேடா வரு நமன் | 23 |
| 05. ஊர் புகலாமே | 26 |
| 06. குறியீடு | 29 |
| 07. சிரிக்கும் திறம் | 32 |
| 08. வாழும் நெறி | 36 |
| 09. மருகலான் அடி | 40 |
| 10. விளக்கை விளக்கும் விளக்கு | 43 |
| 11. தமிழ் செய்த திருமூலன் | 50 |
| 12. உடலும் உயிரும் | 57 |
| 13. அருள் வெளி | 64 |
| 14. உறவும் உணர்வும் | 71 |
| 15. நானும் தானும் | 80 |
| 16. தவம் | 87 |
| 17. புலால் மறுத்தல் | 90 |
| 18. அருளுடைமை | 93 |
| 19. சமயச் சடங்குகளும் டி.கே.சி.யும் | 96 |
| 20. தமிழ் நாட்டில் சாக்தம் | 107 |

காணிக்கை

பாலூட்டும் பருவத்திலேயே சமய உணர்வையும் எனக்குச் சேர்த்தூட்டிய என் அருமை அன்னை அன்னம்மாள் அவர்களின் திருவடிகளிலே இந் நூலைக் காணிக்கையாகச் சார்த்துகிறேன்.

உ

முருகா

திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் நல்கிய

முன்னுரை

நூல் மரக்கோணலை மாற்றும்; அதுபோல் ஆன்றோர்கள் எழுதிய அறநூல் மனக் கோணலை மாற்ற வல்லது.

நித்தியப் பொருள்கள் மூன்று என மறைகள் மொழிகின்றன. தானே அறிகின்ற பொருள் ஒன்று; அறிவித்தால் அறிகின்ற பொருள் ஒன்று; அறிவித்தாலும் அறியாத பொருள் ஒன்று. இதனைப் பதி, பசு, பாசம் என்று முன்னோர் மொழிவர்.

"சான்றவர் ஆய்ந்திடத் தக்கவாம் பொருள் மூன்றுள மறையெலாம் மொழிய நின்றன;
ஆன்றதோர் தொல்பதி, ஆருயிர்த் தொகை, வான்றிகழ் தளைஎன வகுப்பர் அன்னவே"

என்று கந்தபுராணம் கழறுகின்றது.

இந்த உண்மையை மிகத் தெளிவாக ஒரே வரியில் கூறுகின்றார் திருமூலர் :

"பதியினைப் போல் பசுபாசம் அநாதி."

திருமூலருடைய திருமந்திரம் ஒரு அமுதக்கடல். இந்த அமுதக் கடலில் முழுகி ஆழங்கண்டு எழுந்தவர் பெருமதிப்புக்குரிய உயர் நீதிபதி எஸ். மகராஜ பிள்ளையவர்கள். வேப்பம்பழம் அழகாக இருக்கும். சுவையிருக்காது; பலாப்பழம் சுவையுடையது, அழகிருக்காது. அழகும் சுவையும் உடைய கனி ஆரஞ்சு.

சிலர் எழுதுவார்கள், பேச முடியாது. பெரிதும் திகைப்பார்கள்; சிலர் சண்டவேகமாகப் பேசுவார்கள், எழுத இயலாது விழிப்பார்கள். எழுதவும் பேசவும் வல்லவர் நம் நீதிபதியவர்கள்.

தனத்துக்குத் தானம் வேண்டும்; மனத்துக்கு மானம் வேண்டும்; நிதிக்கு நீதி வேண்டும். இந்த நீதிக்குப் பதியாக விளங்குபவர் மகராஜ பிள்ளையவர்கள்.

செந்தமிழ் நாடு செய்த தவத்தால் வந்த நம் நீதிபதியவர்கள் ஆழ்ந்தகன்ற நுண்மதி படைத்தவர், பெருஞ்சிந்தனையாளர். அருளாளர்களின் நூல்களைக் கண்டு வெருவி ஓடாமல், துருவித் தொளைத்து அரும்பெரும் பொருள்களைக் காணும் அற்புத ஆற்றல் படைத்தவர்.

பளிங்கு போன்ற மாசற்ற மனம் படைத்த இத்திருவினர் அவ்வப்போது உரை நிகழ்த்திய--எழுதிய செந்தமிழ் மணிக் குவியல்களை இப்போது ஒருசேரக்கண்டுகளிக்க ஒரு நூல் வடிவில் வருகின்றது. இதற்கு இட்ட பேரே ஒரு புரட்சியாக, "ஆடத் தெரியாத கடவுள்" என்று நம்மை வியக்குமாறு செய்கின்றது.

இந்த நூலில் தமிழ் துள்ளு நடையிட்டு விளையாடுகின்றது. ஆசிரியர் மகேந்திர ஜாலங்காட்டுவான் போல அநேக நுண்மாண் கருத்துக்களை எந்த எந்த வடிவிலேயோ கொண்டுவந்து நம் மனக்கண் முன் நிறுத்திக்காணுமாறு செய்கின்றார்.

இந்த நூலில் வருகின்ற நுட்பதிட்பங்களில் சில வற்றைச் சிந்தனைக்குக் கொண்டு வருகின்றேன், கண்டு களியுங்கள்.

அசைகின்ற பொருள்தான் பெருமையுடன் வாழ முடியும். நாம் அசையவில்லையானால், நாலு பேர் சேர்த்து அசைத்துவிடுவார்கள். அணு அசைகின்றது. கதிர், மதி, நட்சத்திரங்கள் முதலிய எல்லாமே ஆடுகின்றன. இவைகள் யாவும் எவ்வாறு ஆடுகின்றன?

பம்பரங்கள் பல ஆடுமானால் ஆட்டுவான் இன்றி ஆடுமா?

கண்ணாடிக்குள் காணப்படும் நமது நிழல் ஆட வேண்டுமானால் என்ன செய்ய வேணும்? கண்ணாடியையா ஆட்டுவது? நாம் ஆட வேண்டும்; நாம் ஆடினால் கண்ணாடியுள் நிழல் ஆடும். இது போல அகில சராசரங்களும் ஆடும் பொருட்டுத்தான் ஆடு கின்றான் இறைவன்.

"நீக்கமின்றி யாடி நிழலசைப்பான் போல்புவனம்
ஆக்கி அசைத்தருளும் ஆணையும்" -- குமர குருபரர்

"சாட்டையில் பம்பர சாலம்போல இறை
ஆட்டுவான் உலகெலாம்" -- தாயுமானார்

நமது பண்டைப் பெரியோர்கள் முதலும் முடிவும் இல்லாது தனிப்பெருங்கூத்து ஆடிக்கொண்டிருக்கும் நடராஜ மூர்த்தியை ஞானக்கண்ணால் கண்டு வணங்
கினார்கள்.

"ஆதியும் முடிவும் இல்லா அற்புதத் தனிக்கூத் தாடும்
நாதனார் கழல்கள் வாழ்த்தி வழிபடும் நலத்தின் மிக்கார்"
-- பெரிய புராணம்

இத்தத்துவத்தை மேலை நாட்டு அறிஞர், நீட்ஸ்சே கூறியதாக நமது மகராஜ பிள்ளை எழுதியுள்ள எழுத்தோவியம் நமது கருத்தைக் கவர்கின்றது.

"சிந்தைக் கலசம்' என்ற கட்டுரை சிந்தையைக் கொள்ளை கொள்கின்றது. மண்ணும் விண்ணும் தேடித்தேடித் திரிந்து இறைவனைக் காணாது அயர்ந்தார்கள் பலர்.

"வானுக்குள் ஈசனைத் தேடும் மதியிலீர்
தேனுக்குள் இன்பஞ் செறிந்திருந் தாப்போல்
ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந் தானே"

என்ற திருமூலரின் கருத்துப் பதுமைக்கு மகராஜ பிள்ளை மெருகிட்டுத் தருகின்றார்.

பலாப்பழத்துக்கும் ஒரு பெரிய தத்துவத்தை எடுத்துக் கொடுத்திருக்கின்றார். "ஊர் புகலாமே' என்ற கட்டுரை நம்மைச் சிவமூர்த்தி உறையும் ஊருக்கே அழைத்துப்போய் விட்டுவிடுகின்றது.

"சிரிக்கும் திறன்' என்ற கட்டுரையில் நம்மை அறியாமலேயே சிரிக்கும்படி செய்கின்றார்.

"வாழும் நெறி" என்ற உயர்ந்த கட்டுரை துன்பப் படுகுழியில் ஆழும் மாந்தருக்கு வாழும் வழி எளிதாக வகுத்துக் காட்டுகின்றது. ஒன்பதாவது கட்டுரை மனிதருடைய கோணல் மனத்தைச் சுட்டிக்காட்டி அதை நீட்டி நிமிருமாறு செய்கின்றது.

இராமாயணத்திலே கூனி என்ற பாத்திரம் வருகின்றது. அவளுக்கு உடம்பிலும் கோணல், உள்ளத்திலும் கோணல்; இதைப் பட்டினத்துச் சுவாமிகள் " கோடிய மனத்தாள்' என்று

கூறுகின்றார். மருகலானடித் தாமரை மனத்திருகலைத் தீர்க்கும் என்று நீதிபதி ஒரு முத்தாய்ப்புக் கொடுத்து முடிக்கின்ற அழகு நம்மை எங்கோ கொண்டுபோய் விடுகின்றது.

“விளக்கை விளக்கும் விளக்கு” என்ற கட்டுரை, அம்மம்ம! எத்தனை விளக்கங்களுடன் விளங்கு கின்றது! இதனைப் படித்தவரே படித்தவராவார். அறியாமையை உணர்ந்தவனே அறிஞன் ஆகின் றான் என்று இந்த நூலாசிரியர் 11-வது கட்டுரையில் கூறுவது, “ஆராதனையென் அறியாமை ஒன்றுமே” என்ற கம்பநாடர் கவியை நினைவு செய்கின்றது.

மக்கள் சேவையை மகாதேவன் சேவையென்பதை 12-ஆம் கட்டுரையில் காட்டுந்திறன் அருமையாக அமைந்துள்ளது. “அருள்வெளி” என்ற கட்டுரையிலே அருவி வெள்ளம் திரை சுருண்டு கரைபுரண்டு ஓடுகின்றது; “வெம்மாயையற்று வெளிக்குள் வெளி கடந்து சும்மா இருக்கும் சுகம்’ தருகின்றது. “வெளியில் விளைந்த வெறும் பாழைப் பெற்ற வெறுந் தனியைத் தெளிய விளம்புகின்றது.

உறவு--பக்தி; உணர்வு--ஞானம். இந்த பக்தி ஞானத்தால் மறைந்திருக்கின்ற மகேசனைக் காணலாம் என்ற உயர்ந்த தத்துவத்தை 14-வது கட்டுரையில் காட்டுகின்றார்.

பக்தி--மத்து; ஞானம்--கயிறு. ஆனால், மத்தில் தான் வெண்ணெய் தோய்கின்றது. ஆகவே, பக்தியே முக்திக்கு வழியென்பதையும் சுட்டி உய்த்துணர வைக்கின்றார்.

நான் காணா இடத்தில் கடவுளைக் காணலாம்; அவனை வான்காணா, மறைகாணா, மலரோன் காணான், மால் காணான், உருத்திரனும் காணான், ஆனால், நான் காணாத நிலையில் காணலாம் என்று நவிலுந்திறம் நனி உயர்ந்திருக்கின்றது.

தவம் என்ற கட்டுரை நவமாக உள்ளது.

“அடேய், சக்தியிருந்தால் செய்; இல்லையேல் சிவனே என்று விழுந்து கிட” என்று கூறும் வசனத்தின் நுண் பொருளைத் “தமிழ் நாட்டில் சாக்தம்” என்ற கட்டுரை நுனித்து உணர வைக்கின்றது.

இவ்வாறு பலப்பல வித்தகப் பொருள்களைப் புத்தமுதம் போல் புகட்டும் இந்தக் கட்டுரைக் கனிமரத்தைப் பயிராக்கித் தந்தவர் ஏழையா? இல்லை, மகராஜன்.

இந்த மகராஜன் வழங்கிய தமிழ்க் கனியமுதை உண்டார் உவப்பார்கள், கண்டார் களிப்பார்கள். தேனாய் இன்னமுதாய்த் தித்திக்குந் தெய்வத் தமிழ் நடையில் என் ஆப்த நண்பர் மகராஜ பிள்ளை எழுதி, தமிழுலகுக்கு உபகரித்தார். நவை மிகுந்த இந்நாளில் சுவை மிகுந்த இந்நூல் பேருவகையைத் தருகின்றது. தீராப் பிணி தீர்க்கும் ஆரா அமுதம் ஆய இதனை வானோரும் போற்றுவர்; ஏனோரும் படித்து நலம் பெறுவார்களாக.

திரு. எஸ். மகராஜ பிள்ளையவர்கட்குத் தமிழுலகம் கடப்பாடுடையது. வயலூர் வள்ளலின் திருவருளின் துணையால் அன்பர் மகராஜனாய் வாழ்க.

அன்பன்,
கிருபானந்தவாரி.

## 1 ஆடத் தெரியாத கடவுள்

புண்பட்ட நெஞ்சுக்குச் சிரிப்பைப் போல இதமான மருந்து வேறு கிடையாது. உலக வாழ்க்கையிலிருக்கும் ஏற்றத்தாழ்வுகள், இன்ப துன்பங்கள், பித்தலாட்டங்கள்-- இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு, சிரிக்கத் தெரியாமலும் நாம் இருந்தோமேயானால், என்ன ஆகும் நம் கதி? பைத்தியம் பிடித்துவிடும். பைத்தியத்திலிருந்து தடுப்பதற்காகவே நமக்குச் "சிரிப்பு' என்ற தெய்வீக சக்தி கொடுக்கப்பட்டிருக்கிறது.

"நகல்வல்லர் அல்லார்க்கு மாஇரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள்"

என்று சொன்னார் குறளாசிரியர். சிரிக்கத் தெரியாதவனுக்குப் பட்டப்பகலும் அமாவாசை இருட்டாகத்தானிருக்கும் என்பது இந்தக் குறளின் பொருள். தெளிவில்லாத காரணத்தால் சிரிப்பற்று இருக்கிறோம். உள்ளத்தில் தெளிவு வந்துவிட்டாலோ, வாழ்க்கையே ஒரு சிரிப்பாணியாக இருக்கும். 'The world is a comedy to those who think and a tragedy to those who feel' என்று ஒரு அறிஞர் சொன்னார்: அதாவது, சிந்தனைத் தெளிவுள்ளவனுக்கு இந்த உலகம் ஒரு ஹாஸ்ய நாடகமாகத் தோன்றுகிறது, உணர்ச்சிவசப்பட்டவனுக்கு இந்த உலகம் சோக நாடகமாகக் காட்சி கொடுக்கிறது என்று சொன்னார்.

மிருக வர்க்கங்களிலே சிரிக்கும் ஆற்றலைப் பெற்ற பிராணி, மனிதன் ஒருவன்தான். ஆனால், இந்த அரிய ஆற்றலை மனிதனுக்குப் பயன்படுத்தத் தெரியவில்லையே என்று ஆற்றாமைப்படுகிறார் வள்ளுவர்.

அணுகுண்டுக்கில்லாத சக்தி சிரிப்புக்கு இருக்கிறது என்பதை ஒரு புராணக்கதை விளக்குகிறது. திரிபுரத்தில் அட்டகாசம் செய்துகொண்டிருந்த அரக்கர்களைச் சிவபெருமான் அழித்தார். எப்படி அழித்தார்? ஹைட்ரஜன் குண்டு போட்டல்ல, ஒரு சிரிப்பு சிரித்தார். அவ்வளவுதான், தீமையே வடிவாக வந்த அரக்கர்கள் தீய்ந்து ஒழிந்தார்கள்.

"சீராரூர் மேவும் சிவனே--சிரிப்பன்றோ
நேராரூர் அட்ட நிலை"

என்று பாடினார் கவிஞர்.

சிரிப்பு புற இருளை மாத்திரமல்ல, அக இருளையும் அகற்றி, துன்பத்தைத் துடைத்து இன்பத்தை நல்குகிறது. விவேகானந்தரிடத்திலே சிஷ்யையாக இருந்தார் நிவேதிதா என்ற ஆங்கிலப் பெண்; நற்குணங்கள் நிறைந்த பெண். இருந்தாலும், எப்போதும் மூஞ்சியைத் தொங்கப் போட்டுக்கொண்டே இருப்பார் நிவேதிதா. அவரைப் பார்த்து விவேகானந்தர் சொன்னார்:

"அம்மா, நீ ஆனந்தமாக இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்; கலகலப்பாக இருக்க வேண்டும். அப்படியிருந்தால்தான் நீ விரும்பும் ஜீவன் முக்தி உனக்குக் கிடைக்கும்" என்று. இந்த அறிவுரையை வலியுறுத்து வதற்காக ஒரு சுவையான கதையையும் சொன்னார். ஒரு காலத்திலே, நாரதர் வானுலகத்தை விட்டு, பூமியில் இறங்கி, ஒரு அடர்ந்த காடு வழியாகப் போய்க்கொண்டிருந்தார். நடுக்காட்டிலே ஒரு ரிஷி தலை கீழாக நின்று தவம் செய்து கொண்டிருந்தார். இந்தக்காட்சியைக் கண்டதும் நாரதருடைய நண்பர், "நாரதரே! இந்த ரிஷிக்கு எப்போது ஜீவன் முக்தி கிடைக்கும்?" என்று கேட்டார். உடனே நாரதர், "இவனுக்கு இன்னும் மூன்று பிறவிகளுக்குப் பின்னால் முக்தி கிடைக்கும்" என்று சொன்னார். இதைக் கேட்டுக்கொண்டிருந்த ரிஷி "ஓ' என்று அலறினார். "ஐயோ, இன்னும் மூன்று பிறவிகளா? என்னால் பொறுக்க முடியாது" என்று கதறினார். ரிஷியைத் தாண்டிச் சென்றார் நாரதர்.

நூறடிக்கு அப்பால் ஒரு இடையன், மாமரத்தடியில் உல்லாசமாக ஆடு மேய்த்துக் கொண்டிருந்தான். "இவனுக்கு எப்போது ஜீவன் முக்தி?" என்று நாரதரைக் கேட்டார் அவர் நண்பர். நாரதர் சொன்னார்: "இந்த மாமரத்தில் எத்தனை இலைகள் உண்டோ, அத்தனை பிறவி களுக்குப் பின் இவனுக்கு முக்தி கிடைக்கும்" என்றார். இதைக் கேட்ட இடையனுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. "எனக்குக் கூடவா ஜீவன் முக்தி கிடைக்கப்போகிறது!" என்று சொல்லிக்கொண்டே ஒரு ஆட்டம் ஆடினான் அவன். அந்தக் கணத்திலேயே அவனுக்கு ஜீவன் முக்தி கிடைத்துவிட்டது.

ஆனந்தமில்லாத வாழ்க்கை, பயனற்ற வாழ்க்கை. ஆனந்தமில்லாத சமயம், பயனற்ற சமயம். ஆகவே நீட்ஸ்சே (Nietzche) என்ற ஜெர்மன் தத்துவ ஞானி சொன்னார்: How can I believe in a god who would not dance?' என்று. அதாவது, "ஆடத் தெரியாத கடவுளை நான் நம்பத் தயாரில்லை" என்று சொன்னார்.

நீட்ஸ்சே காலத்திலுள்ள ஐரோப்பிய கிறிஸ்தவர்கள் சிலுவையின் உட்பொருளாகிய தியாகத்தை மறந்து புறப்பொருளாகிய துன்பத்தைப் பாராட்டி, அல்லற்படுவதே வாழ்க்கையின் நோக்கம் என்று தவறாகக் கருதி வந்தார்கள். இக்கருத்தின் விளைவாக ஐரோப்பிய சமுதாயத்தில் துன்ப உணர்ச்சி பரவியது. "இறைவன் இன்ப வடிவானவன், துன்ப வடிவான வன் அல்ல," என்பதை வற்புறுத்துவதற்காகவே, நம் முன்னோர்கள் அவனை ஆடல் வல்லான் என்றும், ஆடல் அரசன் என்றும் போற்றி வணங்கினார்கள்; நடராஜ தத்துவமே ஆனந்த தத்துவம் என்பதை உணர்ந்து அனுபவித்தார்கள்.

"ஆடவல்லார் நெறி ஆட அறிகிலேன்
பாட வல்லார் நெறி பாட அறிகிலேன்"

என்று சொன்னார் திருமூலரும்.

ஆனந்தம் மேலிடும்போது, மயில் தன் தோகையை விரித்து ஆடுகிறது. நடனமே ஆனந்தத்தின் பரிபூரண வெளியீடு. அப்படியானால், இன்ப வடிவான இறைவன் ஆடிக்கொண்டுதானே இருக்க வேண்டும். ஆடும் தன்மை அவனுக்கு இல்லையென்றால், அவனுக்கு ஆனந்தம் இல்லை என்றாகிவிடும். ஆனந்தம் இல்லை என்றால், அவனைக் "கடவுள் என்று எவ்வாறு ஒப்புக் கொள்வது! ஆகவேதான், "ஆடத் தெரியாத கடவுளை நான் நம்பத் தயாரில்லை" என்று சொன்னார் நீட்ஸ்சே.

- 1971-இல் சென்னை வானொலியில் பேசியது.

**2 சிந்தைக் கலசம்**

வானவெளிக் கப்பலில் முதன் முதலாகப் பயணம் செய்துவிட்டுப் பூமிக்குத் திரும்பி வந்தார் ஒரு ரஷ்ய விஞ்ஞானி. பேட்டி காணச்சென்ற பத்திரிகை நிருபர் களிடத்திலே அவர் எக்காளமாகச் சொன்னார்: "வானத்திலே எங்கெங்கெல்லாமோ சுற்றிப் பார்த்து விட்டேன். ஆனால், கடவுள் என்ற ஆசாமி எங்கும் என் கண்ணுக்குத் தென்படவில்லை" என்றார்.

உள்ளத்துக்குள்ளேயே இறைவனை வைத்துக்கொண்டு, அகவெளியை மறந்து புறவெளியிலே இறைவனைத் தேடுகிறார்களே, அவர்களைப் பார்த்துத் திருமூலர் சொல்லுகிறார்:

"உள்ளத்தினுள்ளே உளபல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்து நின்றாடார், வினைகெட,
பள்ளமும் மேடும் பறந்து திரிவரே
கள்ள மனமுடைக் கல்வியில் லோரே."

ஒரு விஞ்ஞான மேதையைப் பார்த்து, அதுவும் வானவெளியைச் சுற்றி வந்த விஞ்ஞான மேதையைப் பார்த்து, "கள்ள மனமுடைய கல்வியில்லாதவன்" என்று தயவு தாக்ஷண்யம் பாராமல் பேசுகிறார் திருமூலர்.

திருமூலரைக் காட்டிலும் கடுமையானவர் சிவவாக்கியர். அசட்டுப் பேச்சைக் காதால் கேட்கவே முடியாது அவராலே. அந்த விஞ்ஞானியைப் பார்த்து சிவவாக்கியர் சொல்லுவதைப் பார்ப்போம்-

"உறியிலே தயிர் இருக்க
ஊர்புகுந்து வெண்ணெய் தேடும்
அறிவிலாத மாந்த ரோடு
அணுகு மாற தெங்ஙனே!"

"வீட்டுக்குள்ளே இருக்கிறது உறி. உறிக்குள்ளே இருக்கிறது தயிர். அந்தத் தயிரை எடுத்துக் கடைய வேண்டியதுதான் பாக்கி; உடனே வெண்ணெய் கிடைத்துவிடும். இதைச் செய்யாமல், வெண்ணெய் தேடி ஊர் ஊராய் அலைகிறாயே, வானவெளியை வேறு சுற்றுகிறாயே, உன்னுடைய சமர்த்தை என்ன வென்று சொல்லுவது! உன்னோடு பேச்சு வைத்துக்கொள்வதே தப்பு," என்று கடிந்துகொள்ளுகிறார் சிவவாக்கியர்.

அப்படியானால், இறைவன் உள்ளத்துக்குள்ளேயே இருக்கிறானா? போயும், போயும் இருப்பதற்கு மனித உள்ளந்தானா கிடைத்தது இறைவனுக்கு? அங்கே போய் அமர்வதற்கு என்ன காரணம்? என்றெல்லாம் கேட்கிறோம். பதில் சொல்லுகிறார் திருமூலர்:

"கள்ளப் பெருமக்கள்
காண்பர் கொலோ என்று
உள்ளத்தி னுள்ளே
ஒளித்திருந்து ஆளுமே"

வேடிக்கைப் பிரியனாகிய இறைவன், மனிதனோடு கண்ணாம் பொத்தி விளையாடுகிறான். கண்ணாம் பொத்தி விளையாடும்போது எல்லோரும் எதிர்பார்க்கும் இடத்திலே ஒளிந்தால், விளையாட்டில் ரஸமில்லாது போய்விடுமே! ஆகையால், மனிதன் எளிதில் கண்டுபிடிக்க முடியாத இடம் அவன் மனம்தான். அங்கே போய் ஒளிந்துகொள்வோம் என்று தெளிந்து, அவன் உள்ளத்துக்குள்ளே போய்ப் பதுங்கிக் கொண்டானாம்.

"சிந்தைக் கலசத்து எழுகின்ற மாசக்தி" என்று இறைவனைப் போற்றுகிறார் திருமூலர். ஒளிந்திருக்கும் இடம் நம்முடைய சிந்தைதான், வானவெளியல்ல என்று தெரிவதற்கே யுகக்கணக்காகி விடுகிறது. ஆனால், இருக்கும் இடம் தெரிந்த பிறகு இறைவனோடு உறவாடுவது எளிதாகிவிடுகிறது.

தன் மனத்தைத் தன் மனத்துக்குள்ளேயே செலுத்தித் தேடத் தொடங்குகிறார் திருமூலர். கலங்கிப் போயிருந்த சிந்தை, கொஞ்சம் கொஞ்சமாகத் தெளிவடைகிறது. சிந்தைக் கலசத்தினுள்ளிருந்து சிவம் மெல்ல மெல்ல வெளிப்படுவதைக் காண்கிறார்.

"சிந்தை தெளியத் தெளிய வல்லார்கட்குச்
சிந்தையினுள்ளே சிவனிருந்தானே"

என்று ஓலமிடுகிறார் திருமூலர்.

இப்படியாக, இறைத் தத்துவத்தைக் கண்டுபிடித்தவுடன் அவருக்கு என்றுமில்லாத துணிச்சல் ஏற்பட்டு விடுகிறது.

"ஆராலும் என்னை அமட்ட வொண்ணாதினி" என்றார். ஒரு பயலுக்கும் அஞ்ச வேண்டியதில்லை யாம். ஏன்?

"சீரார் பிரான் வந்து என் சிந்தை புகுந்தனன்"

முன்னமேயே சிந்தையிலிருந்தவன்தான். ஆனால், இப்போதுதானே என் சிந்தையிலிருக்கிறான் என்று நான் உணர்ந்தேன். ஆகையால், அவன் என் சிந்தை யில் புகுந்துவிட்டான் என்றே சொல்ல வேண்டும். இதன் விளைவு என்ன?

"சீராடி அங்கே திரிவதல்லால், இனி
ஆர்பாடும் சாரா அறிவறிந்தேனே"

தன் நிறைவு வந்துவிட்டது. இன்னொருவனைச்சார்ந்து நிற்கவேண்டிய அவசியம் இல்லை. சார்பு கெட்டுவிட்டது. ஆகவே, ஒழிந்தது அச்சம். ஏன் பாடமாட்டார்?

"ஆராலும் என்னை அமட்ட வொண்ணாதினிச்
சீரார் பிரான்வந்து என் சிந்தை புகுந்தனன்
சீராடி அங்கே திரிவதல்லால், இனி
ஆர்பாடும் சாரா அறிவறிந்தேனே."

- 1968-இல் புதுவை வானொலியில் பேசியது.

**3 வேதம் ஊன்றும் பலா**

நாற்பது ஆண்டுகளுக்கு முன், சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில், ஒரு தேநீர் விருந்து நடந்தது. ஸ்காட்லன்ட் நாட்டிலிருந்து வந்த பாதிரியார் ஒருவரை வரவேற்று விருந்து நடத்தினார்கள். கல்லூரியின் பழைய மாணவரான ரஸிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் அவர்களையும் விருந்துக்கு அழைத்திருந்தார்கள்.

காட்டுமிராண்டிகளாகிய ஹிந்துக்களை எப்படியாவது திருத்திவிட வேண்டும் என்று கச்சை கட்டிக்கொண்டு வந்தவர் பாதிரியார். ரஸிகமணியை அவரிடத்திலே அறிமுகப்படுத்தினார்கள். உடனே ஸ்காட்லன்ட் துரை டி.கே.சி.யைப் பார்த்து, ஏளனத்தோடு, பல கேள்விகளைக் கேட்கலானார். தமிழர்களுடைய பண்பாட்டைப் பற்றியும், சமயத்தைப் பற்றி யும் கேள்விகள் கேட்டார்.

"ஸ்காட்லன்ட் தேசத்திலுள்ள நாங்கள் மரங்களிடத்திலே மிகுந்த அன்பு செலுத்துகிறோம். தமிழர்களாகிய நீங்கள் எப்படியோ?" என்று கேட்டார் பாதிரியார்.

இந்தக் கேள்விக்கு உடனே டி.கே.சி. பதில்சொன்னார்கள்: "மரங்களிடத்திலே நாங்கள் அன்பு செலுத்துவதில்லை, பக்தியே செலுத்துகிறோம்" (We don't love trees, we worship them) என்று. அதைக்கேட்ட பாதிரியார் அரண்டே போனார்.

டி.கே.சி.யின் வாக்கை நினைக்க நினைக்க, அது நம்மை ஒரு சிறந்த சமய உலகத்துக்குள்ளே கொண்டுபோய் விட்டுவிடும். தமிழ் நாட்டிலே, ஒவ்வொரு கோயிலுக்கும் ஒரு "ஸ்தல விருக்ஷம்' என்று ஒன்றுண்டு. திருக்குற்றாலத்துக் கோயிலுக்குள் போனால் அங்கே ஒரு பலா மரத்துக்குப் பூசை நடப்பதைப் பார்க்கலாம். பலா மரத்துக்குள்ளே இறைவன் கொலுவீற்றிருக்கிறான் என்பதை நம் முன்னோர்கள் எப்படியோ கண்டுகொண்டார்கள்.

சென்னையிலிருந்து புதுவைக்குப் பலாப்பழத்தை பார்ஸல் செய்து goods வண்டியில் அனுப்பினால், பாதி அழுகிப் போய்விடும். கால்வாசி திருட்டுப் போய்விடும். இங்கு பத்திரமாக வந்து சேருவதெல்லாம் 100-க்கு 25 பழந்தான்.

ஆனால், கோடானு கோடி ஆண்டுகளாகப் பலா மரம் என்ற தத்துவம் பலாப்பழத்தை எவ்வளவு எச்சரிக்கையோடு பாதுகாத்து வந்திருக்கிறது! வித்தைப் பாதுகாப்பதில்தான் அந்த மரத்துக்கு எவ்வளவு அக்கறை! வித்தை இனிப்பான மஞ்சள் சுளையிலே பொதிந்து, சுளை கெட்டுப் போகாமல்இருக்க வேண்டுமே! அதற்காகச் சுளைகளுக்கு வைக்கோல் packing கொடுத்து, பலாக்காயைக் குரங்கு துளைத்துவிடாமல் இருக்க வேண்டுமே! அதற்காக முள் நிறைந்த தோட்டிலே பக்குவமாகச் சுற்றிவைத்து, எவ்வளவு எச்சரிக்கையாக நம் கையிலே கனியைக் கொண்டுவந்து கொடுக்கிறது பலாமரம்!

இதையெல்லாம் கூர்ந்து கவனித்து அதிசயித்தார்கள் நம் முன்னோர்கள். பலாமரம் நம்மைப் போல்,B.A; M.A, பட்டம் வாங்கவில்லையே! Botany அதற்குத் தெரியாதே! அது எப்படி இந்த அற்புதங்களைச் செய்ய முடிந்தது என்று சிந்தித்தார்கள். அப்பாவி மரமா இந்த விந்தைகளைச் செய்தது? இல்லை, மரத்துக்கும் தெரியாத ஒரு தெய்வீக சக்தி, மரத்துக்குள் இருந்துகொண்டு இந்த அற்புதங்களைச் செய்திருக்கிறது என்று உணர்ந்தார்கள். உணர்ந்தவுடனே, பலாமரத்தினுள் தொழிற்படும் இறைத் தத்துவத்தை நினைந்து வணங்கினார்கள். அதற்கு ஆறுகால பூசை நடத்தினார்கள். மேள தாளத்தோடு அதற்கு விழாக் கொண்டாடினார்கள். குறுகிய பலா மரத்தில் வீற்றிருக்கும் இறைவனைக் "குறும்பலா ஈசர்" என்று பெயரிட்டு வாழ்த்தினார்கள்.

“வேதம்’ என்ன செய்ததாம்? இறைவனைப் பற்றிச்சொல்லாலே வருணித்து வருணித்துப் பார்த்ததாம். மனிதனுக்கு அது விளங்கவில்லை, குழப்பந்தான் ஏற்பட்டது. எப்படி மனிதனுக்கு இறைவனைப் புரிய வைப்பது என்று வேதம் நீண்டகாலம் யோசனை பண்ணி, கடைசியாக ஒரு தந்திரம் செய்தது. ஒரு பலாவின் வித்தைக் குற்றாலத்து மண்ணிலே ஊன்றி விட்டுப் போய்விட்டதாம் வேதம். அந்த வித்து முளைவிட்டு, இலை பரப்பி, கொப்பும் கவருமாக வளர்ந்து, காய்த்துக் கனிந்ததைப் பார்த்தான் மனிதன். பலா மரத்தினுள்ளிருக்கும் இஞ்சினீயரிங் ஜாலங்களையும், ரஸாயன வித்தைகளையும், தாவர மர்மங்களையும் பார்த்தவுடன், இறைவனுடைய திருவிளையாடலைப்புரிந்து கொண்டான் மனிதன்; வேதத்தைப் படித்தும் பிடிபடாத உண்மை, பலாமரத்தைக் கவனித்ததும் தெளிவாகிவிட்டது. இந்த அரிய கருத்தை,

“வேதம் ஊன்றும் பலாவுள்ள நாடு”

என்று குறவஞ்சி ஆசிரியர் குறிப்பிடுகிறார். மாசற்ற காட்சியுடையவர் அவர். அவருடைய காட்சியிலே பலா மரம் இறைவனுடைய உருவமாகவே தோன்றுகிறது.

“கிளைகளாய்க் கிளைத்தபல கொப்பெலாம்
சதுர்வேதம், கிளைகள் ஈன்ற
களையெலாம் சிவலிங்கம், கனியெலாம்
சிவலிங்கம், கனிகள் ஈன்ற
சுளையெலாம் சிவலிங்கம், வித்தெலாம்
சிவலிங்க சொரூபம் ஆக
விளையுமொரு குறும்பலாவின் முளைத்தெழுந்த
சிவக்கொழுந்தை வேண்டுவோமே.”

- 1967-இல் புதுவை வானொலியில் பேசியது.

**4 கேடா வரு நமன்**

சங்கரன் கோயில் கோமதி அம்மனை நோக்கி வரம் கேட்கிறார் ஒரு பக்தர். பிறவி என்றும், சாவு என்றும் நாம் சொல்லுவதெல்லாம் நம்முடைய ஆணவ மயக்கத்தில் தோன்றும் தோற்றங்கள்தான். இந்த மயக்கம் தீர்ந்துவிட்டால், பிறவியில்லை, சாவு என்பதும் இல்லை. “மயக்கத்தைத் தீர்த்து வை, தாயே! பித்தத்தைத் தெளிய வை, தாயே!” என்று முறையிடுகிறார் பக்தர்.

“கேடா வரு நமனைக்
கிட்ட வராதே தூரப்
போடா … …”

என்று நீ உத்தரவிட்டால், அந்த நமன் பஞ்சாய்ப்பறந்துவிடுவானே, தாயே!” என்று சொல்லுகிறார்.

நமன் எப்படி வருகிறானாம்? மெல்ல, மெல்ல நம்மை அணுகுகிறான். தலைமயிர் நரைக்கிறது என்றால் என்ன பொருள்? நமன் நமக்கு அச்சாரம் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறான் என்றுதானே பொருள்! கவி தாகூருக்குக் காதுக்குப் பின்னால் ஒரு நரைமயிர் தோன்றியது. அதைக் கண்ணாடியிலே பார்த்து விட்டார் அவர். உடனே அவர் சொன்னார்: Death has placed his visitng card behind my ear’ “என் காதுக்குப் பின்னால் visiting card- ஐ செருகி விட்டுப் போயிருக்கிறான் நமன்” என்று.

நரை விழுந்த பிறகு காது கொஞ்சம் மந்தமாகிறது, கண் மங்குகிறது, பல் ஒவ்வொன்றாக விழுகிறது. இப்படியாக மெல்ல மெல்ல, பையப் பைய வருகிறான் நமன். அவன் வரவை எண்ணி அஞ்சுகிறோம். கோமதித் தாயை வணங்கினால், அந்த அச்சம் நீங்கி விடும்.

“மரணப்ரமாதம் நமக்கில்லை”

என்று அருணகிரி நாதரைப்போல் நாமும் முழங்கலாம். அவளுடைய திருவடிகளை நினைக்க நினைக்க நாம் நம்மை மறக்கிறோம், ஆனந்தம் பிறக்கிறது, மரணபயம் அழிகிறது.

தாயிடத்திலே உரிமையோடு வரம் கேட்கிறார் பக்தர்: அதிகாரத்தோடு கேட்கிறார், அதட்டியே கேட்கிறார். அம்மையல்லவா! அப்பா என்றால்தானே அஞ்சி, அஞ்சிக் கேட்க வேண்டும்.

“கேடா வருநமனைக்
கிட்ட வராதே தூரப்
போடா எனஓட்டி
பொற்கமலத் தாள்நிழற்கீழ்
வாடா என அழைத்து
வாழ்வித்தால், அம்ம, உனைக்
கூடா தென்றார் தடுப்பார்
கோமதித்தாய் ஈஸ்வரியே”

“அம்மை நீ, குழந்தை நான். என்னைக் காப்பாற்ற விரைந்து வரவேண்டாமா நீ? வராமலிருக்கிறாயே! யாரே “கூடாது’ என்று உன்னைத் தடுக்கிறார்கள்?” என்று கேட்கிறார்.

அருமையான பாடல். திருநெல்வேலி அழகியசொக்கநாதபிள்ளை என்ற கவிஞர் பாடிய பாடல். “கேடா’ என்று துவங்கும் முதல் வரியிலே அச்சம் என்ற பாவம் பேசுகிறது. “போடா’ என்று துவங்கும் இரண்டாவது வரியிலே கோபச் சுவை வெளிவருகிறது. “வாடா’ என்று தொடங்கும் மூன்றாவது வரியில் அருமைப்பாடு என்ற உணர்ச்சி பொங்கித் ததும்பு

கிறது. "கூடாதென்றார் தடுப்பார்" என்ற கடைசி வரியிலே, இடித்துக் கூறும் பாவம் மேலிடுகிறது.

நான்கு விதமான உணர்ச்சிகளையும் கவி எப்படி எடுத்துச் சொல்லுகிறது என்பதை மறுபடியும் கவனிப்போம்.

"கேடா வருநமனைக்
கிட்ட வராதே, தூரப்
போடா, எனஓட்டி,
பொற்கமலத் தாள்நிழற்கீழ்
வாடா என அழைத்து
வாழ்வித்தால், அம்ம! உனைக்
கூடா தென்றார் தடுப்பார்,
கோமதித்தாய் ஈஸ்வரியே."

- 1968-இல் புதுவை வானொலியில் பேசியது.

**5 ஊர் புகலாமே**

பலாப்பழத்தை அறுத்துச் சுளையை எடுப்ப தற்கு முன் கையெல்லாம் பிசினாகி விடுகிறது. ஆனால், கையில் தைலத்தைத் தேய்த்துக்கொண்டு பலாப் பழத்தை அறுக்கும்போது பிசின் கையில் ஒட்டுவதில்லை.

மனித வாழ்க்கையை வாழ்ந்து பார்க்கும் போது விதம் விதமான பிசின் வந்து நம்மோடு ஒட்டுகிறது. உடம்பிலும், உள்ளத்திலுமே பிசின் ஒட்டிக்கொள்கிறது. ஆனால், பக்தி என்ற தைலத்தைப் பூசிக்கொண்டு வாழ்க்கை நடத்தினோமானால், வாழ்க்கைப் பிசின் நம்மை ஒட்டுவதுமில்லை, பாதிப்பதுமில்லையென்று சொன்னார் ராமகிருஷ்ண பரமஹம்சர்.

பக்தியைக் கேவலம் ஆணவ அறிவினாலே வளர்க்க முடியாது. கற்க கற்கப் பலருக்கு ஆணவத்தடிப்பு பெருகி, உணர்வு குறைகிறது. மாணிக்கவாசகரைப் போன்ற ஞானிகள் சிறந்த கல்வி படைத்தவர்களாயிருந்தார்கள். இருந்தாலும் கல்வியின் உடும்புப் பிடியிலிருந்து அவர்கள் விடுபடுவதற்குள் படாதபாடு பட்டார்கள்.

"கல்வியென்னும் பல்கடற் பிழைத்தும்" என்றார் மாணிக்கவாசகர். "ஏழேழு கடலைப் போலப்பரந்து கிடக்கும் கல்வியின் மோகத்தில் நான் மூழ்கி ஒழிந்து போகாமல், இறைவனே, உன் சந்நிதானத்துக்கு என்னை இழுத்துக்கொண்டு வந்துவிட்டாயே, உன்னுடைய கருணையே கருணை!" என்று உருகிப்போற்றுகிறார் மணிவாசகர்.

இதே அனுபவத்தைத் திருமூலரும்,
"கற்றன விட்டேன்
கழல்பணிந் தேனே"
என்று சொல்லி மறுகுகிறார்.

ஓரளவுக்கு மனிதன் உயரும் வரை கல்வி பயனுள்ளதாகவே இருக்கிறது. அதற்கு மேல் அவனை வளரவொட்டாமல் அது தடுக்க முயலுகிறது. சமயக் கல்வி கூட, பெரும்பாலும் ஆணவத்துக்கு ஊட்டம் கொடுத்து ஆன்ம வளர்ச்சிக்குத் தடையாக நிற்கிறது. ஆகவேதான், நமது முன்னோர்கள் கல்வியை எவ்வளவு மதித்தாலும், அதைக் கொஞ்சம் சந்தேகக் கண்ணோடு பார்த்தார்கள். உணர்வைத் தீட்டித் தீட்டி வளர்க்கவேண்டும், கல்வி உணர்வுக்கு இடையூறாய் நிற்காமல்பார்த்துக்கொள்ளவும் வேண்டும் என்று வற்புறுத்தினார்கள்.

சமயப் படிப்பிலே சிறந்த பல பெரியோர்கள், புறசமய தூஷணையில் இறங்கிவிடுவதை நாம் பார்க்கிறோம். எந்த சமயத்தைச் சேர்ந்திருந்தாலென்ன? எந்த வகுப்பில் பிறந்திருந்தாலென்ன? இறைவனோடு உணர்வினால் ஒன்றிவிட்டால் போதும், சிவபுரத்தை அடைந்துவிடலாம் என்ற கருத்தை அழுத்தமாக எடுத்துச் சொல்லுகிறார் திருமூலர்:

"இத்தவம் அத்தவம் என்று
இரு பேரிடும்
பித்தரைக் காணில்நகும்
எங்கள் பேர்நந்தி
எத்தவ மாகிலென்
எங்குப் பிறக்கிலென்
ஒத்துணர் வார்க்கு ஒல்லை
ஊர்புக லாமே."

எந்த சமயத்தில் இருந்துகொண்டு தேடினாலும் இறைவனை அடையலாம்.

ஆனால், அன்போடு அவனைத் தேட வேண்டும், உருக்கத்தோடு அவனை நாட வேண்டும், உணர்ச்சிப் பெருக்கிலே அவனோடு கரைய வேண்டும். கேவலம் வறட்டுத் தத்துவமல்யுத்தம் செய்தோ, அறிவுப் பேயாட்டம் ஆடியோ செம்பொருளைக் காண முடியாது. தர்க்கச் சமர்செய்து, கர்வ வீக்கம் பெற்று அஞ்ஞானக் குழியில் இடறி விழும் புலவர்களை “வாத நோயாளர்” என்று அழைத்தார் ராமலிங்க அடிகள். வாதநோய்க்கு ஒரே மருந்து பக்தி. பக்திப் பரவசத்திலே திருமூலர் என்ன செய்கிறார்?

“அன்பு ளுருகி அழுவன் அரற்றுவன்
என்பு முருக இராப்பகல் ஏத்துவன்
என்பொன் மணியை இறைவனை ஈசனைத்
தின்பன் கடிப்பன் திருத்துவன் தானே.”

இறைத் தத்துவத்தோடு நெருங்கிப் பழகியவர்கள் தான், திருமூலரைப் போல இப்படிக் காதல் பாஷையில் பாட முடியும்.

“என்பொன் மணியை, இறைவனை, ஈசனைத்
தின்பன், கடிப்பன், திருத்துவன் தானே.”

- 1968-இல் புதுவை வானொலியில் பேசியது.

**6 குறியீடு**

உடைந்து போன பென்ஸில் குச்சியொன்று; உப்புப் பெறாதது; தரையில் கிடந்தால், குப்பையோடு குப்பையாகப் பெருக்கித் தள்ளிவிடுவார்கள். ஆனால், அதைப் பத்திரமாக ஒரு வெள்ளிப் பேழையில் வைத்து நான் பாதுகாத்து வருகிறேன். பேழையைத் திறந்து குச்சியைப் பார்க்கும்போதெல்லாம் எனக்கு மயிர்க்கூச்சல் எடுக்கிறது; அன்பு குமுறிக்கொண்டு வருகிறது; குச்சியைப் பார்த்தவுடன் பல ஆண்டுகளுக்கு முன் அமரனான என் நண்பனுடைய உருவம் என் மனத்தகத்தே பளிச்சென்று காட்சி கொடுக்கிறது. அந்த நண்பன் பரிசாகக் கொடுத்த குச்சி அது. மற்றவர்களுக்கு அது வெறுங்குச்சிதான். ஆனால், என் நெஞ்சத்திலே அந்தக் குச்சி செய்கிற மாய ஜாலங்களே தனி. குச்சியைக் கண்டவுடன் அந்த நண்பனையே கண்ட உணர்ச்சி எனக்கு ஏற்படுகிறது. நட்பு வளத்திலே, இங்கிதத்திலே, எல்லையற்ற பரிவிலே, பண்பாட்டிலே, சகிப்புத் தன்மையிலே, ஆர்வத்திலே அப்படியொரு நண்பன் எனக்குக் கிடைத்ததில்லை. அவன் மாய்ந்துவிட்டால்தான் என்ன? அவன் கொடுத்த பென்ஸில் குச்சி இருக்கிறது போதும். அவனுடைய புன்முறுவலை அந்தக் குச்சி எனக்குக் காட்டிக்கொண்டிருக்கிறது. அவனுடைய வாழி நண்பினை அது எனக்கு உணர்த்திக்கொண்டே இருக்கிறது. என்னுடைய இதயத்திலே இப்படியொருபிணைப்பு, பிரிக்க முடியாத பிணைப்பு ஏற்பட்டுவிட்டது. குச்சியைக் கண்டதும் அந்த நண்பனைப்பற்றிய நினைவு; அந்த நண்பனை நினைத்ததும், குச்சியைப் பற்றிய நினைவு. இந்த இணைப்பு நெருங்க நெருங்க, வெறும் நினைவுக் குறியாக இருந்த குச்சி, நண்பனாகவே மாறிவிடுகிறது. எது குறி, எது மூலப்பொருள் என்ற பேதம் மறைந்துவிடுகிறது. இந்த மனநிலைதான் உருவ வழிபாட்டுக்கு அடிப்படையாக இருக்கும் நிலை.

எல்லையற்ற பரம்பொருளுக்கு நாம் ஒரு அழகிய உருவத்தைக் கற்பிக்கிறோம். உருவத்தைப் பார்க்கும் பொழுதெல்லாம், அந்தக் கருணைக் கடலின் நினைவு வருகிறது. இறைத் தத்துவத்தைப் பற்றிச் சிந்திக்கும் பொழுதெல்லாம், நாம் கற்பனையால் செய்த உருவத் தின் நினைவு வருகிறது. இவ்வாறு, நம் மனம் குறியோடும், குறிக்குப் பொருளாக இருக்கும் தத்துவத்தோடும் பழகப் பழக, இரண்டுக்கும் இடையே யிருக்கும் பிணைப்பு வலுக்கிறது, வேறுபாடு மறைகிறது, அந்தக் குச்சியே என் நண்பனுக்குச் சமானமாயிற்றே, அதைப் போல.

அழகர் கோயிலிலிருக்கும் திருமாலின் ஒளிமிக்கசிலையைப் பார்த்துப் பார்த்துப் பழகியவர் நம்மாழ்வார். சிலையா அது? இல்லை, இறைவனே அர்ச்சாவதாரம் எடுத்து அந்தக் கோயிலில் குடிகொண்டிருக்கிறான் என்பதை உணர்கிறார் ஆழ்வார். பெருமானின் பைம்பொன் திருமேனிக்குப் பட்டு பீதாம்பரத்தை உடுத்துகிறார். பல பொற்கலன்களைப் பூட்டுகிறார். தங்கத் தாமரையிலே நிற்கும் சோதித் திருவடிகளைப் பார்க்கிறார். முகத்திலுள்ள சோதி பொன் முடியின் சோதியிலே கலப்பதைக் கண்டு பரவசமடைகிறார், ஆடிப் பாடுகிறார். ஏன் செய்ய மாட்டார்? நண்பனைக் காட்டிய அந்த பென்ஸில் குச்சியை மதித்து அதற்கு வெள்ளிப் பேழை கொடுத்தேனே; இறைவனைக் காட்டும் அந்தத் திருமேனிக்கு என்றுமழியாத ஒரு தமிழ்ப் பாடலைப் பாடிக் கொடுத்தார் நம் ஆழ்வார்.

“முடிச் சோதியாய் உனது முகச் சோதி மலர்ந்ததுவோ?”

தங்கக் கிரீடம் வைத்திருக்கிறாயே, அது எப்படி டால் அடிக்கிறது! ஆனால், அந்த முடியின் ஒளியெல்லாம் தன்னைத்தானே படைத்துக்கொண்ட ஒளியா! இல்லை, இல்லை. உன் முகச்சோதியிலிருந்து மலர்ந்ததுதான் அந்த ஒளியெல்லாம்.

“முடிச் சோதியாய் உனது முகச் சோதி மலர்ந்ததுவோ?”

பொற்றாமரை மேல் நிற்கும் திருவடிகளைப் பார்க்கிறார் ஆழ்வார். "அடடா, பொற்றாமரைக்கு இவ்வளவு அழகா! உன் திருவடியிலிருந்து வெளிப்பட்ட சோதிதான் அந்தத் தாமரையாக மலர்ந்துவிட்டதா!"

"அடிச்சோதி நீநின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ?"
என்று அதிசயிக்கிறார்.

"உடம்பை ஒட்டிக்கொண்டு ஒளி வீசி நிற்கிற அந்தப் பட்டுப் பீதாம்பரத்தோடும், நீ அணிந்திருக்கிற பல்வகைப்பட்ட தங்க நகைகளோடும், உன் பைம்பொன் இடுப்பிலேயுள்ள சோதி கலந்துவிட்டதா? இந்த அற்புதத்தையெல்லாம் நானறிய நீ கட்டுரைக்க வேண்டும், அப்பனே!" என்று கேட்கிறார்.

"படிச்சோதி ஆடையொடும் பல்கலனாய் நின் பைம்பொன்
கடிச்சோதி கலந்ததுவோ, திருமாலே, கட்டுரையே!"

உலக இலக்கியத்திலேயே இப்படி ஒரு பாடல் கிடையாது என்று தமிழர்கள் தோள் தட்டலாம். ஆனால், தோள் தட்டுவதற்கு முன், இப்படியும் ஒரு பக்திப் பாடல் தமிழில் இருக்கிறது என்று அறிந்து கொள்வது நல்லது.

பாட்டைத் திரும்பவும் ஒருமுறை படித்துப் பார்ப்போமா?

"முடிச்சோதியாய் உனது முகச்சோதி மலர்ந்ததுவோ
அடிச்சோதி நீநின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ
படிச்சோதி ஆடையொடும் பல்கலனாய் நின் பைம்பொன்
கடிச்சோதி கலந்ததுவோ, திருமாலே, கட்டுரையே!"

- 1966-இல் திருச்சி வானொலியில் பேசியது.

**7 சிரிக்கும் திறம்**

பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குள்ளே போய்க் கவனித்தால், ஒரு சுவையான உண்மை துலங்கும். அங்குள்ள நோயாளிகள் பலர் நம்மைப் பார்த்துப் "பைத்தியமே" என்று அழைப்பார்கள். நாம் பைத்தியமில்லை என்பது நமக்குத் தெரியும். ஆனால், அந்தப் பைத்தியக்காரர்களோ நாம் எல்லோரும் பைத்தியம் பிடித்தவர்கள் என்று உறுதியாக நம்புகிறார்கள். அவர்களுடைய உறுதிப்பாட்டை எளிதில் அசைக்க முடியாது. எப்போது அந்த உறுதிப்பாடு தளர்கிறதோ, எப்போது அந்த நோயாளிகள் தமக்கு உள்ளத்தில் நோய் பிடித்திருக்கிறது என்று எண்ணத் தொடங்குகிறார்களோ, அப்போதுதான் அவர்களுடைய நோய் குணப்பட்டு வருகிறது என்று வைத்தியர்கள் சொல்லுவார்கள்.

தலைமயிரைப் பிய்த்துக்கொண்டும், கட்டியிருக்கும் வேட்டியைக் கிழித்தெறிந்து கொண்டுமிருக்கிற பைத்தியக்காரன், தலையலங்காரம் செய்து, சீருடையணிந்து, காரண காரியத் தொடர்போடு சிந்திக்கும் வல்லமை பெற்ற நம்மைப் பார்த்து, "அட, பைத்தியமே" என்று அழைக்கும்போது, நமக்குச் சிரிப்பு வருகிறது. பைத்தியம் நமக்கில்லை, அவனுக்குத்தான் என்ற தெளிவிலிருந்து வருகிறது நம்முடைய சிரிப்பு.

நாம் பைத்தியக்காரர்கள் இல்லை என்பதை அறிந்து பெருமைப்பட வேண்டியதுதான். ஆனாலும், நம்முடைய சிந்தை நோயற்றது என்று சொல்ல முடியாது. அதற்குள்ளே எத்தனையோ திருகல்கள், கோணல்கள்! பித்தமயக்கத்தால் ஒன்றை மற்றொன்றாக நாம் காண்கிறோம், ஆணவ மயக்கத்தால் எல்லாம் நம்முடைய செயல் என்று நாம் நம்புகிறோம், உறுதியாகவே நம்புகிறோம். அந்த ஆஸ்பத்திரிக்குள்ளே பார்த்தோமே, அவர்களுடைய உறுதிப்பாடு நமக்கும் இருக்கிறது. இந்த உறுதிப்பாடு எப்போது தளர்கிறதோ நமக்கும் பித்த மயக்கம் இருக்கிறது என்று எப்போது நாம் உணரத் தொடங்குகிறோமோ, அப்போதுதான் நமக்கு நோய் குணப்பட்டு வருகிறது என்று ஞான வைத்தியர்கள் கருதுகிறார்கள்.

பித்தத்திலிருந்து தெளிந்தவர்கள் ஞானிகள்; எல்லாம் இறைவன் செயல் என்பதை ஸ்வானுபவத்தில் உணர்ந்தவர்கள் அவர்கள். ஆனால், நாம் அவர்களைப் பார்த்து, "நீங்கள் பித்தர்கள்" என்று சொல்லுகிறோம். பித்தம் இருப்பது நம்மிடத்தில்தான் என்று தெளிந்தவர்கள் ஞானிகள். அந்தத் தெளிவிலிருந்து பிறக்கிறது அவர்களது தெய்வீகச் சிரிப்பு.

மாணிக்கவாசகர் சிறந்த ஞானி; பித்த மயக்கத்திலிருந்து விடுபட்டவர்; இறைவனுடைய திருமேனியைக் கண்டு பேரானந்தம் அடைந்தவர். ஆனந்தக் களிப்பிலே அவர் தன்னுடைய அனுபவங்களை உலகத்தாருக்குச் சொல்லிக்கொண்டிருந்தார். என்ன சொன்னார்?

"இறைவன் எனக்குக் காட்சி கொடுக்கிறான். பாறாங்கல் போன்ற என் இதயத்தைப் பிசைந்து உருக்கிவிட்டான். "இதைச் செய், அதைச் செய்' என்று கட்டளையிடுகிறான். அவனுக்குப் பணி செய்வதிலே எவ்வளவு ஆனந்தம் இருக்கிறது!" என்றெல்லாம் சொல்லி வந்தார்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த அண்டை வீட்டுக்காரர்கள் அவரைப் பார்த்துச் சிரித்தார்கள். அவர் வாக்குமூலத்தை அவர்கள் நம்பவில்லை. "விஷ்ணுவுக்கும் பிரம்மாவுக்குமே தென்படாத கடவுள் இந்த மாணிக்கவாசகனிடத்திலே வந்து பேசுகிறாராம். இவன் உள்ளத்தை உருக்கிவிட்டாராம், இவனைப் பணி கொள்ளுகிறாராம், பேஷ் பேஷ், பித்தம் தலைக்கேறிவிட்டது இவனுக்கு" என்று, ஊரார் சிரிக்கத் தொடங்கினார்கள்.

இந்தச் சிரிப்பை நினைத்து நினைத்து அனுபவிக்கிறார் மாணிக்கவாசகர். பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலே உள்ளவன் நம்மைப் பார்த்து, "பைத்தியம்' என்று சொல்லிச் சிரித்தானே,

அதை எப்படி நாம் அனுபவித்தோம், அதைப் போலவே நம்முடைய அசட்டுச் சிரிப்பைப் பார்த்து அனுபவிக்கிறார் மாணிக்கவாசகர்.

“அரிக்கும் பிரமற்கும்
அல்லாத தேவர்கட்கும்
தெரிக்கும் படித்தன்றி
நின்றசிவம் வந்துநம்மை
உருக்கும் பணிகொள்ளும்
என்பதுகேட்டு உலகமெல்லாம்
சிரிக்கும் திறம்பாடித்
தெள்ளேணம் கொட்டாமோ.”

பித்தர்கள் சூழ்ந்த இவ்வுலகத்திலே, நமக்குப் பித்தம் தெளியும்படி செய்துவிட்டானே அந்த அருளாளன் என்று தெரிந்ததும், “அடி, முழக்கு, தெள்ளேணம் கொட்டு” என்று மாணிக்கவாசகர் ஆர்ப்பரிக்கிறார். நன்றியும், பக்தியும், ஹாஸ்யமும் கலந்த பாடல் இது. அபூர்வமான பாடல்.

- 1969-இல் புதுவை வானொலியில் பேசியது.

## 8 வாழும் நெறி

லியோ டால்ஸ்டாஸ் ( Leo Tolstoi) என்ற ஞானி ஒருவர் ரஷ்யாவில் வாழ்ந்தார். அவர் காலத்திலே ரஷ்யாவில் பிச்சைக்காரர்களுடைய தொல்லை அதிகம். மாஸ்கோ நகரத்தின் 24-ஆவது சாலையிலே அவர் நடந்து சென்றுகொண்டிருந்தபோது, ஒரு பிச்சைக்காரன் அவரை வழிமறித்து, அவர் சட்டையைப் பிடித்திழுத்து, "ஐயா, பிச்சை" என்று கேட்டான். டால்ஸ்டாய் இளக்கமான மனமுடையவர்; பரிவு நிறைந்தவர். பிச்சை கொடுக்க வேண்டும் என்ற ஆத்திரத்தில் தன் நீண்ட கையைச் சட்டைப் பைக்குள் விட்டுத் துழாவித் துழாவிப் பார்த்தார். பைக்குள்ளே ஒரு காசுகூட இல்லை. மன வேதனையோடு பிச்சைக்காரனைப் பார்த்து, "பையிலே பணமில்லையே, தம்பி பணமில்லையே" என்று சொன்னார். இதைக் கேட்டவுடன் பசியால் வதங்கிப்போயிருந்த பிச்சைக்காரன் முகத்திலே என்றுமில்லாத ஒரு ஒளி பிறந்தது. "பிச்சைக்காசு இல்லையென்பதற்காக நீங்கள் வருந்த வேண்டாம். பிச்சை கொடுப்பதைக் காட்டிலும் பெரிய உதவியொன்றை நீங்கள் எனக்குச் செய்துவிட்டீர்கள். ஐயா, 'தம்பி' என்றல்லவா என்னை அழைத்துவிட்டீர்கள்! அது போதும்" என்று சொன்னான் பிச்சைக்காரன். கொஞ்சமும் தன்னை மதிக்காத இவ்வுலகத்திலே, தன்னையும் ஒரு உருப்படியாக மதித்து, தம்பியென்று உறவு கொண்டாடிய டால்ஸ்டாயிடத்திலே பிச்சைக்காரனுக்கு அளவுகடந்த மதிப்பு ஏற்பட்டுவிட்டது. கேவலம், பணத்தினால் கிட்டாத மகிழ்ச்சியும், ஊக்கமும் பரிவினால் கிட்டிவிடுகிறது.

உலகத்திலுள்ள துன்பங்கள் பலவற்றிற்கும் காரணமாக இருப்பது பரிவின்மைதான். அந்தப் பரிவைப் பெறுவது எப்படி? நாள்தோறும் கொஞ்ச நேரமாவது நம்மைப் பற்றிய சிந்தனையினின்றும் நம்மை விடுவித்துக்கொண்டு, கூடுவிட்டுக் கூடுபாய்ந்து, மற்றவர்களுடைய இதயத்தில் அமர்ந்து, அவர்களுடைய கண்கள் வழியாக உலகத்தைப் பார்க்க முயலுவோமேயானால், டால்ஸ்டாய்க்கு ஏற்பட்ட பரிவுணர்ச்சி நமக்கும் கைவரும்.

நியூயார்க்(Newyork) நகரத்திலேயிருந்த உள மருத்துவ நிபுணரிடத்திலே (Psychiatrist) ஆலோசனை கேட்பதற்காக வந்தாள் ஒரு பெண். "நான் ஒரு தொழிற்சாலையின் தலைமை அலுவலரிடத்திலே சுருக்கெழுத்தாளராக வேலை பார்க்கிறேன். என்னுடைய அதிகாரி ஒரு சிடுமூஞ்சி. எனக்கு அவனுடைய கோபதாபங்களையெல்லாம் தாங்க முடியவில்லை. அவனுடைய கொடுங்கோன்மையை நினைத்தால் இரவில் தூக்கம் வருவதில்லை. வேலையை விட்டுவிட வேண்டும் என்ற தீர்மானத்துக்கு வந்திருக்கிறேன். அதற்கு முன் உங்கள் ஆலோசனையையும் கேட்கலாமே என்று வந்தேன். என்ன சொல்லுகிறீர்கள்?" என்று பரபரப்போடு கேட்டாள். வைத்தியர் சொன்னார்: "அம்மா, நான் ஒரு யுக்தி சொல்லுகிறேன். அதன்படி மூன்று மாதம் நடந்துவிட்டு மறுபடியும் என்னிடம் வா. பிறகு ராஜிநாமாவைப் பற்றிச் சிந்திப்போம்" என்றார்.

அவர் சொன்ன யுக்தி இதுதான்: "சிடுமூஞ்சியிடத்திலும் சில நற்குணங்கள் பதுங்கிக் கொண்டிருக்கும். அவற்றைத் தேடிக் கண்டுபிடித்து, வாயார அவற்றைப் பாராட்டு. ஒரு நாளைக்கு ஒரு பாராட்டு என்று வைத்துக்கொள்" என்று சொல்லியனுப்பினார்.

இந்த ஆலோசனையை மேற்கொள்ளத் தலைப்பட்டாள் சுருக்கெழுத்துப் பெண். மறுநாள் சுருக்கெழுத்து எழுதுவதற்காக எஜமானனிடம் போனாள். அவன் அணிந்திருந்த சட்டை அழகாக இருந்தது. அதை உள்ளன்போடு பாராட்டினாள். அடுத்த நாள் அவனுடைய ஆங்கில எழுத்து நடையின் நுணுக்கத்தை உணர்ந்து பாராட்டினாள். இப்படியாக, பாராட்டு ஏற ஏற, எஜமானனுடைய சிடுமூஞ்சித்தனம் குறைந்துகொண்டே வந்தது. கதையை வளர்ப்பானேன்! சிடுமூஞ்சியாயிருந்தவன் காதலனாகிவிட்டான். மூன்று மாதங்கள் கழித்து மருத்துவரைப் பார்க்கச் சென்றாள் பெண். "என்னம்மா, ராஜிநாமா பண்ண வேண்டியதுதானே?" என்று கேட்டார் அவர். "ஐயோ, ராஜிநாமாவா? என்னை அவர் நாளைக்குத் திருமணம் செய்துகொள்ளப் போகிறார்.

பாருங்கள் இதை” என்று சொல்லி அவர் பரிசாகக் கொடுத்திருந்த வைர மோதிரத்தைக் காட்டினாள். பரிவினால் வந்த விளைவை அது டால் அடித்துக் காட்டிக்கொண்டிருந்தது.

நம்மைச் சுற்றியுள்ளவர்களிடத்தில், நம்மிடமிருப்பது போலவே, பல குற்றங்களிருக்கலாம். அவற்றைக் கொஞ்ச நேரமாவது மறந்துவிட்டு, அவர்களிடமிருக்கும் ஒரு துளி நல்ல குணத்தை முயன்று கண்டுபிடித்து, நாம் பாராட்டக் கற்றுக்கொள்ள வேண்டும். இந்தப் பழக்கத்தைக் கைக்கொண்டால், நம்மிடமிருக்கும் பொறாமை நம்மைவிட்டு அகலும்; இங்கிதம் பெருகும்; சமுதாயத்தில் மங்களம் பொங்கும்.

- 1971-இல் சென்னை வானொலியில் பேசியது.

**9 மருகலான் அடி**

மனித உள்ளத்திலுள்ள முண்டு முடிச்சுகளையெல்லாம் துருவித்துருவி ஆராய்ந்தார் டாக்டர் யுங் (Jung) என்ற பேரறிஞர். 1961-இல் மறைந்தவர் அவர். மறைவதற்கு முன்னால், மனித வாழ்க்கையில் தான் கண்ட தீர்ந்த முடிவுகளைப் பற்றி அவர் சொன்னார்: “இப்பொழுது எனக்குத் தெளிவாக ஒரு உண்மை துலங்கிவிட்டது. அது என்னவென்றால், மனித சமுதாயத்துக்கு நேரிடப்போகும் அபாயம், மனிதனுக்குப் புறத்திலிருந்து வருவதல்ல, மனிதனுடைய அகத்திலிருந்து வருவதுதான். மனித மனத்திலுள்ள திருகுமுறுகலும், கோணலுமே மனித வாழ்வுக்கு உலை வைக்க முனைகின்றன. இந்தப் பூமியில் குறிப்பிட்ட சிலர் நிதானத்தை இழந்தார்களேயானால், ஒரு ஹைட்ரஜன் குண்டு வெடித்து உலகத்தையே பாழாக்கி விடும்” என்றார். “இந்தக் கோணலையெல்லாம் நிமிர்ப்பதற்கு ஒரே ஒரு வழி இருக்கிறது. இந்தியர்களில் சிலர் பயின்றுவரும் யோகப் பயிற்சிதான் இந்தக் கோணலையெல்லாம் நிமிர்க்கும் வல்லமை படைத்தது” என்றும் டாக்டர் யுங் சொல்லியிருக்கிறார்.

“யோகம்’ என்றால் ஒன்றித்து நிற்பது என்று பொருள். மன ஒருமையில்லாதவர்கள் செயலில் ஈடுபடாமலிருக்கும் வரையில், மற்றவர்களுக்கு நல்லது. ஆனால், அவர்கள் செயற்படத் தொடங்கிவிட்டாலோ, அதனால் விளைவது கலப்பற்ற தீமைதான்; கோணலான சிந்தையிலிருந்து கோணலான செயல்தானே பிறக்கும்.

ஆகவே, செயலில் ஈடுபடுவதற்கு முன் நம் உள்ளத்தை நாம் நீட்டி நிமிர்த்து, பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். பருப்பொருளாகிய உடலிலே அழுக்கிருந்தால், பருப்பொருளாகிய நீரால் கழுவி அதை எடுத்துவிடலாம். நுண்பொருளாகிய மனசிலிருக்கும் அழுக்கைப் பருப்பொருளால் கழுவ முடியாது. மனசை மனசால்தான் கழுவலாம். “செல்லுமளவும் செலுத்துமின் சிந்தையை” என்று சொல்லுகிறார் திருமூலர். தியானத்திலிருந்து பழகினால், ஆணவச் சிறையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விடுபடலாம். நம்மை மறந்து, நமக்கு அப்பாலிருக்கும் ஒரு பொருளை ஆசையோடு சிந்தித்து வணங்கினால், மன ஒருமை ஏற்படும். எல்லோரையும் எல்லாவற்றையும் ஒன்றாகக் காணும் காட்சி நமக்குக் கிட்டும். இதைத்தான் “தவம்’ என்று சொல்லுகிறார்கள். இந்தத் தவத்தால் நம் பேதைமை தீரும்; திருகலாகிய நம் சிந்தை திருந்தும்; வாரி வாரி ஆனந்தத்தைப் பருகலாம்.

திருமருகல் என்ற ஊரில் கோயில் கொண்டுள்ள இறைவனைத் தியானம் செய்தால் இவ்வளவும் கிடைக்கும் என்று அப்பர் அடிகள் உறுதி கூறுகிறார். அல்லாவை நினைத்தாலும், ஜெஹோவை நினைத்தாலும், புத்தரை, விஷ்ணுவை நினைத்தாலும் இப்பலன்களைப் பெறலாம்.

“பெருகலாம் தவம்
    பேதைமை தீர்கலாம்
திருகலாகிய சிந்தை
    திருத்தலாம்
பருகலாம் பரம்
    ஆயதோர் ஆனந்தம்
மருகலான் அடி
    வாழ்த்தி வணங்கவே”

என்பது அப்பர் தேவாரம். இவ்வாறு பக்குவப்பட்ட மனிதன் சமுதாயப் பணியில் ஈடுபடுவானேயானால், அச்சமும் வெறுப்பும் நீங்கும். அகமும் புறமும் இணையும். அன்பும் இன்பமும் பெருகும்.

*1971-இல் வானொலியில் பேசியது.

**10 விளக்கை விளக்கும் விளக்கு**

மனித உணர்ச்சிகளை அப்படி அப்படியே எடுத்துச் சொல்லுவதற்கு மனித மொழிக்குப் போதிய ஆற்றல் ஏற்படவில்லை. கேவலம் வயிற்று வலியை எடுத்துக் கொள்வோம். அதன் பம்மல்கள், பாய்ச்சல்கள், துள்ளல்களையெல்லாம் சொல்லாலே விளக்க முடிவதில்லை. நல்ல வேளையாக டாக்டருக்கும் நம்முடைய அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. அதனால்தான், "வயிற்று வலி" என்று சொன்னவுடனே, அவருக்கு நம்முடைய நோய்க்கூறு விளங்கிவிடுகிறது. தகுந்த மருந்தைக் கொடுத்து, எப்படியோ குணப்படுத்திவிடுகிறார்.

காலத்துக்கும், இடத்துக்கும் கட்டுப்பட்ட வயிற்று வலி அனுபவத்தையே சொல்லினால் நமக்கு வருணிக்க முடியவில்லையென்றால், காலத்தையும் இடத்தையும் கடந்து நிற்கும் அனுபவங்களைப்பற்றி எப்படிச் சொல்லுவது?

அனுபவப் பாதையிலே சென்ற நம் ஞானிகள் இந்தப் பிரச்னையை எவ்வாறு சமாளித்திருக்கிறார்கள் என்று பார்ப்போம்.

அவர்கள் செய்த முதற்காரியம் என்னவென்றால், இளைச்சுப்போன உரைநடையை ஒதுக்கிவிட்டு, உணர்ச்சி ததும்பும் கவிச்சொல்லிலே பேசினார்கள். மேளதாளங்களோடு கவி பேசும் போது, வெற்றுச் சொல்லுக்கில்லாத திறமையும், வேகமும் அதற்கு ஏற்பட்டுவிடுகிறது.

"பேச்சுமூச்சற்ற பேரின்ப வெள்ளமுற்று
நீச்சுநிலை காணாமல் நிற்கும்நாள் எந்நாளோ?"

என்று சொல்லி ஏங்குகிறார் தாயுமானவர். வெள்ளத்தைப் பார்த்திருக்கிறோம்; அதில் நழுவி விழுந்து நீச்சு நிலை காணாமல் தத்தளித்திருக்கிறோம்; பேச்சு மூச்சில்லாமல் திக்குமுக்காடி இருக்கிறோம். இந்த அனுபவத்தைக் கொண்டு பேசரிய பேரின்ப அனுபவத்தை ஜாடையாகக் காட்டிவிடுகிறார் கவிஞர்.

"பேச்சுமூச்சற்ற பேரின்ப வெள்ளமுற்று
நீச்சுநிலை காணாமல் நிற்கும்நாள் எந்நாளோ?"

சில ரகசியங்களை வெட்ட வெளிச்சமாகச் சொல்லிவிட்டால், மக்கள் அவற்றை மதிக்காமல் போய் விடுவார்களோ என்ற அச்சம் நம் ஞானிகளுக்கு இருந்திருக்கிறது. ஆகவேதான், உண்மைகளைப் பாதி மறைத்தும் பாதி மறைக்காமலும், குறியீடுகள் மூலம் சுட்டிக்காட்டுகிறார்கள். அவர்கள் சொல்லினால் போடும் முடிச்சுகளை, குருவின் உதவியில்லாமல் அவிழ்க்க முடியாது.

உதாரணமாக, ஞானப் பயிற்சியொன்றை சிவவாக்கியர் எப்படி விவரிக்கிறார் என்று பார்ப்போம்.

"மூலமாங் குளத்திலே முளைத்தெழுந்த கோரையை
காலமே எழுந்திருந்து நாலுகட் டறுப்பீரேல்
பாலனாகி வாழலாம் பரப்பிரம்ம மாகலாம்
ஆலமுண்ட கண்டர்பாதம் அம்மைபாதம் உண்மையே"

மிகுந்த நிச்சயத்தோடு அம்மையப்பர் பாதத்தில் அடித்து சத்தியம் பண்ணிக்கொடுக்கிறார் சிவவாக்கியர். ஆனால், மூலமாகிய குளம் எங்கே இந்த உடலில் இருக்கிறது, குளத்தில் முளைத்தெழுந்த கோரை எது, அதில் நாலு கட்டு அறுப்பது எப்படி, அறுத்தால் எவ்வாறு

பரப்பிரம்மம் ஆகலாம் என்பதெல்லாம், கேவலம் புலமையினால் அறியக்கூடிய காரியங்கள் அல்ல.

இதைப் போலவே, பாம்பாட்டிச் சித்தர் சொல்லினால் செய்கிற நெசவும், நம்மைத் திணறடிக்கிறது.

"வடக்கும் கிழக்குமாய் நூலிழைப்போம்
மற்றுஞ் சுழலிலே பாவு பூட்டுவோம்
நடக்கும் வழியிலே யுண்டை சேர்ப்போம்
நடவா வழியிலே புடைவை நெய்வோம்"

என்று பெருமிதத்தோடு அவர் பாடுகிறார். "நடவா வழியிலே எப்படிப் புடைவை நெய்வது?" என்று நாம் புருவத்தை நெரித்துக்கொண்டிருக்கும்போது, இடைக்காட்டுச் சித்தர்,

"வெட்ட வெளிக்குள்ளே பால் கற"

என்று ஒரு போடு போடுகிறார். சித்தர்கள்தான் இப்படியெல்லாம் சொல் மரபைச் சிதறடிக்கிறார்கள், சொல்லைத் தாறுமாறாய்ப் பயன்படுத்துகிறார்கள் என்று நினைப்பது தவறு. ஞானப்பாதையில் நடந்த கவிஞர்கள் எல்லோருமே, திருமூலரிலிருந்து ராமலிங்க அடிகள் வரை, இந்தப் பொல்லாத பிரவர்த்தியில் ஈடுபடுகிறார்கள்.

"ஆறுதெருவில் அகப்பட்ட சந்தியில்,
சாறுபடுவன நான்கு பனையுள;
ஏறற்கரியதோர் ஏணியிட்டு, அப்பனை
ஏறலுற்றேன்; கடல் ஏழுங்கண்டேனே!"

என்று முழங்குகிறார் திருமூலர். அவர் ஏறிய ஏணி மேல் ஏறிக் கடல் ஏழையும் அதாவது ஏழு நிலைகளையும் கண்டிருக்கிறார் ராமலிங்க அடிகளும். ஆனால், தான் கண்ட காட்சியை அடிகள் விவரிக்கும் முறை வேறு.

"சோதி மலையொன்று தோன்றிற்று, அதிலொரு
வீதி யுண்டாச்சுதடி -- அம்மா
வீதி யுண்டாச்சுதடி"

அந்த வீதியில் செல்லும்போது வீதியின் நடுவே, ஒரு மேடையைக் கண்டார். அந்த மேடை மேலேறினால், ஒரு கூடம்!

"கூடத்தை நாட, அக்கூடம்மேல் ஏழ்நிலை
மாடமிருந்ததடி -- அம்மா
மாடமிருந்ததடி."

ஒவ்வொரு நிலையிலும் ஒரு அற்புதக் காட்சியைக் கண்டார்; கருநீலம் செய்ய பவளமாயிற்று; மரகதப் பச்சை செம்மாணிக்கமாயிற்று; பெருமுத்துவச்சிரம் பேர் மணியாயிற்று; பவளத்திரள் வெண்மணியாயிற்று; பன்மணி பொன்மணியாகவும், பகர்மணி படிகமாகவும் ஆயிற்று என்று சொல்லிக் கூத்தாடுகிறார் ராமலிங்க சுவாமிகள். அவருடைய அனுபவத்திலே அவருக்கு எவ்வளவு நிச்சயமும், தெளிவும் இருக்கிறது என்பதற்கு அவருடைய பாடலே சாட்சி. ஆனால், பாடலைப் படிப்பவர்களுக்குப் பொருள் எளிதாக விளங்குவதில்லை. "புலன் அறிவே அறிவு" என்றிருக்கும் நமக்கு, புலனுக்கு எட்டாத அனுபவங்களை ஞானிகள் எடுத்து விளக்க வேண்டியிருக்கிறது; அதுவும் நம்முடைய பொய்மை மிகுந்த சொல்லிலும், மொழியிலும் விளக்க வேண்டியிருக்கிறது; நம்முடைய மொழியோ மாசு நிறைந்தது; ஒன்றாகக்

காணும் ஆற்றல் அற்றது, பேதம் நிறைந்தது; நான் என்றும், நீ என்றும், அவன் என்றும் சொல்லிச் சொல்லி பேதத்தைப் பெருக்கி மயக்கத்தை வளர்ப்பது. பேதமற்ற காட்சியைப் பேதம் நிறைந்த சொற்களில் எப்படிச் சொல்லுவது? சொல்லைத் தறித்து, முறித்துத் தலைகீழாகத் தொங்கவிட்டால், நமக்கு ஒரு அதிர்ச்சி ஏற்படுமல்லவா? அந்த அதிர்ச்சியிலே நம்முடைய புலன்மரபு கெட்டு, ஆணவம் தடுமாறி உண்மைக் காட்சியைக்கூட ஒருவகையாக நாம் உணர்ந்துவிடலாம் என்று ஞானிகள் எதிர்பார்க்கிறார்கள். சக்கிமுக்கிக் கல்லை உரசி, தீ உண்டாக்குவது போல, சொல்லோடு சொல்லை எப்படித் திருமூலர் உரசுகிறார் என்று பாருங்கள்.

> "எழுதாத புத்தகத் தேட்டின் பொருளைத்
> தெருளாத கன்னி தெளிந்திருந்தோத
> மலராத மொட்டின் மணத்தின் மதுவைப்
> பிறவாத வண்டு மணமுண்ட வாறே"

என்பது திருமந்திரம். எழுதாத புத்தகத்துக்கு ஏடேது, பொருளேது? தெருளாத, அதாவது, தெளிவில்லாத கன்னி எப்படித் தெளிந்திருந்து ஓதினாள்? மலராத மொட்டுக்கு மணமேது, மதுவேது? பிறவாத வண்டு, மணத்தையாவது, உண்பதாவது! இப்படி இடக்குத்தனமாகச் சொல்லையாண்ட தமிழ்க் கவிஞர்கள் வேறொருவருமே இல்லை -- திருமூலரைத் தவிர. சொல்லதிர, நம் மனமதிர இப்படியெல்லாம் பேசிவிட்டு, "நல்ல குருவை நாடிக் கேள். பொருள் விளங்கிவிடும்" என்று சொல்லி நமக்கு ஆறுதல் வேறு கொடுக்கிறார் திருமூலர்.

இப்படி அவர் உபதேசம் செய்யும்போதே, சொல்லை வைத்து ஒரு விளையாட்டு விளையாடுகிறார். "பேருண்மை என்ற விளக்கு இருக்கிறதே, அது கோடி சூரியப் பிரகாசத்தோடு ஒளி வீசிக்கொண்டு நிற்கிறது. ஆனால், அது உங்கள் குருட்டுக் கண்ணுக்கு புலப்படுவதில்லை. உங்களுக்கு அந்த உண்மையைக் காட்டுவதற்காகவே தீவட்டி வைத்துக்கொண்டு காத்துக்கொண்டிருக்கிறார்கள் குருமார்கள். அவர்கள் விளக்கினால், விளக்குக்குடையவனாகிய இறைவன் உங்கள் கண்ணுக்கும் காட்சியளிப்பான்" என்று சொல்லுகிறார். ஆனால், இப்படியா சுவையில்லாமல் அவர் சொல்லுவார்!

> "விளக்கை விளக்கும் விளக்குடையவர்கள்
> விளக்கில், விளங்கும் விளக்கவர்தாமே"

என்று பாடுகிறார்.

ஆசான் மூலமாக அறியவேண்டிய இரகசியங்களுக்குத்தான் முடாக்குப் போடுவார்கள் நம் ஞானிகள். ஆனால், ஆன்ம உலகத்தில் அவர்கள் கண்ட அடிப்படை உண்மைகளை, முடிந்த முடிபுகளை, சித்தாந்தத்தை மனந்திறந்து வாய்விட்டுப் பேசுகிறார்கள்.

மனிதனுக்குத் துன்பத்தைத் தருவது அவனுடைய ஆணவமே -- "நான்" என்ற மயக்கமே. அந்த மயக்கத்திலிருந்து விடுதலை அடைந்தவுடனேயே அவனுக்கு ஆனந்தம் கைகூடிவிடுகிறது.

பரம்பொருளானது பேரண்டம் முழுவதுமே முட்டித் ததும்பிக்கொண்டு நிற்கிறது; ஒவ்வொரு அணுவுக்குள்ளும் தோய்ந்து நிற்கிறது, அதைவிட்டு நீங்கித் தோயாமலும் நிற்கிறது. அந்தப் பரவஸ்துக்குள்ளே பேதம் என்பதே கிடையாது. ஒரே

தன்மைத்தானது அது. இந்த வஸ்துவுக்குள்ளே "ஆணவம்' என்ற விதை எப்படியோ விழுந்தது. அது முளைவிட்டு, வளர்ந்து, கப்புங்கவருமாகச் செழித்தோங்கி அந்தப் பரவஸ்துவையே மறைத்துக்கொண்டு நிற்கிறது. இந்த வேடிக்கையை உணர்பவனே ஞானி. உணர்ந்த மாத்திரத்தில், அவனுடைய ஆணவம், ஆங்காரம், எல்லாம் மடிந்துவிடுகிறது. ஆணவத்திலிருக்கும்போது எட்டாக் கனியாக இருந்த பேரின்பம் அவனுக்கு எட்டிவிடுகிறது. இந்த உண்மையைப் பட்டினத்தார் உணர்ந்து அனுபவித்துப் பாடுகிறார்:

"ஓங்கார மாய்நின்ற வஸ்து விலேயொரு வித்துவந்து
பாங்காய் முளைத்த பயனறிந்தாற் பதினாலுலகும்
நீங்காமல் நீங்கி, நிறையா நிறைந்து நிறையுருவாய்
ஆங்கார மானவர்க் கெட்டாக் கனிவந் தமர்ந்திடுமே"

சித்தாந்தப் பாதையிலே சென்ற ஞானிகள், தம்முடைய அனுபவங்களை என்றும் இறவாத பாடல்களிலே பொதிந்து நமக்குத் தந்துவிட்டுப் போயிருக்கிறார்கள். உணர்வுடையவர்கள் படித்துப் பயன் பெறலாம்.

*1962-இல் எழுதிய கட்டுரை

**11 தமிழ் செய்த திருமூலன்**

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்தவர் திருமூலர் என்று சொல்லுகிறார்கள். குறைந்தபட்சம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாவது அவர் இருந்திருக்க வேண்டும். ஆனால், அவர் சிருஷ்டி உத்ஸாகத்தோடும், கவிதா காம்பீர்யத்தோடும் பாடியிருக்கும் உண்மைகள் ஆறாத புதுமையோடு, இன்றும் நமது இதயத்தைத் தொட்டுப் பேசுகின்றன; இதயக் கல்லைப் பிசைந்து கனியாக்கும் அமரகீதங்களே அவரது பாட்டுகள்.

மனித வாழ்க்கையின் மர்மங்களையும், சிருஷ்டியின் ரகஸ்யங்களையும் அறியாத நமக்கு, ஏதோ கண்ணைக் கட்டிக் காட்டிலே விட்ட மாதிரியல்லவா இருக்கிறது? எங்கிருந்து வந்தோம், எதற்காக வந்தோம், எங்கே போகிறோம் என்றே புரியவில்லை. மலை மலையாக வருகிறது துன்பமும், கஷ்டமும். அதையெல்லாம் சமாளிக்க முடியாமல் அலமந்து அலறுகிறோம். பாழும் வாழ்க்கையிலே புளிப்பும், கசப்பும், வெறுப்பும் தட்டிவிடுகிறது. மனித சரித்திரம் ஓர் அர்த்தமற்ற பொம்மலாட்டம் போல, காரண காரியத் தொடர்பற்ற பைத்தியக்காரக் கனவைப் போல, தாளமில்லாத கூத்தைப் போலக் காட்சியளிக்கிறது.

ஆனால், திருமூலருக்கோ நம்மை ஆட்கொண்ட மருட்சியும், மயக்கமும் லவலேசமுங்கூடக் கிடையாது. நம்மைத் திணறடிக்கிற திரையிருக்கிறதே, அதை எப்படியோ கிழித்தெறிந்துவிட்டு, அதற்கு அப்பாலுக்கப்பாலாயிருக்கும் மூடு மர்மத்தை அவர் எட்டிப் பார்த்துவிட்டார். காரண காரியத் தொடர்பு பளிச்சென்று தெளிவாகிவிட்டது. வாழ்க்கையை விளைவித்த வித்து எது என்பதையறிந்தார். இன்ப--துன்ப வளையத்தை நொறுக்கித் தகர்த்து, காலச் சக்கரத்தின் சுழற்சியை மீறி, விடுதலை பெற்று விச்வ வெளியை அடையும் மார்க்கத்தைக் கண்டார். பெருமறைகள் கூச்சத்தால் பேசாது மறைத்த உண்மைகளை விளம்பரப்படுத்தினார். இசை வடிவாயிருக்கும் ஆனந்தக் கூத்தனது பண்புகளை தெய்வீகக் கவிதையிலே வடித்து உருவாக்கினார். பாடவல்லார் நெறியைப் பாடியும், ஆடவல்லார் நெறியை அடியுந்தானே காட்ட முடியும்? இந்த ஆடல் பாடலிலே உதயமானதுதான் திருமந்திரம் என்ற நூல்.

சாதாரணமாக, உலகத்திலே சௌந்தர்ய உணர்ச்சி மங்கி குரூரமும், அலங்கோலமும் அதிகரிக்கும்போது, கடவுள் ஒரு கவிஞனைத் தன் தூதனாக அனுப்புகிறார், அழகின் தத்துவத்தை நிலைநாட்டுவதற்காக; அன்பு நெறி மறைந்து மனித சமுதாயத்தில் மிருகபுத்தி தாண்டவமாடும்போது, ஒரு புத்தனைத் தன் தூதனாக அனுப்புகிறார், காருண்யத்தை நிலைநாட்டுவதற்காக; சமய உணர்ச்சி வறண்டு, கடவுள் ஞானமற்று, உலகம் அந்தகாரத்தில் அமிழ்ந்து கிடந்தபோது, இறைவன் திருமூலரைத் தன் தூதனாக அனுப்பிச் செம்மை நெறியைப் பரப்பினார் என்றுதான் சொல்ல வேண்டும். தான் செய்யவந்த பணி இன்னது என்பதைத் திருமூலரே மிகுந்த நிச்சயத்தோடும், துணிச்சலோடும் சொல்லுகிறார்:

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்,
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே."

"இவ்வளவு ஞானமும், தெளிவும், நுட்பமும் எனக்குக் கொடுத்திருக்கிறானே இறைவன்! அதற்கு என்ன காரணமிருக்க முடியும்? எல்லையற்ற டம்பப் பிரியனாகிய அவன், தனது கல்யாண குணங்களையெல்லாம் நல்ல, இனிய தமிழிலே இவன் பாட வேண்டும் என்ற நோக்கத்தோடுதானே என்னைத் தேர்ந்துவிட்டிருக்கிறான்? ஆகையால் பாடுகிறேன்' என்று கச்சை கட்டிக்கொண்டு பாட ஆரம்பிக்கிறார்.

பாடின பாட்டு ஒன்றிரண்டல்ல, மூவாயிரம் பாடல்கள். ஆண்டுக்கு ஒரு பாடலாக, மூவாயிரம் ஆண்டுகள் இருந்து, மூவாயிரம் பாடல்கள் பாடினார் என்பது வரலாறு. ஒவ்வொரு பாட்டும் அவ்வளவு அருமையாக இருந்தபடியால் ஒரு பாட்டு உருவாகி வெளிவருவதற்கு ஒரு

வருஷமாவது பிடித்திருக்கும் என்று எண்ணி நமது முன்னோர்கள் இப்படியெல்லாம் கதை கட்டி அவரது நூலை ரஸித்து உபசரித்தார்கள்.

கொஞ்ச காலமாகத்தான் தமிழ் நாட்டார் திருமூலரை அடியோடு மறக்க ஆரம்பித்தார்கள். அவர் பாடல்களிலுள்ள முடிச்சுகளை அவிழ்ப்பது கஷ்ட சாத்தியமாகி விட்டது. அவர் அடைத்து வைத்த பொக்கிஷத்தைத் திறப்பதற்கு திறவுகோலைத் தேடவேண்டி இருக்கிறது. அவரது பரிபாஷையில் பழக்கமுள்ள தமிழனே இல்லையோவென்ற ஐயம் ஏற்பட்டுவிட்டது. இருட்டறைக்குள்ளே இருக்கும் குருட்டுக் கிழவனைப் போல இழந்த சாவியைத் தேட முயற்சி செய்கிறது இந்தக் கட்டுரை.

மனிதன் தோன்றிய காலம் முதற்கொண்டு இன்றுவரை எத்தனை எத்தனையோ தத்துவ சாஸ்திரிகள் இறைவனது தன்மையையும், சிருஷ்டி தத்துவத்தின் பண்புகளையும் கெஜக்கோல் கொண்டு அளந்துவிடலாம் என்று நம்பி அறிவாராய்ச்சித் துறையிலே இறங்கினார்கள். ஐரோப்பாவில் நியூட்டன், டார்வின் முதலியோருடைய பூத பௌதிக ஆராய்ச்சியின் விளைவாக பிரபஞ்சத்தின் சூக்ஷமத்தைக் கண்டுவிட்டதாக மக்கள் கருதினார்கள். பிரபஞ்சம் எல்லாமே தானே இயங்கக்கூடிய ஒரு யந்திரம், அதற்கு அப்பாற்பட்ட ஒரு சக்தியின் துணையில்லாமலேயே அந்த யந்திரம் தான்தோன்றியாய் அமைந்துகொண்டது. க்ரூட் ஆயிலும், பெட்ரோலும் இருந்தால் மனிதன் தன்னுடைய சக்தியால் தன்னிஷ்டப்படி அந்த யந்திரத்தைத் தன்வசப்படுத்தி விடலாம் என்றெல்லாம் பகற்கனவு காண ஆரம்பித்தார்கள்.

ஆனால் ஐன்ஸ்டைன் (Einstein), ப்ளாங்க் (Planck) முதலியோருடைய விஞ்ஞான ஆராய்ச்சி பத்தொன்பதாவது நூற்றாண்டுத் திமிரையெல்லாம் வேரோடு பிடுங்கி எறிந்துவிட்டது. நாம் பார்க்கிற பொருள்கள் அணுக்களாலும், பரம அணுக்களாலும் ஆனவை என்ற நம்பிக்கை போய், அவைகள் எல்லாமே ஐம்புலன்களுக்குப் புறம்பான சக்தி அலைகள் என்ற சித்தாந்தம் பிறந்தது. உலகமெல்லாம் ஒரு யந்திரம் என்ற முடிபு முறியடிக்கப்பட்டது. விஞ்ஞானிகளிடத்திலே இதற்கு முன்னில்லாத பணிவு பிறந்தது. விஞ்ஞானத்தின் சிறுமையைச் சிந்தனை செய்து பார்த்தார் ஐன்ஸ்டைன்.

“நாம் அறிந்த உலகத்தின் எல்லையில் நின்றுகொண்டு, அறியாத உலகத்தை எட்டிப்பார்க்கும்போது, அதன் பிரம்மாண்டமும், அகண்டமும் நம்மைத் திணறடிக்கிறது. நமது அறியாமையை நினைக்கும்போதே உடல் பதறுகிறது” என்று சொன்னார் அவர்.

இந்தப் பதற்றம் எல்லாம் திருமூலருக்கு ஏற்படவே இல்லை. இறைவனுடைய பரிபூரண அறிவோடு மனிதனுடைய சிற்றறிவை ஒத்துப் பார்த்தவுடனேயே அவருக்கு உண்மை துலங்கிவிட்டது. தன்னுடைய அறியாமையின் ஆழத்தையும், அகலத்தையும் உணர்ந்த மாத்திரத்திலேயே, அவருக்கு உண்மையான ஞானம் பிறந்துவிட்டது. உடனே கும்மாளம் போட ஆரம்பிக்கிறார். “நான் மூவாயிரம் பாடல்கள் பாடப் போகிறேன். எதற்காக? என்னுடைய அறிவை உங்களுக்குச் செப்பிவிடலாம் என்ற நோக்கத்தோடா? இல்லை, என்னுடைய அறியாமையை சவிஸ்தாரமாக விளம்புவதற்காக” என்று ஆரம்பிக்கிறார் திருமந்திரத்தை.

“ஆரறிவார் எங்கள் அண்ணல் பெருமையை
ஆரறிவார் இந்த அகலமும் நிகளமும்
பேரறியாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேர் அறியாமை விளம்புகின்றேனே!”

என்ன துணிச்சல்! அந்த ஏகாரத்திலே இருக்கும் தெம்பு எவ்வளவு! அறியாமையை உணர்ந்துவிட்டோம் என்ற தெம்புதான். ஆனால், அந்த உணர்ச்சியிலே பரிபூரண ஞானத்தின் முத்திரையை அல்லவா காண்கிறோம்!

“வேரறி யாமை விளம்புகின் றேனே”

என்று நாக்கைச் சுழற்றி விழுகிறது முத்திரை.

சாக்ரடீஸ் என்ற கிரேக்க தத்துவ சாஸ்திரி, தன் தேசத்திலுள்ள பெரியோர்கள் ஒவ்வொருவரிடமும் சென்று, ஜவாப் சொல்ல முடியாத கேள்விகளைக் கேட்டு, அவர்களுடைய அறியாமையை விளக்கி வந்தார். எல்லோரும் அவருடைய விரோதிகள் ஆனார்கள், நமது அறியாமையைக் காட்டிக் கொடுக்கிறானே இவன் என்று. கடைசியாகப் பொய்க்குற்றம் சாட்டப்பட்டு நீதிபதிகள் முன் நிற்கிறார் சாக்ரடீஸ். மதத்துக்கு விரோதமாகப் பிரசாரம் செய்தார் என்பது குற்றச்சாட்டு. நீதிபதிகளும் இவரிடத்தில் அகப்பட்டுக் கஷ்டப்பட்டவர்கள். சிரச்சேத தண்டனை கொடுக்க வேண்டும் என்றே கங்கணம் கட்டிக்கொண்டு வந்திருக்கிறார்கள். மேதாவி சாக்ரடீஸுக்கு விஷயம் தெளிவாகத் தெரிந்துவிட்டது. தனது கடைசிப் பிரசங்கத்தில் அவர் சொன்னார்: “கிரேக்க தேசத்திலேயே பெரிய அறிவாளி நான் என்று டெல்பியிலிருக்கும் அசரீரி சொன்னது. ஆனால், அப்படியொன்றும் அறிந்தவன் என்று என்னைச் சொல்லிக்கொள்ள முடியாது. நமது நாட்டிலிருக்கும் பல உத்தியோகஸ்தர்களும், அரசியல்வாதிகளும் தங்களைப் பெரிய அறிவாளிகளாக மதித்து வந்தார்கள். நான் அவர்களை அணுகி வாதித்துப் பார்த்ததில் அவர்களுடைய அறியாமை ஸ்தாபிக்கப்பட்டது. இந்த நாட்டிலே நான் ஒருவன்தான் எனது அறியாமையை உணர்ந்தவன் என்று தெரிந்துகொண்டேன். ஆகவே, அந்த டெல்பியிலிருக்கும் அசரீரி வாக்கு உண்மையென்றே இப்பொழுது தோன்றுகிறது” என்றார்.

ஆகவே, தன்னுடைய அறியாமையை எப்பொழுது மனிதன் உணர ஆரம்பிக்கிறானோ, அப்பொழுதே அவனுக்கு நிலையான அறிவு பிறக்கிறது. இதைத்தான் வள்ளுவர் சொன்னார்--

“அறிதோ றறியாமை கண்டற்றால்”

என்று. நேற்றுவரைக்கும் பூமி தட்டையாக இருப்பதாக மனிதன் நினைத்து வந்தான். இன்று பூமி உருண்டையாக இருக்கிறது என்று அறிகிறான். நேற்றைய “அறிவை’ இன்றைய “அறிவோடு’ ஒத்துப் பார்க்கும்போது நேற்றிருந்தது அறியாமையென்று தெரிகிறது. இன்றைய அறிவை நாளைக்குக் கிட்டப்போகும் அறிவோடு ஒத்துப் பார்க்கும்போது, இன்றைய அறிவும் அறியாமைதான் என்று விளங்கும். இவ்வாறு படிப்படியாக ஒத்துப் பார்த்துக்கொண்டே போகிறான். கடைசியாக,

“சாட்டி நிற்கும் அண்டமெலாம்
சாட்டையிலாப் பம்பரம்போல்
ஆட்டுவிக்கும் அண்ணலது”

-- அறிவோடு தனது அறிவை ஒத்துப் பார்க்கிறான். பிறக்கிறது ஞானம்.

“ஆரறிவார் எங்கள் அண்ணல் பெருமையை”

என்று கூத்தாடுகிறான், திருமூலரைப் போல.

*1947-இல் எழுதிய கட்டுரை.

**12 உடலும்-உயிரும்**

மனித வாழ்க்கையில் உயிருக்கும், உடம்புக்கும் உள்ள உறவு இருக்கிறதே, அது மிகமிக விசித்திரமானது. இந்த உறவைப் “பொய்யுறவு’ என்று சிலர் வெறுத்துத் தள்ளியிருக்கிறார்கள்; “மெய்யுறவு’ என்று கண்டு வாழ்த்தியிருக்கிறார் திருமூலர்.

திருமூலருடைய கொள்கையைப் பற்றிப் பேசுவதற்கு முன்னால், ப்ராய்ட் (Freud) முதலிய மேல்நாட்டு மனோ தத்துவ ஆசிரியர்கள், ஆல்டஸ் ஹக்ஸ்லி (Aldous Huxley) முதலிய பிரபல இலக்கியகர்த்தர்கள் இந்த உறவைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று சற்று பரிசீலனை செய்வோம். மனிதனுடைய ஆன்மாவுக்கு தனியான சுதந்திரம் என்று ஒன்றுமில்லை; அது முற்றிலும் உடலுக்கு அடிமைப்பட்டிருக்கிறது. உடம்போ, தன்னைச் சுற்றியிருக்கும் சூழலுக்குக் கட்டுப்பட்டிருக்கிறது. ஆகவே, ஆன்மாவானது அடிமைக்கு அடிமையாக இருந்து குற்றேவல் செய்கிற வஸ்துதான் என்று மேற்சொன்ன இருவரும் வற்புறுத்துகிறார்கள்.

ஏதோ, உடலைப் பாதிப்பது ஓரளவு மனசையும், உயிரையும் பாதிக்கும் என்பது உண்மைதான். அஜீரணத்தினால் நமக்குக் கோபம் வருவது சகஜம். வெள்ளைக்கார கவர்னர்களிடம் தயவு எதிர்பார்த்துச் செல்லுகிறவர்கள், உடலை வாட்டுகிற சென்னை நகரத்திலே போய் அவர்களைப் பார்ப்பதில்லை. உடல் குளிர, உள்ளங்குளிர உதகமண்டலத்திலே இருக்கும்போது அவர்களைப் பேட்டி கண்டு வெற்றிகரமாக திவான் பஹதூர் பட்டமெல்லாம் பெற்று வந்திருக்கிறார்கள் நம் நாட்டு உள நூற்புலவர்கள்.

ஆனால், ஆன்மாவுக்குத் தன்னிச்சையென்பதே கிடையாது. உடம்பு சொன்னபடியெல்லாம் ஆடுகிறது என்ற கொள்கையைத்தான் ஒப்புக்கொள்ள முடியவில்லை. வாஸ்தவந்தான், இந்த இரண்டு தத்துவங்களுக்குமிடையே நடக்கிற போராட்டத்தைப் பார்க்கும்போது நமக்கு ஓரளவு சோர்வு ஏற்படுகிறது; ஆன்மாவிடத்திலே நமக்கு அனுதாபங்கூட ஏற்படுகிறது. உயிரை அவமானப்படுத்தி, அதன் கொட்டத்தை அடக்க வேண்டுமென்றே இந்த உடம்பு நமக்கு ஏற்பட்டதோ என்றுகூடச் சந்தேகிக்கிறோம். தொண்டைப் புகைச்சல், ஜலதோஷம், காசம், பக்கவாதம் - இப்பேர்ப்பட்ட நோய்களை ஆயுதமாகக் கொண்டு, உடம்பு உயிர்மீது படையெடுக்கிறது. இந்த யுத்தம், உலகம் தோன்றிய நாள் முதல், ஒருதலைப் பக்ஷமாகவே முடிகிறது. இன்று, இல்லையேல் நாளை, உயிர் உடம்புக்கு இரையாகிறது; உணர்வு என்பது நீங்கி, மயக்கமும், அவஸ்தையும், வாயாலெடுப்புந்தான் மிஞ்சுகிறது. வாழ்க்கையில் ஆன்மாவுக்கு ஸ்தானம் இல்லை. எல்லாம், உடம்பும் அது செய்கிற அட்டூழியமுந்தான். இளமையில் மிகுந்த அழகோடு பொலிகிறது உடம்பு. முதுமையிலோ, மசகு போடாத வண்டியைப்போல, மொழிக்கு மொழி திணறிக்கொண்டு நீச்சல் போடுகிறது. ஆகாசத்திலே கண்ணுக்குத் தெரியாமல் சஞ்சரித்துக் கொண்டிருக்கிற கிருமிகள், கொக்கரித்துக்கொண்டு உடம்பிலே புகுந்து, விரைந்து பெருகி, அற்புதமான உடற்கருவிகளைப் புசித்து, உயிர்ச்சத்தைக் குடித்து, உடம்பை த்வம்ஸம் செய்கின்றன. மிஞ்சுவது என்ன? ஒருபிடி சாம்பல், அரைப்பிடி கந்தகம், கொஞ்சம் சுண்ணாம்பு, ஒரு ராத்தல் கரி. அரசியலைப் பற்றி அவன் பேசின வீரப் பேச்சுகள், தேனிலே குழைத்தது போன்ற அவன் குரலினிமை, சுத்தப் பிரம்மத்தைப் பற்றிய அவனது சித்தாந்த நுட்பங்கள், திடீரென்று கொப்புளித்து மறையும் அவன் புன்முறுவல், கடவுளிடத்திலே அவன் வைத்திருந்த அபார பக்தி-இவ்வளவும் மறைந்து, மிஞ்சுகிறது என்ன? ஒருபிடி சாம்பல், அரைப்பிடி கந்தகம், ஒரு ராத்தல் கரி. . . ஆன்மாவாவது! மண்ணாங்கட்டியாவது!

ஆனால், இந்த மண்ணாங்கட்டிக்குள்ளே உயிர் எப்படி வந்து தொத்திக்கொண்டது? “அப்பத்தை எப்படிச் சுட்டாளோ அதில்-- தித்திப்பை எப்படி வச்சாளோ?” என்றாளே, அந்தக் குழந்தையைப் போல, கேள்விக்குப் பதில் தெரியாமல், அதிசயத்திலே கேள்வியையும் மறந்து விடுகிறோம். சலனமற்ற, அறிவற்ற, உயிரற்ற, அறுகுநுனி பனியனைய சிறிய துளி ஒன்று கர்ப்ப

வாழ்க்கையை ஆரம்பிக்கிறது. சிறிது காலத்தில் பனித்துளி ஜவ்வு மாதிரி உருவெடுக்கிறது. பின்னால், புழுவைப்போல் நெளிய ஆரம்பிக்கிறது. சில நாட்கள் கழிகின்றன; இறக்கை முளைத்த மீன் போலக் காட்சியளிக்கிறது. இந்த விசித்திர வஸ்துக்குள்ளே, ஒரு இதயம், அதற்குள்ளே ஒரு துடிதுடிப்பு, உணர்வு-- ஒருநாள் இது பிறந்து, மீசை முளைத்த ஆண் மகனாக விளைந்து, இன்ப துன்பத்தை நுகர்வதும், காதலிப்பதும், வெறுப்பதும், நினைப்பதும், சிந்திப்பதும், கற்பனைக் கோட்டைகள் கட்டுவதும்-- என்ன விசித்திரம்! அன்று உணர்வில்லாத ஜவ்வாக இருந்த ஒரு பொருள், இன்று "இறைவன்' என்ற ஒரு பொருளைக் கற்பனை செய்து வணங்குகிறது. இறக்கை முளைத்த மீனாக இருந்த ஒரு பொருள், நன்மை, தீமை என்ற இருவினைகளைச் சீர்தூக்கி எடை போடுகிறது. புழுவைப்போல நெளிந்துகொண்டிருந்த அது, இன்று சீதக்கதிர் மதிமேல் சென்று தேனுன்னுகிறது; இசையலைமேல் மிதந்து நாதப்பிரம்மத்தை நாடுகிறது; கவிதையை ரசித்துக் கட்டடங்காக் களிப்பெய்துகிறது. இப்படியெல்லாம் செய்கிற ஆன்மாவிருக்கிறதே, ஏன் புழு அடையும் பாண்டத்தோடு, ஒருபிடி சாம்பலாகக் காத்திருக்கும் உடம்போடு உறவு கொண்டது?

இந்தக் கேள்விக்கு ஒரு அற்புதமான விடையளிக்கிறார் வள்ளுவர்:

"அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போ டியைந்த தொடர்பு."

அன்பே ஸ்வரூபமாக உள்ள ஒரு சக்தி, உலகங்களையெல்லாம் இயக்கி வருகிறது. அந்த சக்திதான் இந்த எலும்புக்கூட்டோடு ஆன்மாவைக் கொண்டுவந்து இணைத்திருக்கிறது. ஆகவே, அன்பை அடித்தளமாகக் கொண்ட இந்த உறவு வெறுக்கத்தக்கதல்ல, பெரிதும் விரும்பத்தக்கது என்றார் குறளாசிரியர். வள்ளுவரின் வழித்தோன்றலாகிய திருமூலரும் இந்த மர்மத்தை உணர்ந்தவர். ஆல்டஸ் ஹக்ஸ்லிக்கு ஏற்பட்ட சந்தேகம் அவருக்கும் ஏற்படாமலில்லை.

"உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்"
என்று சொன்னவர், அன்பின் திறத்தை உணர்ந்தவராகையால், உடலுக்குள்ளே ஒரு புதுமையைக் கண்டார்.

"உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்"

என்று ஓலமிடுகிறார். கிறிஸ்தவ சமயத்திலும், `The Indwelling God` (உடலுக்குள் உறையும் இறைவன்) என்ற சித்தாந்தத்தை ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

உடலினுள் உத்தமன் கோயில் கொண்டிருக்கிறான் என்ற உண்மையைக் கண்ட மாத்திரத்திலேயே திருமூலர், உடம்பு உயிரைக் காட்டிலும் மேம்பட்டது. அதை உரிய முறையில் ஓம்ப வேண்டும் என்று பறை சாற்றுகிறார்.

உயிர் இந்த உடல் மூலம் பெறுகிற அனுபவங்களால் உயர்ந்த நிலையை அடைகிறது. உயிரை உய்விக்கும் கருவியாக உடலைக் கருத வேண்டும். உடம்பார் அழிந்துவிட்டால், உயிரார் அழிவார், அனுபவமும் அழிந்துவிடும். ஆகவே, உடம்பை வளர்க்க வேண்டும். மிருகத்திமிரை வளர்க்கும் முறையிலே உடம்பை வளர்த்தால், உயிருக்குப் பயனில்லை. ஆகையால், வளர்க்கும் உபாயம் அறிந்து உடம்பை வளர்க்க வேண்டும்.

"உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன், உயிர்வளர்த்தேனே"

என்பது திருமந்திரம்.

உயிருக்கு இதமான முறையிலே உடம்பை வளர்ப்பது எப்படி என்பதைப்பற்றிப் பல பாடல்கள் பாடியிருக்கிறார். இங்கேதான், "சாவியை இழந்துவிட்டோமே, அர்த்தம் புரியவில்லையே" என்று, கையை விரிக்கவேண்டி இருக்கிறது.

ஆல்பெர்ட் ஷ்வைட்ஸர் (Albert Schweitzer) என்ற ஜெர்மன் தத்துவஞானி உலக சமயங்களையெல்லாம் இரண்டு வகையாகப் பிரிக்கிறார். ஒன்று, "கடவுள் மாத்திரமே உண்மை; வாழ்க்கை, உடம்பு--எல்லாம் பொய்" என்று கருதுவது. மற்றொன்று, "கடவுள் உண்மை; அவர் அமைத்த வாழ்க்கையும் உண்மை" என்று கருதுவது. எது சரி, எது தப்பு என்று சொல்வது கஷ்டமான காரியம். ஆனால், ஒன்றுமட்டும் நிச்சயம். வாழ்க்கை பொய்யென்று கருதுகிறவர்கள் இமயமலைச் சாரலிலேயுள்ள பனிக்குகைகளை நாடிச் செல்வார்களேயொழிய, வாழ்க்கையைத் திருத்தி அமைப்பதிலோ, மக்களுக்குச் சேவை செய்வதிலோ, நோயோடும், வறுமையோடும் போராடுவதிலோ மனசை ஈடுபடுத்த மாட்டார்கள். வாழ்க்கை உண்மையானது, தன்னலமற்ற பரிபூரணமான வாழ்க்கை மூலந்தான் ஆன்மாவுக்கு விமோசனம் உண்டு என்று நினைக்கிறவர்கள் சமூக சேவையிலே உற்சாகத்தோடு ஈடுபடுகிறார்கள். மேற்சொன்ன ஷ்வைட்ஸர் என்பவர், "மேல்நாடுகள் வறுமையையும், பிணியையும் வென்று உன்னதமான வாழ்க்கை நடத்திவர, கீழ்நாடுகளில் உயர்ந்த வாழ்க்கைத்தரம் இல்லாமலிருப்பதற்குக் காரணம், சமயக் கோட்பாட்டின் வேற்றுமைதான்" என்று சொல்லிவிட்டு, "ஆனால், தமிழ் நாட்டில் மாத்திரம் வாழ்க்கையின் உண்மையை அறிந்த பல ஞானிகள் இருந்திருக்கிறார்கள்" என்று "Indian Thought" என்ற நூலிலே ஒப்புக்கொள்ளுகிறார். அவர் ஒப்புக்கொள்வதற்கிணங்க திருமூலரும் மனிதனை நடமாடும் கோயில் என்றே கூறியிருக்கிறார். "படங்களும், சிலைகளுமுள்ள கோயிலிலே இறைவனைச் சேவிப்பதைக் காட்டிலும், நடமாடும் தெய்வமாயிருக்கும் மக்களுக்குச் சேவை புரிவதே மேல். மனித சமுதாயமே நான் வணங்கும் ஈச்வர சந்நிதானம், என்று மிகுந்த துணிச்சலோடு பாடுகிறார்:

"படமாடற் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்,
நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா;
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்,
படமாடற் கோயில் பகவற்கு அது ஆமே."

அதி தீவிர நாஸ்திகப் புரட்சிவாதிகள்கூட சமூக சேவைக்கு இவ்வளவு அழுத்தம் கொடுத்ததில்லை. பெர்ட்ரன்ட் ரஸ்ஸெல் (Bertrand Russel) போன்ற நாஸ்திகர் சொல்வதெல்லாம், "ஆன்மா, கடவுள் என்பதைப்பற்றிக் கவலையில்லை. தன்னலமற்ற சேவையிலே தனியான இன்பம் இருக்கிறது. ஆகையினால், அதைச் செய்ய வேண்டும்" என்பதே. இந்தக் கொள்கையிலே ஒரு வறட்சியிருக்கிறது. சமூக சேவையினால், மனசிலே ஒரு இன்பம் மாத்திரமல்ல, ஆன்மாவுக்கு வளர்ச்சியும் ஏற்படுகிறது என்று திருமூலரோடு நாம் நம்பினால், தொண்டு செய்வதிலே, நாஸ்திகர்களைக் காட்டிலும் பன்மடங்கு உற்சாகமும், சோபையும் நமக்கு ஏற்படுமல்லவா?

1947-இல் எழுதிய கட்டுரை.

**13 அருள் வெளி**

"Time must have a stop" என்ற நூலிலே ஆல்டஸ் ஹக்ஸ்லி (Aldous Huxley) உடலுக்கும் உயிருக்கும் உள்ள உறவை, ஹிந்து சம்பிரதாயத்தையொட்டி விளக்கியிருக்கிறார். மனிதன் சாதாரணமாக இரண்டு மண்டலங்களிலே சஞ்சாரம் செய்கிறான். அவனுடைய உடம்பு பௌதிக உலகத்திலே வாழ்க்கை நடத்துகிறது. ஆனால், அந்த உடலுக்குள்ளே இருக்கும் ஆன்மா சூக்ஷ்ம உலகத்திலே சஞ்சரிக்கிறது. மேற்சொன்ன நூலிலே யூஸ்டஸ் பார்னக் (Eustace Barnack) என்ற ஓர் அருமையான பாத்திரத்தை சிருஷ்டித்திருக்கிறார் ஹக்ஸ்லி. அவன் உடம்பே பிரதானம் என்று நம்புகிறான். ஐம்புலன் மூலமாக அனுபவிக்கக்கூடிய இன்பம் ஒவ்வொன்றையும், மிச்சம், சொச்சம் வைக்காமல் அனுபவிக்கிறவன். "இன்று கிடைக்கக்கூடிய சிற்றின்பத்தை நாளை நுகரலாம் என்று வாயிதா போடாதே" என்பதே அவனுடைய சித்தாந்தம். விலாப் புடைக்கச் சாப்பிடுகிறான், வெறிக்க, வெறிக்க மது மாந்துகிறான், திகட்டத் திகட்டக் கலவிக் கடலிலே முங்கி முழுகுகிறான், மாய்கிறான். மாய்ந்தபின் அவனுடைய ஆன்மா விண்ணுலகத்தின் ஆனந்த லகரியிலே இரண்டறக் கலக்க மறுக்கிறது. உடல் மூலம் பெறக்கூடிய சிற்றின்பத்தை, உடம்பை இழந்தபின், பெற முடியாமல் அவன் ஆன்மா வாடி வதங்குகிறது. உடம்பிருக்கும் போதாவது மனிதன் செயலில் ஈடுபட்டு தன்னுடைய இன்னல்களையெல்லாம் மறக்க முடிகிறது. ஆனால், உடல் கழன்று விழுந்த பிறகோ, "மறதி' என்ற அருமருந்து அவனுக்குக் கிட்டுகிறதில்லை. ஆசையும், அதைப் பூர்த்திபண்ண முடியவில்லையே என்ற ஏக்கமும், ஏமாற்றமுமே ஆன்மாவின் இணைபிரியாத நண்பர்களாகிவிடுகிறார்கள். ஆனால், ப்ருனோ ரான்டினி (Bruno Rontini) என்ற மற்றொரு பாத்திரம் இதற்கு நேர்மாறானவன். உடல் என்பது ஆன்ம வளர்ச்சிக்காக நமக்கு இறைவன் அருளிய வரப்பிரசாதம். விடுதலை அடைவதற்காக நமக்கு ஏற்பட்ட கருவி அல்லது சாதனம். லட்சியத்தை மறந்து சாதனத்தையே லட்சியமாகக் கொள்வது மடமை என்று அவன் கருதுகிறான்.

இந்த சித்தாந்தத்தைத்தான் திருமூலர் பல நூற்றாண்டுகளுக்கு முன் எடுத்து விளக்கியிருக்கிறார். ஸ்வானுபவத்தால் ஏற்பட்ட அதிகாரத்தோடு விளக்கியிருக்கிறார்.

உடல், உயிரை உய்விக்க வந்த கருவி என்பது உண்மைதான். ஆனால், அது நம்மைப் படுத்திவைக்கிற பாடு இருக்கிறதே, அதிலே நாம் நம்மையும், நமது உயிரையும் மறந்து, உடல் தத்துவத்திலேயே முழுக்க, முழுக்க ஈடுபட்டுவிடுகிறான்.

உதாரணமாக, "காமம்' என்ற சக்திதான் எப்படியெல்லாம் மனிதனை ஆட்டி வைக்கிறது! உடம்பை மாத்திரம் அல்ல, உணர்ச்சியையும், அறிவையுமே பேயாட்டம் ஆடச் செய்துவிடுகிறது. திருமூலர்கூட காமச் சூறாவளியிலே அகப்பட்டு மூக்கறுபட்டவர்தான்.

"வையகத்தே மடவா ரொடும்கூடி என்
மெய்யகத்தோர் உளம் வைத்த விதி அது"

என்று சொல்லி, அந்தப் பொல்லாத விதியைச் சுட்டிக்காட்டிப் பெருமூச்சு விடுகிறார். ஆனால், காமத்தினால் நன்மையும் ஏற்படுகிறது என்பதைத் திருமூலர் உணர்ந்தவர். காமத்தால் பீடிக்கப்பட்டவன் தன் உடம்பை மறந்து மற்றொரு உடம்பை நினைத்து நினைத்தாவது உருகுகிறான். அந்த மட்டுக்கும் தன் உடம்பின் பிரதானம் கரைந்து குறைகிறது. ஈரேழு உலகங்களும், சந்திர சூரியர்களும், ஏன், பிரபஞ்சம் முழுவதுமே தன்னைச் சுற்றி இயங்குவதாக நம்பினான் ராவணன். ஆனால், ஜானகியிடத்தில் அவனுக்கு ஏற்பட்ட காமம், அவனது ஆணவத்தைச் சிதறடித்து, தெம்பை அடக்கி ஒடுக்கி, பத்துத் தலைகளோடும் அவள் கால்மாட்டிலே விழுந்து பணியும்படி செய்யவில்லையா? ஆகவே, இந்தப் புலால் துருத்தியே பிரபஞ்சம் என்று கருதுகிறவனைக்கூட, அதற்குப் புறம்பாயிருக்கும் பொருள்களிடத்திலேயும்

ஈடுபடும்படி செய்துவிடுகிறது காமம். சிற்றின்ப அனுபவத்திலே சிறிது நேரமாவது, மனிதன் காலம், தூரம் என்ற உணர்ச்சிகளற்ற அகண்டாகாரத்தில் அமிழ்ந்துவிடுகிறான்.

“புணர்ச்சியுள் ஆயிழைபால் நட்புப்போல்,
உணர்ச்சியுள் ஆங்கே ஒடுங்க வல்லார்”

என்று காமுகனையும், யோகியையும் சமநிலையில் வைத்துப் பாராட்டுகிறார் திருமூலர்.

காமரஸத்தை அனுபவிப்பவர்கள், கட்குடியர்களைப் போல, கேவலம் பழக்கத்துக்கு அடிமையாகிவிட்டால் கேடு விளைவது நிச்சயம். பழக்கத்தின் கொடுங்கோன்மை இருக்கிறதே! அது உடலோடு நின்றுவிடுவதில்லை. மனசையும், ஆவியையுமே விலங்கிட்டுச் சீரழிக்கிறது. காமத்தால் கிடைப்பது துன்பமாக இருந்தாலும், பழக்கத்தை உதறித்தள்ள மாட்டாமல், மனிதன் அதில் ஈடுபடுகிறான்.

“ஆத்த மனையாள் அகத்தி லிருக்கவே
காத்த மனையாளைக் காமுறும் காளையர்
காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்துக்(கு) இடருற்ற வாறே.”

கைமேலிருக்கும் பலாவின் கனியை அனுபவிக்கும் திறமையை இழந்துவிட்டு, ஈச்சம்பழத்தை நினைத்து, நினைத்து ஸ்வப்பனா அவஸ்தையிலிருப்பார்கள். ஈச்சம் பழமேன்? வேப்பங்காயை நினைத்துக்கூட அங்கலாய்ப்பார்கள். பழக்கத்தின் கொடுமை இது. இப்பேர்ப்பட்ட பழக்கத்துக்கு இளக்காரம் கொடுத்துவிட்டாலோ, அது சைத்தானைப் போல, நம்மை விடாப்பிடியாக பிடித்துக்கொள்ளுகிறது. பிரபஞ்சம் முழுவதும் நமது உயிருக்குச் சொந்தம் என்ற அகண்ட உணர்வு மாறி, அது வேறு, நாம் வேறு என்ற வேற்றுமைப் புத்தி வலுப்பெறுகிறது.

ஆனால், காமத்தினால் விளைவதெல்லாம் துன்பம் என்று ஒப்பாரி வைப்பதும் தவறு. அதற்கு அழிக்கும் சக்தி எவ்வளவு இருக்கிறதோ, அவ்வளவு ஆக்கும் சக்தியும் இருக்கிறது. காமத்தின் உதவியால்தான் மனிதன் காதல் உலகத்தை அடைய முடிகிறது.

“நம்பியைக் காண நங்கைக்கு ஆயிரம் நயனம் வேண்டும்
கொம்பினைக் காணும் தோறும் குரிசிற்கும் அன்ன தேயாம்.”

காதலால் ஏற்படுகிற ஆயிரம் நயனத்தையும், ஆயிரம் இதயத்தையும் வைத்துக்கொண்டு உலகத்தை உணர்ச்சிப் பெருக்குடன் பார்க்கும்போது, நம்முடைய எண் சாண் உடம்பு வெடிபட்டு, விட்டு வாங்குகிறது; உள்ளே சிறைப்பட்டது போலிருந்த “செங்கட்சீயம்” விஸ்வரூபக் காட்சியளிக்கிறது. இரண்யனுடைய காமத்துக்கும், இராவணனுடைய காமத்துக்கும் அடிப்படையான பேதமொன்று உண்டு. காமானுபவத்தில்கூட இரண்யன் தன்னுடைய ஆணவத்தை மறக்க இயலாதவனாய் இருந்தான். தன்னுடைய வீரத்திலும், வாள் வலியிலும் அவனுக்கிருந்த இறுமாப்பு, அவனது ஆன்ம வளர்ச்சிக்குப் பெரிய இடையூறாக இருந்தது.

“வாளினைத் தொழுதல் அல்லால் வணங்குதல், மகளிர் ஊடல்
நாளினும் உளவோ, என்னா அண்டங்கள் நடுங்க நக்கான்.”

“மகளிரோடு ஊடும் காலத்தில்கூட நான் அவர்களை வணங்கியதில்லையே. இந்த அரியையா வணங்கச் சொல்லுகிறாய்!” என்று பிரஹலாதனைப் பார்த்து நகைக்கிறான். ஆனால், இராவணனுடைய மனமோ, காதலால் பண்பட்டது. தன்னை மறந்த லயத்தில் அவனை அழுத்திவிட்டது காதல். ஆகவே, காதல் மூலம் அவன் உடலை மறந்து, தன்னை மறந்து, பேத நிலையற்று, பூரணத்தோடு ஐக்கியமடைந்தான், சூர்ப்பணகையைப் போல. காமத்துக்கு

இரண்டுவித சக்தியும் இருக்கிறது. அதன் உதவியால் மனிதன் உடலை மறந்து, உயிரை வளர்க்கலாம்; உயிரை மறந்து, உடலையும் வளர்க்கலாம்.

காமத்தைக் காட்டிலும் கொடியது கோபம். அது எப்பொழுதுமே நமக்கும், மற்றவர்களுக்கும் இடையே பேதம் கற்பித்து, விரோத பாவத்தை மூட்டி, ஐக்கிய புத்தியை, பிரமபாவனையைக் கெடுக்கிறது; மனசைக் கல்லாக்கி, மருளை ஊட்டுகிறது. ஆகவேதான், திருமூலர் வெகுளியை அறவே வெல்ல வேண்டும் என்று வற்புறுத்துகிறார்.

“வெல்லு மளவில் விடுமின் வெகுளியை
செல்லு மளவும் செலுத்துமின் சிந்தையை
அல்லும் பகலும் அருளொடு தூங்கினால்,
கல்லும் பிளந்து கடுவெளி யாமே.”

என்று பாடுகிறார்.

காமத்தையும், கோபத்தையும்விடக் கொடுமை வாய்ந்தது லோபம். காமமும், கோபமும் உடலிலே ஏற்படுகிற சேஷ்டைகள். பசி ஏற்படும்போது, உணவு அருந்தினால், பசி நீங்கிவிடும்; பசியால் ஏற்படுகிற மனக்குழப்பமும் நீங்கிவிடும். காமத்தையும், கோபத்தையும் அவ்வாறே தீர்த்துக்கொள்ளலாம். ஆனால், பண ஆசை என்பதைத் திருப்தி செய்வது கஷ்டசாத்தியமான காரியம். ஏனென்றால், அது உடம்பைப் பொறுத்ததல்ல, மனசிலேயே வேரூன்றி வளர்வது; திருப்தி செய்ய முடியாதது. ஆகவே, அது இடைவிடாமல் மனிதனுடைய நடத்தையைப் பாதித்துக்கொண்டே இருக்கிறது. அன்பையும், இரக்கத்தையும் அது கொல்லுகிறது; பயன் தெரியாத மிருக வாழ்க்கையை வளர்க்கிறது; திருமூலரின் கோபத்துக்கு இலக்காகிறது.

“வட்டி கொண்டீட்டியே, மண்ணின் முகந்திடும்
பட்டிப் பதகர் பயனறியாரே”

என்று அவர்களைச் சபிக்கிறார் திருமூலர்.

ஆகவே, காமக் குரோத லோபங்களை அடக்காவிட்டால், மனித மனம், மெய்ப்பொருளோடு ஐக்கியம் பெற முடியாமல் விகற்பமடைந்து அல்லலுறுகிறது.

விண்ணுலக யாத்திரையிலே வளர்ச்சியுற்றுத் தடைப்பட்டு நின்றது உயிர். உடல் மூலம் கர்மங்கள் செய்து, கர்மங்கள் மூலம் அனுபவம் பெற்று, அனுபவத்தின் மூலம் ஆன்ம வளர்ச்சியடைய வேண்டும் என்று ஓர் அற்புதமான உடலைக் கொடுத்தான் இறைவன். ஆனால், உடல் என்ன செய்கிறது? தன்னகத்தே வந்தடைந்த உயிரை ஏமாற்றி, காமக் குரோத லோபங்களின் உதவியால், “உயிரைக் காட்டிலும் உடலே பிரதானம்” என்ற மயக்கத்தை ஊட்டிவிடுகிறது. “இன்று கிட்டுகிற சிற்றின்பத்தை, நாளைக்கென்று வாயிதாப் போடாதே” என்ற பல்லவியை யூஸ்டன் பார்னக்கோடு நாமும் சேர்ந்து பாடுகிறோம்.

**14 உறவும்-உணர்வும்**

குழந்தையோடு குலாவும் தாய் உள்ளத்தில் அன்பு வெறி ஏறுகிறது.

"உச்சி தனைமுகந்தால்-- கருவம்
ஓங்கி வளருதடீ!
மெச்சி யுனைஊரார்-- புகழ்ந்தால்
மேனி சிலிர்க்குதடீ!"

என்று மலடியால் சொல்ல முடியாது; தகப்பனால்கூடச் சொல்ல முடியாது; தாய்தான் சொல்ல முடியும். உறவு நெருங்க நெருங்க, உணர்வு பெருகுகிறது.

ஆனால், உறவில் எல்லாம் மிக்க உன்மத்தத்தைக் கொடுக்கும் உறவு எதுவென்றால், காதலன்--காதலி உறவுதான். மனிதனுடைய குடுமியைப் பிடித்து ஆட்டிவைக்கும் மாபெரும் சக்திகள் இரண்டு--பசியும் காமமும். மனித வரலாற்றை ஊன்றிப் படிக்கும்போது இந்த உண்மை விளங்குகிறது. இங்கிலாந்து என்ற ஒரு சிறிய தீவில் மக்களுக்குப் போதிய உணவு கிடைக்கவில்லை. பசியைத் தீர்ப்பதற்காக, காடும்--கடலும் கடந்து பல நாடுகளுக்குச் சென்று வாணிபம் செய்தும், போரிட்டும் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தையே ஆங்கிலேயர் நிலைநாட்டினார்கள். இந்த வெற்றிக்கெல்லாம் அடிப்படையாக இருந்தது பசி. இப்படியெல்லாம் கிடைத்த ஒரு மகத்தான சாம்ராஜ்யத்தைத் "தூ' வென்று உதைத்துத் தள்ளிவிட்டார் எட்டாவது எட்வர்ட் மன்னர். அதற்குக் காரணமாக இருந்தது காதல். காதல் உறவிலே அவ்வளவு வன்மை இருக்கிறது. அந்த உறவிலே மனிதன் உணர்வின் உச்சநிலையைத் தொட்டுவிடுகிறான்.

மனித வாழ்க்கையிலேயுள்ள பலவிதமான உறவு நிலைகளிலே நின்று, தம் உணர்வுச் செல்வத்தைப் பெருக்கியவர்கள் நம் ஞானிகள். அந்த உணர்வுச் செல்வத்தையெல்லாம், இறைவனோடு ஊடாடுவதில் பயன்படுத்திப் பேறு பெற்றார்கள் அவர்கள்.

இறைவனுக்கு நாமம் இல்லை, உருவம் இல்லை என்ற அறிவு அவர்களுக்கு இருக்கத்தான் இருந்தது. ஆனால், நமது புலனுக்குத் தெரியாத அச்செம்பொருளோடு நெருங்க வேண்டுமே! ஆகவேதான், அப்பொருளுக்கு நாமத்தையும் உருவத்தையும் கற்பித்தார்கள். அதனுடன் நிற்கவில்லை. மனித வாழ்க்கையில் தாம் அநுபவித்த உறவுகளை இறைவனோடு இணைத்து, உணர்வையும், ஈடுபாட்டையும் வளர்த்தார்கள்.

தயிருக்குள்ளே வெண்ணெய் ஒளிந்துகொண்டிருக்கிறது. நமது கண்ணுக்கு அது தெரிவதில்லை. ஆனால், அதற்குள்ளே மத்தை நட்டுப் பொறுமையோடும், ஆர்வத்தோடும் கடைந்தால், வெண்ணெய் திரண்டு கண்முன் வந்து நின்றுவிடுகிறது. அதுபோலவே, உள்ளத்தினுள்ளே ஒளிந்துகொண்டு நிற்கிறது இறைத் தத்துவம். அதற்குள்ளே, "உறவு' என்ற கோலை நட்டு, "உணர்வு' என்னும் கயிற்றினால் கடைந்தால், ஒளிந்து நிற்கும் பரம்பொருள் வெளிப்பட்டுவிடும் என்று கண்டார்கள் நம் முன்னோர்கள்.

"உறவுகோல் நட்டு
உணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக்
கடைய முன்நிற்குமே"

என்றார் அப்பர் சுவாமிகள்.

வெட்ட வெளியாகப் பரந்து நிற்கும் இறைத் தத்துவத்தைப் பார்த்து, "ஏ, மச்சான்!" என்று சொல்லி தோள்மேல் கைபோட்டு உறவாட முடியாது. ஆனால், அந்தப் பொருளுக்குக் "கண்ணன" என்ற நாமத்தைச் சூட்டி, ஆயர்பாடியிலே யசோதையின் மடியிலே விளையாடும்

குழந்தையென்று நினைத்துவிட்டோமானால், அந்தப் பரம்பொருள் நமக்குக் கிட்டேயே வந்துவிடுகிறது. நாமே யசோதையென்று நினைத்துவிட்டாலோ, சொல்ல வேண்டியதில்லை; கையிலெடுத்து, மார்போடு தழுவிக் கொஞ்சிக் குலாவுவதற்குரிய நமது உடைமையாகிவிடுகிறது அப்பரம்பொருள்.

தாய்மையுறவைப் பெரியாழ்வார் எப்படிப் பயன்படுத்துகிறார், அதனால் அவருடைய உணர்வு எப்படிச் செழிப்படைகிறது என்று பார்ப்போம். கண்ணனைத் தொட்டிலில் போட்டுத் தாலாட்டுகிறார் பெரியாழ்வார். மூவுலகையும் அளந்த கால்களுக்குத் துணித் தொட்டில் எம்மாத்திரம்? ஒரே உதையாக உதைத்துத் தொட்டிலைக் கிழித்துவிடுகிறது குழந்தை. உடனே கண்ணனை எடுத்துக்கொள்கிறாள் தாய். அவ்வளவுதான். அவளுடைய இடுப்பிலே ஒரு மிதி மிதிக்கிறான் கண்ணன்; இடுப்பு முறிந்துவிட்டது என்றுதான் சொல்லவேண்டும். இப்படிப் படுத்துகிற பிள்ளையிடத்திலே தாய்க்கு அதிகப் பாசம் ஏற்படுகிறது. அப்படியே கண்ணனை ஒடுக்கி மார்போடு அணைத்துக்கொள்கிறாள். அந்தச் சமயத்திலே, வயிற்றிலே ஒரு பாய்ச்சல் பாய்கிறான் அவன். இப்படிப் படாத பாடெல்லாம் பட்டுக் கண்ணனை வளர்க்கிறாள். அவளுடைய உடம்பு தேய்ந்து மெலிகிறது. மெலிந்தால்தான் என்ன? தாய்க்கு இந்தப் பொல்லாத குழந்தையைப் பற்றிப் பேசும்போதெல்லாம் உள்ளூர ஓர் ஆனந்தம் ஏற்படுகிறது. பாடுகிறார் பெரியாழ்வார்:

“கிடக்கில், தொட்டில்
கிழிய உதைத்திடும்,
எடுத்துக் கொள்ளில்,
மருங்கை இறுத்திடும்,

ஒடுக்கிப் புல்கில்,
உதரத்தே பாய்ந்திடும்,
மிடுக்கி லாமையால்
யான் மெலிந்தேன், நங்காய்.”

தாய்க்கும் சேய்க்கும் இடையே இருக்கும் உறவு, நமக்குத் தெரிந்த உறவு, நம் அநுபவத்துக்கு உட்பட்ட உறவு, நம் உணர்வைத் தட்டி எழுப்பவல்ல உறவு. அந்த உறவை, இறைவனிடத்திலே இணைந்து அவனோடு நாம் ஊடாடும்போது, நம் உணர்வு பெருகுகிறது; ஆணவம் கரைகிறது; ஆனந்தம் மேலிடுகிறது.

குழந்தையாகத்தான் இறைவனைப் பார்க்க வேண்டும் என்பதில்லை. அவனைத் தாயாகக் கொண்டு வணங்கும்போது, உள்ளத்தில் அச்சம் அறவே நீங்கி, தெம்பும், தெளிவும், ஞானமும் பிறக்கின்றன.

பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் நெல்லையில் வாழ்ந்தவர். நெல்வேலியில் கோயில் கொண்டிருக்கும் வேய்முத்தரையும், வடிவம்மையையும் நாள்தோறும் வணங்கும் பரமபக்தர். “தகப்பனைக் காட்டிலும் தாய்க்குக் கருணை அதிகம்,’ என்று தம் குடும்ப வாழ்க்கையிலே உணர்ந்தவர். தம்முடைய குறைகளையெல்லாம் வேய்முத்தரிடத்திலே சொல்லிச் சொல்லிக் கதறுகிறார். ஆனால், வேய்முத்தருக்கு மனம் இளகவில்லை. என்ன செய்வது? தாயினிடத்தில் முறையிட்டால் தகப்பனிடத்தில் சிபாரிசு செய்ய மாட்டாளா என்று நினைக்கிறார்.

“அவர் திரிபுரத்தை எரிக்கப் புறப்படும்போது என்னைப்பற்றிச் சொல்லிவிடாதே, அம்மா. இளக்கமாக இருக்கும் நேரம் பார்த்து, அவரிடம் நயமாக என்னைப்பற்றிச் சொல்லக்கூடாதா? அப்படிச் சொன்னால், உன் வாயில் இருக்கும் முத்து சிந்தியா போகும்?” என்று தாயினிடத்திலே இடித்துச் சொல்லுகிறார்:

“ஆய்முத்துப் பந்தரின்
மெல்லணை மீதுன் அருகிருந்து
“நீமுத்தம் தா’ என்று
அவர்கொஞ்சும் வேளையில், நித்தநித்தம்
வேய்முத்தரோடு என் குறைகளெல்லாம்
மெல்ல மெல்லச் சொன்னால்
வாய்முத்தம் சிந்திவிடுமோ,
நெல்வேலி வடிவம்மையே.”

அப்பாலுக்கு அப்பால் இருக்கும் பொருளைத் தாயாகக் கருதி உறவாடும்போது, அது இப்பாலுக்கு இப்பால் வந்து நம் இதயத்தோடு ஒட்டிக்கொள்கிறது.

இனி, காதல் உறவு எப்படிப் பக்தியுணர்வைத் தூண்டிவிடுகிறது என்று பார்ப்போம்-- “மனுஷப் பயலுக்கு வாழ்க்கைப்பட மாட்டேன். நாராயணனையே என் அழகிய மணவாளனாகக் கொள்வேன்,” என்று உறுதியோடு நோன்பிருக்கிறாள் ஆண்டாள். “கண்ணன்’ என்ற அந்தக் கருந்தெய்வத்தைச் சதா நினைந்து உருகிக்கொண்டிருக்கிறாள். அவளுடைய உடல் வாட்டத்தைக் கண்ட தோழிகளுக்கு அவளுடைய இதயத்தின் நிலை தெரியவில்லை. “டாக்டரை அழைத்து வரட்டுமா?” என்று அசட்டுத்தனமாகக் கேட்கிறார்கள். நொந்துபோயிருக்கும் ஆண்டாளுக்கு இந்த அசட்டுக் கேள்வி மேலும் எரிச்சலை உண்டாக்குகிறது. “வைத்தியமாவது, ஒன்றாவது; என் நோயைத் தீர்க்க, ஒரே ஒரு மருந்துதான் இருக்கிறது” என்று சொல்லுகிறாள். என்ன மருந்து அது? “என்னுடைய தீராக் காதலைத் தெரிந்தும் தெரியாததுபோலப் பாசாங்கு செய்யும் அந்த அரங்கப் பெருமான் இருக்கிறானே, அவனுடைய திருமேனியில் படிந்து கிடக்கும் பட்டுப் பீதாம்பரத்தை எடுத்து வாருங்கள். அவனுடைய வேர்வை மணத்தோடுகூடிய பீதாம்பரத்தை என் முகத்தருகே கொண்டுவந்து வீசுங்கள். என் வாட்டமெல்லாம் தணிந்துவிடும்,” என்று சொல்லுகிறாள்:

“கண்ணன் என்னும் கருந்தெய்வம்
காட்சி பழகிக் கிடப்பேனைப்
புண்ணில் புளிப் பெய்தாற்போல்
புறம்நின்று அழகு பேசாதே,
பெண்ணின் வருத்தம் அறியாத
பெருமான் அரையில் பீதக
வண்ண ஆடை கொண்டென்னை
வாட்டம் தணிய வீசீனிரே.”

என்று ஆண்டாள் பாடும்போது, காமம் பக்தியாக மாறும் ரசவாத வித்தையைக் கண்டு அதிசயிக்கிறோம். நாயக--நாயகி பாவத்தில் கொஞ்ச காலமாவது நின்று இறைவனோடு உறவாடிப் பார்த்தவர்களுக்குத்தான். அந்த உறவால் ஏற்படும் எல்லை மீறிய உணர்வு வளத்தைச் சுவைத்து அநுபவிக்க முடியும். ஆனால், காதல் பாதையில் சென்று இறைவனை அடைவது என்பது சாமானிய மக்களுக்கு எளிதான காரியம் அல்ல. காதலால் ஏற்படும் சுகம் ஒரு பக்கம் இருக்க, அதனால் ஏற்படும் அல்லல், ஆனந்தம், பொறாமை, ஏமாற்றம், பிரிவாற்றாமை-- இவற்றையெல்லாம் சமாளிக்க வேண்டுமென்றால், தன்னையே தியாகம் செய்யத் தயாராக இருக்க வேண்டும். ஆண்டாள், மாணிக்கவாசகர் போன்ற துணிச்சல்காரர்களே காதல் பாதையில் சென்று இறைவனையடைய அருகதை உடையவர்கள்.

இறைவனைத் தாயாகக் கருதி உறவாடுகிறவர்களுக்கு இப்படியெல்லாம் அல்லல்கள் ஏற்படுவதில்லை. என்ன குற்றம் செய்தாலும் மன்னித்தருள வேண்டியது தாயின் பண்பு. அச்சம் இல்லாமல் தாயோடு பழகலாம். வெற்று விரலைத் தாயின் வாயில் வைத்து, “அம்மா, இந்தா

சோறு” என்று சொல்லுகிறது குழந்தை. “அமிர்தமாயிருக்கு, கண்ணே,” என்று தாய் அதை அநுபவிப்பாள். காதலி வாயிலே வெற்று விரலை வைத்தால், என்ன செய்வாள்? கடித்தே போடுவாள்.

நம்மை அடிமையாகவும், இறைவனை ஆண்டவனாகவும் பாவித்து உறவாடும்போதும் அபாயம் ஒன்றும் ஏற்படுவதில்லை; பொறுப்பு முழுவதையும் அவன் ஏற்றுக்கொள்கிறான்; நம் தலைமேலிருக்கும் பாரம் இறங்கிவிடுகிறது. ஆண்டவன் பாராமுகமாக இருந்தால், அவனோடு வழக்காடுவதற்கு அடிமைக்கு உரிமை இருக்கிறது; துடுக்குத்தனமாகக்கூட வழக்காடலாம்.

திருச்செந்தூர் முருகனிடத்திலே போய் இப்படி வழக்காடுகிறார் படிக்காசுப் புலவர் என்ற பக்தர். “இத்தனை நாளும் நீ சிறு பிள்ளையாக இருந்தாய். பொறுப்பில்லாமல் சுற்றிக்கொண்டிருந்தாய். இதுவரையிலும் என்னைக் கவனிக்காமல் இருந்தது சரி. இப்போதோ, நீ மீசைமுளைத்த ஆடவனாகிவிட்டாய். அன்னமும் மயிலும்போல இரண்டு பெண் கொண்ட ஆண்மகன் நீ. இனிமேலும், என்னைக் கவனிக்காமல் இருக்கலாமா? உனக்குப் பொறுப்பு வேண்டாமா?” என்று உரிமையோடு கேட்கிறார்.

“முன்னம் நின் அன்னை அமுதூட்டிப்
பொட்டிட்டு மையிட்டு முத்தமிட்டுக்
கன்னமும் கிள்ளிய நாளல்லவே
என்னைக் காப்பதற்கே.

அன்னமும் மஞ்ஞையும் போல்இரு
பெண்கொண்ட ஆண்பிள்ளை நீ
இன்னமும் சின்னவன்தானோ,
செந்தூரில் இருப்பவனே!”

“கடவுளுக்கு எதற்குப் பெண்டாட்டி?” என்று ஒரு பெரியவர் கேட்டார். கடவுளுக்குப் பெண்டாட்டி வேண்டியதில்லைதான். ஆனால், அவனோடு நாம் இப்படியெல்லாம் நெருங்கி உறவாடுவதற்கு நமக்கு நாமே வசதி செய்துகொள்ள வேண்டுமல்லவா? அதற்காகவாவது, “அன்னமும் மஞ்ஞையும் போலிரு’ பெண்ணை அவனுக்குத் திருமணம் செய்துவைக்க வேண்டும். அப்படிச் செய்யும்போது, உறவு வளர் கிறது. உணர்வு பெருகுகிறது, இறையின்பம் கிட்டுகிறது. ஆகவேதான், சுவாநுபவத்தில் இந்த உண்மையை உணர்ந்த அப்பர் சுவாமி பாடினார்:

“உறவுகோல் நட்டு
உணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய
முன்நிற்குமே.”

**15 நானும்-தானும்**

தக்காளி விதை துக்கிணி போல் இருக்கும்; மிக மிகச் சிறியது. ஆனால், அதை மண்ணிலே விதைத்து நீர் பாய்ச்சிக்கொண்டே இருந்தோமானால், அது செடியாக வளர்ந்து, பூத்துக் குலை குலையாகக் காய்க்கத் தொடங்கிவிடுகிறது. காயும், பூவும், செடியும் அந்தச் சின்னஞ்சிறிய வித்துக்குள்ளிருந்தா வந்தன?

மண்ணுக்குள் இருக்கும் உப்பையும், நீரையும் தக்காளிச் செடியின் வேர் இழுத்துக்கொள்கிறது. ஆகாயத்திலிருந்து சில வாயுக்களைச் செடியின் இலைகள் வாங்கி உட்கொள்ளுகின்றன. இந்தப் பரிவர்த்தனையால், தக்காளிக்கு லாபம்; அது பருத்துப் பெருகுகிறது. ஜடப் பொருள்களுக்கும் லாபம்; அவை உயிர்பெற்று மேல்நிலையை அடைகின்றன. முன்னம் உயிரற்றிருந்த கல்லும், மண்ணும், காற்றும், நீரும் இப்போது தக்காளியோடு இரண்டறக் கலந்து, தக்காளியாகவே மாறிவிட்டன. இப்படியாக, ஜடப்பொருள்களுக்குத் தீட்சை கொடுத்துக் கைதூக்கிவிடுகிறது தக்காளி.

இந்த விந்தையைப் பார்த்தார் ஒரு ஞானி. உயிரற்ற தண்ணீரும், காற்றும் உயிருள்ள தக்காளி விதையைப் பார்த்து, "எங்களையும் உன்னோடு சேர்த்துக்கொள்; எங்களுக்கும் உயிர்ப்பிச்சை கொடு," என்று கேட்பது போல் தோன்றின. ஊனுக்குள்ளே (அதாவது ஜடப் பொருள்களுக்குள்ளே) உயிரை நாடும் ஆசையையும் முனைப்பையும் வைத்தவன் யார்? இறைவனேதான். அந்த ஆசைக்குள்ளே இறைவனல்லவா இருந்து இயங்குகிறான் என்று கண்டார் ஞானி. இந்த முடிவுக்கு வந்த ஞானி இறைவனைப் பார்த்துப் பாடுகிறார். . .

"ஊன் தேடும் உயிரேயோ!"

மற்றொரு காட்சி ஞானியின் இதயத்திலே உருவாகிறது. டைபாய்ட் காய்ச்சலிலே இருபத்தொரு நாள் கஷ்டப்பட்ட நோயாளி ஒருவன்; செத்துப் பிழைத்தவன். அவனுக்கு மறுபடியும் மூன்று வாரம் காய்ச்சல் அடிக்கிறது. உருக்குலைந்து, பாயோடு பாயாய், வாலுந்தோலுமாய்க் கிடக்கிறான். கண் பஞ்சடைந்து விட்டது; உற்றார் உறவினரைக்கூட இனங்கண்டுகொள்ள முடியவில்லை. இசை நுணுக்கங்களை ஆய்ந்து அநுபவித்த அவனுடைய காது அடைத்துச் செவிடாகிவிட்டது. மற்ற இந்திரியங்களும் மேற்படி, மேற்படிதான்.

இந்த நிலையில் இருக்கும் நோயாளிக்குத் தக்காளி ஸூப்பை மருத்துவர்கள் கொடுக்கிறார்கள், கால் கரண்டி, அரைக் கரண்டியாக. கொஞ்சங் கொஞ்சமாக அவனுடைய உடல் தேறிவருகிறது. பத்து நாட்களில், நண்பர்களை இனங்கண்டுகொள்ளத் தொடங்குகிறான்; "வாருங்கள்' என்று உணர்வோடு வரவேற்கிறான்; சங்கராபரண ராகத்தைக் கேட்டு, "சபாஷ்' போட ஆரம்பிக்கிறான். என்ன விந்தை இது! அன்று உயிர் மாத்திரம் ஓடிக்கொண்டிருந்த அவனுடைய உடம்புக்குள்ளே, இன்று உணர்வு எப்படி வந்து தொத்திக்கொண்டது?

யோசனை செய்து பார்க்கிறார் ஞானி. தக்காளி ஸூப் அந்த மனித தத்துவத்தோடு கலந்து, கண்ணுக்கு ஒளியும், காதுக்கு ஒலியும், மனசுக்கு உணர்வையும் கொடுத்துவிட்டது. அப்படியானால், உணர்வற்ற தக்காளி, உணர்வு பெற்றுவிட்டது என்றுதானே சொல்லவேண்டும்! எப்படிக் கல்லும், மண்ணும், நீரும், காற்றும் தக்காளியை அண்டி உயிர்ப்பிச்சை பெற்றனவோ, அப்படியே தக்காளியும், மனிதனை நோக்கித் தவமிருந்து, உணர்வுப் பிச்சையைப் பெற்றுவிட்டது. உயிர் மாத்திரமுள்ள தக்காளி, இப்போது உணர்வுபெற்றுச் சங்கராபரணத்தை அநுபவிக்கக் கற்றுக்கொண்டது. அதற்கு உணர்வுத் தேட்டத்தைக் கொடுத்தவன் யார்? இறைவனேதான்.

இப்பொழுது தெளிந்துவிட்டது ஞானிக்கு, அந்தத் தேட்டத்துக்குள் இறைவன் இருக்கிறான் என்று.

பாடுகிறார்:

“ஊன்தேடும் உயிரேயோ,
உயிர்தேடும் உணர்வேயோ!”

ஊன் உயிரைத் தேடிப் பெற்றபிறகும், உயிர் உணர்வைத் தேடிப் பெற்றபிறகும், தேட்டம் விட்டபாடாக இல்லை; மண் தக்காளியாகி, தக்காளி மனிதனான பிறகும், மனிதன் அதி மனிதனாக விரும்புகிறான். உணர்வைத் தீட்டித் தீட்டி, அண்டத்தையும், பிண்டத்தையும் ஆராய்ச்சி செய்கிறான்; கலைகளை ஆய்கிறான்; ஞான நூல்களை (மறைகளை)த் தேடியலைகிறான்.

உணர்விலே தெளிவுபெற்ற மக்களை “வானவர்கள்’ என்று அழைத்தார்கள் நம் முன்னோர்கள். மறைந்துகிடக்கும் உண்மைகளை, “உணர்வு’ என்ற\ பாதாளக் கரண்டி போட்டுத் துழாவுகிறார்களே, அவர்களுடைய தேட்டத்தில்தான் இறைவன் குடியிருக்கிறான்:

“வான் தேடும் மறையேயோ!”

ஆனால், அந்த மறைகளோ செம்பொருளாகிய இறைவனைத் தேடித் தேடி அலைகின்றன. அவ்வாறு தேடச் செய்தவனும் இறைவனே.

“மறைதேடும் பொருளேயோ!”

இப்படியாக, ஞானியின் காட்சியிலே, ஒரு முடிவற்ற ஓட்டப்பந்தயம், தேட்டப்பந்தயம் நடந்து கொண்டிருக்கிறது. இந்தப் பந்தயத்திலே பேரண்டமே கலந்துகொள்ளுகிறது. இறைவனும் கலந்துகொள்ளுகிறான்.

“கள்ளனைப் பிடி, பிடி” என்று கத்திக்கொண்டு ஓடுகிறது மக்கள் கூட்டம். அந்தக் கூட்டத்தின் நடுமத்தியில் இருந்துகொண்டு, “விடாதே, பிடி” என்று கள்ளனும் கத்திக்கொண்டு ஓடுகிறான். இதையும் பார்த்து அநுபவிக்கிறார் ஞானி:

“தான்தேட, ஜகமெலாம்
    உடன்தேட”

என்று பாடுகிறார்.

இந்தக் காட்சியிலே உள்ளத்தைப் பதித்து வைத்துக்கொண்ட ஞானிக்கு ஒரு பேருண்மை பளிச்சென்று புலப்படுகிறது.

இந்த ஓட்டப்பந்தயத்தில் ஓடி ஓடி இளைத்தேனே. “நான்’ (ஆணவம்) என்றும், தான் (இறைவன்) என்றும் நினைத்துக்கொண்டல்லவா நான் ஓடுகிறேன்? என்ன மடமை இது! எனக்குள் இருந்துகொண்டு தேடவைப்பவன் அவன் அல்லவா? நான், “தானை’ த் தேடுவதா? நான் வேறு, தான் வேறா?

“. . . தன்னைத்தான்,
நான்தேடி நான்காண,
    நான் ஆரோ, தான் ஆரோ!”

என்று முடிவு கட்டுகிறார்.

டார்வினுடைய பரிணாம நெறி, வாழ்க்கையின் குறுகிய அம்சம் ஒன்றைத்தான் விளக்குகிறது. ஆனால், ஞானியின் பரிணாம நெறியோ, மண்ணையும், விண்ணையும் ஆரத் தழுவி பரிபூரணத்தையே விளக்கிவிடுகிறது. பாடல் முழுவதையும் பார்த்தால்
இந்த உண்மை தெளிவாகும்.

"ஊன்தேடும் உயிரேயோ,
உயிர்தேடும் உணர்வேயோ,
வான்தேடும் மறையேயோ,
மறைதேடும் பொருளேயோ,
தான்தேட, ஜகமெலாம்
உடன்தேட, தன்னைத்தான்
நான்தேடி, நான்காண
நான்ஆரோ, தான்ஆரோ!"

இதே உண்மையை எக்ஹார்ட் (Eckhart) என்ற ஜெர்மன் ஞானியும் சொல்லுகிறார். இறைவனை வணங்கிக்கொண்டிருந்தபோது, இந்தத் தெளிவு அவருக்கு ஏற்பட்டது. "இறைவா, நானா உன்னை வணங்குகிறேன்? இல்லை. நீயே உன்னை வணங்கிக்கொள்ளுகிறாய்" ( Am I worshipping Thee, My Lord? No, Thou art nWorshipping Thyself) என்று சொன்னார். இளைச்சுப்போன உரைநடையிலே சொன்னார்.

உள்ளுணர்வோடு உண்மையைக் காணும்போதெல்லாம், அதைப் பாட்டிலே பாடித் தெள்ளேணம் கொட்டுவதே நம் முன்னோர்கள் மரபு. இதே விஷயத்தைத் திருமூலர் எப்படி அனுபவிக்கிறார் என்று பார்ப்போம்... "நான்' வேறு, "தான்' வேறு என்று தவறாக நினைத்துக்கொண்டு இறைவனைத் தேட ஆரம்பித்தார் திருமூலர். தேடிக்கொண்டிருக்கும்போது, உள்ளிருக்கும் இறைவன், "நான் என்றும், தான் என்றும் இரண்டில்லை" என்பதை அவருக்கு உணர்த்திவிட்டான். அந்தக் கணத்திலேயே, "நான்' என்ற நினைப்பு அவரைவிட்டு ஒழிந்தது.

"நான் என்றும் தான் என்றும்
நாடினேன், நாடலும்
நான் என்று தான் என்று
இரண்டில்லை என்பதை
"நான்' என்ற ஞான
முதல்வனே நல்கினான்;
நான் என்று நானும்
நினைப்பொழிந் தேனே"

என்று வியந்து பாடுகிறார்.

"நான்' என்ற வில்லங்கம் அற்ற பிறகு, வணங்குவதற்கு ஆள் கிடைக்கவில்லை திருமூலருக்கு.

"நான் வரைவற்றபின், யாரை வரைவது?
"நான்', "அவன்' ஆனபின், யாரை நினைவது?"

என்று சொல்லிக் கொட்டம் அடிக்கிறார். பார்ப்பவன் வேறு, பார்க்கப்படும் பொருள் வேறு என்ற துவைத நிலையிலே, கடவுள் வழிபாட்டுக்கு இடம் இருக்கிறது; இந்த நிலையில் தவமும்

தியானமும் அர்ச்சனையும் செய்துகொண்டே இருக்கலாம். இரண்டு தத்துவமும் ஒன்றித்துவிட்டால் தவம் ஏது? தியானம் ஏது? அர்ச்சனை ஏது?

ஆணவ மயக்கத்தை இழந்து, பரம்பொருளோடு இரண்டும் ஒன்றறக் கலந்தபிறகு, திருமூலருக்கு இந்த நிலை ஏற்படுகிறது.

"தன்னையே அர்ச்சிக்கத்
தான் இருந்தேனே"

என்று கூத்தாடுகிறார். இதுவே பேரின்ப நிலை; "நான்' அற்றுத் "தான்' ஆகும் நிலை.

## 16 தவம்

மனித மனம் அலட்டிக்கொண்டே இருக்கிறது, ஒரு நிலையில் நிற்பதில்லை. போதாக்குறைக்கு, மனித உடலிலே ஐந்து மடைகள் வைக்கப்பட்டிருக்கின்றன, ஐம்புலன்களாகிய மடைகள். இம்மடைகள் வழியாக உலகச் செய்திகள், மனசுக்குள்ளே பாய்ந்தவண்ணம் இருக்கின்றன. புறச்செய்திகள் வந்து பாயாமலிருக்கும்போதே, இந்த மனம் மருகுவதும், மயங்குவதுமாயிருக்கும். வெளிச்செய்திகள் வேறு மனசைத் தாக்கியவுடன், சொல்லவே வேண்டியதில்லை. ஒரே குரங்கு ஆட்டந்தான்.

இந்தக் குரங்காட்டத்தை மட்டுப்படுத்தி மனசை ஒரு நிலையில் நிறுத்துவதுதான் தவம். தவத்தின் மூலம் சிதறுண்டு கிடக்கும் சக்திகள் ஒருமுனைப்படுகின்றன; என்றும் இல்லாத ஆற்றல் தவத்தால் நமக்குக் கிட்டுகிறது.

"நில்லென்று சொல்லி மனம்
நிலைநிறுத்த வல்லார்க்குக்
* "கொல்' என்று வந்தயமன்
குடியோடிப் போனானே"

என்று சொன்னார் ஒரு சித்தர். நோற்றலால், அதாவது, தவத்தால் ஏற்படும் ஆற்றல் எப்படிப்பட்ட தென்றால், கூற்றத்தையே அது உதைத்துத் தள்ளிவிடுமாம்.

"கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு"

என்று சொன்னார் வள்ளுவர்.

நம் உள்ளத்தில் தூய்மையும், கட்டுப்பாடும் வளர வளர, நம் எண்ணத்துக்கே வலுவேறுகிறது. உலக நிகழ்ச்சிகளையே பாதிக்கும் சக்தி நம் கருத்துகளுக்கு ஏற்படுகிறது. ஜட உலகத்தில் அணுகுண்டுக்கு இருக்கும் ஆற்றலைக் காட்டிலும் வன்மையுடையது நோன்பிருந்து, மனசைக் கட்டுப்படுத்தியவனுடைய எண்ணம். பகைவர்களை அழிக்கும் சக்தி அதற்கு இருக்கிறது. நண்பர்களுக்கு ஆக்கம் கொடுக்கும் சக்தியும் அதற்கு இருக்கிறது.

இந்த உண்மையை ஒரு குறள் கூறுகிறது:

"ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின், தவத்தால் வரும்."

"வேண்டியதை வேண்டியபடியெல்லாம் அடையும் சக்தியைத் தவம் நமக்குக் கொடுக்கிறது. ஆகையால், இப்பொழுதே, இங்கேயே தொடங்குங்கள் உங்கள் தவத்தை!" என்று கட்டளை போடுகிறார் வள்ளுவர்.

"வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்."

தவத்தின் சக்தி இவ்வளவு சிறப்பானது என்று தெரிந்தும், அதை மேற்கொள்ளாமல் இருக்கிறார்களே மக்கள்! இதன் காரணம் என்னவென்று வள்ளுவர் அதிசயிக்கிறார். அவருக்குச் சிரிப்பு வருகிறது. நகைச்சுவையோடு ஒரு காரணத்தைக் கற்பிக்கிறார். "தவம் செய்யும் துறவிகளுக்கு, உணவு முதலிய வசதிகள் செய்ய வேண்டும், அவர்களைப் போற்ற வேண்டும். நாமும் தவம் செய்யத் தொடங்கிவிட்டால் துறவிகளைப் பேணுவதற்கு ஆள் இல்லாமல்

போகுமே என்று நினைத்து, அவர்கள் தவத்தைக் கைவிட்டு விட்டார்களோ! தவசிகளை மதிப்பது அவர்களுடைய தவத்துக்காக. அப்படியானால் தவசிகளை மதிப்பதிலேயே பொழுதைப் போக்கிவிட்டு, தவச்செயலைச் செய்வதை அவமதிக்கலாமா?" என்று கேட்கிறார்.

"துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்!"

சுவையான கேள்வி இது!17

புலால் மறுத்தல்

தன்னலக் கலப்பில்லாத அன்பை "அருள்' என்று சொன்னார் வள்ளுவர். அருளால் நிறைந்து ததும்புகிறவர்கள் எப்படியிருப்பார்கள், அவர்களுடைய வாழ்க்கை முறை எவ்வாறு இருக்கும் என்பதை இந்த அதிகாரத்தில் விளக்குகிறார். இன்னொரு உயிருக்குத் துன்பம் வந்தால் அருளாளர்கள் அதைச் சகிக்கமாட்டார்கள். நாமெல்லாம் நமக்கு அல்லது நம் குடும்பத்துக்குத் துன்பம் வந்தால் பதைபதைப்போம்; அயலானுக்கு வந்த துன்பம் நம்மைப் பாதிப்பதில்லை. அருளாளர்கள் அப்படியிருக்க மாட்டார்கள். "He is truly cultured man who has a sense of contemporary tragedy" என்று சொன்னார் ஒரு ஆங்கில அறிஞர். நாம் வாழும் இவ்வுலகத்திலே தொலை தூரத்துக்கப்பால் உள்ள ஒரு நாட்டில் ஓருயிர் அல்லலுறுகிறது என்று தெரிந்தால், அவர்களுக்கு உறக்கம் வராது. பங்களாதேஷிலே லக்ஷக்கணக்கான மக்கள் அல்லற்படுகிறார்களே, வியட்நாமிலே குருதிவெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறதே என்று நாள்தோறும் கேட்டுக்கொண்டிருக்கும் நாம் குத்துக்கல்லாக அல்லவா இருக்கிறோம்; கொஞ்சங்கூட நமக்கு மனவேதனை ஏற்படுவதில்லை. எல்லாம் கருணையில்லாத காரணந்தான்.

"உன் உடம்பைக் கொழுக்க வைப்பதற்காக இன்னொரு உடம்பைக் கொன்று, நெய்யும், கடுகும் போட்டுத் தாளித்து உண்கிறாயே நீ, உனக்கெப்படி அருள் உண்டாகும்?" என்று கேட்கிறார் குறளாசிரியர்.

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்?

என்றார்.

உலக மக்கள் அமைதியாக, இன்பமாக வாழவேண்டும் என்றால், ஒவ்வொருவரும் பிற உயிர்களை மதிக்க வேண்டும், போற்ற வேண்டும். அதுவே அறங்களில் எல்லாம் தலையாய அறம். பிற உயிர்களை மதிக்காவிட்டாலும் துன்புறுத்தாமலாவது இருக்கலாம். துன்புறுத்தாமல் இருந்தாலே அதை அறவினையெனறு சொல்லலாம். அப்படிச் செய்யாமல், பிற உயிர்களைக் கொல்லுவோமானால், தின்பதற்காகவே கொல்லுவோமானால், பிற உயிர்களை அவமதிக்கும் குணமே நம்மிடம் வளர்ந்து பெருகும். பிறரை அவமதிப்பதிலிருந்து முளைப்பவைதான் மற்ற கெட்ட குணங்கள் எல்லாம்.

"அறவினை யாதெனில் கொல்லாமை, கோறல்
பிறவினை எல்லாம் தரும்."

கொலைகாரன் வாழ்க்கைப் பிரச்னைகளை அணுகும் முறையே அலாதியாயிருக்கும்; ஈவு, இரக்கம் இல்லாமல் அணுகுவான். ஆனால், கொல்லாமையை விரதமாக மேற்கொண்டவன் வாழ்க்கைப் பிரச்னைகளைக் கருணையோடு, பரிவோடு, தியாக புத்தியோடு அணுகுவான். மனித வாழ்க்கை பக்திக்கும், வணக்கத்துக்கும் உரியது என்று அவன் எண்ணுவான். இப்பேர்ப்

பட்ட பக்தனை, தியாகியை உலகங்கள் எல்லாம் கைகூப்பித் தொழும் என்று உறுதி கூறுகிறார் வள்ளுவர்.

“கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்.”

“நான் கொல்லவில்லையே. மற்றவன் கொன்ற பிராணியின் புலாலைத்தானே விலைகொடுத்து வாங்கி உண்ணுகிறேன்” என்று வாதம் செய்கிறோம் நாம். வள்ளுவருடைய எதிர்வாதம் இது: “ஊன் தின்பதற்கு ஆள் இல்லையென்றால், அதை விற்றுப் பிழைப்பவர்களும் இல்லாமல் போவார்கள்.”

“தினல்பொருட்டால் கொள்ளாது உலகெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்.”

பொல்லாத ஆசாமி இந்த வள்ளுவர்! வாதத்தாலும் அவரை வெல்ல முடியாது!

*1971-இல் சென்னை வானொலியில் ஒலிபரப்பப்பட்டது.

**18 அருளுடைமை**

"இந்த எலும்புக் கூட்டுக்குள்ளே எப்படி உயிர் வந்து குந்திக்கொண்டது? இதன் மர்மம் என்ன?' என்பதை ஆராயப் புகுந்தார் வள்ளுவர். பொருந்தாத இவ்விரண்டு சரக்குகளையும் பொருத்தி வைத்தது "அன்பு' என்ற சக்திதான் என்று முடிவு கட்டினார்.

"அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போ டியைந்த தொடர்பு"

என்பது வள்ளுவர் தீர்ப்பு.

ஆனால், உடம்புக்குள் அடைபட்ட உயிர் ஊனுடம்புக்குக் குற்றேவல் செய்யத் தொடங்குகிறது. உடம்பேதான் உயிர் என்றுகூட நாம் மயங்குகிறோம்.

இப்படி மயங்கும் நமக்கு வாழ்க்கையிலே பல திறம்பட்ட உறவுகள் ஏற்படுகின்றன. தாய், தகப்பன், உடன்பிறந்தோர், மனைவி, மக்கள், சுற்றத்தார், சமுதாயம், நாடு, உலகம்-- இப்படியாக நம் உறவுகள் விரிந்துகொண்டே போகின்றன. நம் உறவு விரிய விரிய, நமக்காகவே நாம் வாழ்கிறோம் என்ற உணர்வு தேய்ந்துகொண்டே போகிறது.

தொடக்கத்தில், ஆணவத்தை, அதாவது நம்மையே அடிப்படையாகக் கொண்டிருந்த அன்பு, நாளாவட்டத்தில் பிறர் நலத்தையே அடிப்படையாகக் கொண்ட அன்பாக மலர்கிறது, மலரவேண்டும். தன்னலமற்ற இந்த அன்பையே "அருள்' என்று அழைக்கிறார் வள்ளுவர்.

அன்புக்கும், அருளுக்கும் உள்ள வேற்றுமையை ஒரு உதாரணத்தின் மூலம் விளக்கிக்கொள்ளலாம். ஆதியில் மகாத்மா காந்திக்கு உறுதுணையாக இருந்தவர்கள் இருவர்-- மகமத் அலி, ஷௌகத் அலி என்ற சகோதரர்கள். அவர்கள் மகாத்மாவைப் பிரிந்து அவருக்கு நேர் விரோதிகள் ஆனார்கள் பிற்காலத்திலே. பிரிவுக்கு என்ன காரணம்? அலி சகோதரர்கள் காந்திஜியிடம் அளவுகடந்த பற்று வைத்திருந்தார்கள். ஏகபோக உரிமையோடு அவரது நட்பை அனுபவிக்க வேண்டும் என்று துடித்தார்கள்-- காதலனுக்குக் காதலியிடமிருக்கும் அன்பைப் போன்றது அவர்களுடைய அன்பு. ஆணவத்தை அடிப்படையாகக் கொண்ட அன்பு அது. கற்கண்டைக் கண்டதும் சப்புக் கொட்டுகிற குழந்தையின் அன்பைப் போன்றது அது.

"கற்கண்டு எனக்கு ருசியைக் கொடுக்கிறது. அதனால் அது எனக்கு வேண்டும். கற்கண்டு என்னைப்பற்றி என்ன நினைக்கிறது என்பதைப்பற்றி நான் சிந்திப்பதில்லை." அலி சகோதரர்களுடைய அன்பின் நிலை இப்பேர்ப்பட்டது.

இதேவிதமான அன்பை காந்திஜியும் தம்மிடம் செலுத்துவார் என்று எதிர்பார்த்து அவர்கள் ஏமாறினார்கள். ஆனால், மகாத்மாவோ ஆணவச் சிறையினின்றும் விடுதலை அடைந்தவர். ஆணவமற்ற அன்பு, அவருடைய அன்புதான். தன் குடும்பம், தன் சமுதாயம், தன் நாடு, எல்லாவற்றையும் கடந்து நின்றது அவருடைய அன்பு. "எல்லோரிடத்திலும் செலுத்துகிற அன்பைத்தானே இவர் நம்மிடம் செலுத்துகிறார். நமக்கென்று தனி அன்பைக் காட்டவில்லையே" என்று மனம் நொந்துகொண்டார்கள் அலி சகோதரர்கள். தன்னலமற்ற காந்திஜியின் அன்பைத்தான் அருளுக்கு உதாரணமாகச் சொல்லலாம். நவகாளியில் இருந்து--முஸ்லிம் கலகம் நடந்தது. அந்தக் கலகத்தில் தலையிட்டால் தம் உயிருக்கு அபாயம் ஏற்படுமே என்று அவர் தயங்கவில்லை. குருதி வெள்ளத்தில் குதித்தார், அருள் வெள்ளத்தில் குதிப்பது போல்! மற்ற உயிர்களைப் போற்றிவாழும் அருளாளர்களுக்கு, தம் உயிரைப்பற்றிக் கவலையில்லை; அச்சம் இல்லை. இந்த உண்மையை எவ்வளவு உணர்ச்சியோடு எடுத்துச் சொல்லுகிறார் குறளாசிரியர்!

“மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை.”

*1971-இல் சென்னை வானொலியில் ஒலிபரப்பியது.

**19 சமயச் சடங்குகளும், டி.கே.சியும்**

ஃபிரான்ஸ் நாட்டிலே பத்தொன்பதாவது நூற்றாண்டில் ஒரு டி.கே.சி. வாழ்ந்தார். அவருடைய பெயர் மல்லார்மே (Mallarme). மிகச்சிறந்த ரஸிகர்; கவியுங்கூட. "கவிதையே என்னுடைய சமயம்" என்று துணிந்து கூறியவர். கவிதையின் உளப்பாட்டை உள்ளுணர்வோடு அறிந்த காரணத்தால் அவர் அப்படித் துணிந்து கூறினார். அதோடு நிற்கவில்லை. உணர்வற்றவர்கள் கவிதையோடு பழகும்போது கவிதா தேவிக்கே அபாயம் ஏற்படும் என்றுணர்ந்தவர் அவர். ஆகவேதான், அவர் சொன்னார்: "கவிதைக்கென்று தனிச்சடங்குகள் உண்டாக்கி அதை முடாக்குப் போட்டுப் பாதுகாக்க வேண்டும். இல்லாவிட்டால், கவிதையுணர்வு அற்றவர்கள் கவிதையில் கைவைத்து அதைத் தீட்டுப்படுத்திவிடுவார்கள்" என்று.

உண்மைகளைக் கண்டு அனுபவித்த நம் முன்னோர்களுக்கும் மல்லார்மேவுக்கு ஏற்பட்ட அதே அச்சம் ஏற்பட்டது. புல்லர்கள் அவ்வுண்மைகளின் புனிதத்தன்மையை உணராமல் அவற்றை உதாசீனம் செய்துவிடுவார்களே அல்லது கேவலப்படுத்திவிடுவார்களே என்று பயந்தார்கள். ஆகவே, அவர்கள் அழகிய சடங்குகளைக் கற்பனை செய்து, அச்சடங்குகளுக்குள் உண்மைகளைப் பொதிந்துவைத்துக் காபந்து செய்திருக்கிறார்கள்.

ஆனால், நாளாவட்டத்தில், சடங்குகளின் பொருள் நமக்குப் புலப்படாமல் போய்விட்டது; சடங்குக்குள் இருக்கும் உண்மையையும் நாம் அனுபவிக்க இயலாமல் போய்விட்டோம். டி.கே.சியைப் போன்ற ஞானிகள், அவற்றை விளக்கும்போதுதான், நமக்குச் சடங்குகளின் மர்மம் தெரிகிறது. தெரிந்ததும், தெளிவும் ஆனந்தமும் ஏற்படுகின்றன.

"நம்முடைய வீட்டுச் சடங்குகள், கோயில் வழிபாடுகள், சமயக் குறியீடுகள், இவைகளில் எல்லாம் (மக்கள் எவ்வளவு தவறாக எண்ணி நடந்தபோதிலும்) ஒரு அடிப்படையான உண்மை, அதாவது, பயன் இருக்கவே செய்யும். காலதேச வர்த்தமானங்களுக்குரிய "டிஸ்கவுண்டுகளை' க் கழித்துப் பார்த்தால், நம் முன்னோர்களைவிட பண்பட்டவர்கள் கிடையாது என்றே சொல்லத் தோன்றும்" என்று, டி.கே.சி. ஒரு கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

சமுதாய வளர்ச்சியிலே சடங்குகளுக்கு ஒரு முக்கியமான ஸ்தானம் உண்டு என்பதைக் கண்டவர்கள் டி.கே.சி. ஆனால், சடங்குகளின் பொருளை இழந்துவிட்டு சடங்குகளை மாத்திரம் உடும்புப் பிடியாகப் பிடித்துக்கொண்டு தொங்குகிற சமுதாயம் டி.கே.சி.யின் ஏளனத்துக்கு இலக்காகிறது. நண்பர் சதாசிவம் வீட்டிலே நடந்த ஒரு திருமணத்தைப்பற்றி டி.கே.சி. எழுதிய கடிதம் வருமாறு:

"இங்கே ஒரே கும்மாளிதான். எல்லாருமாகச் சேர்ந்து பெண்ணைத் தாக்குகிறது. மாப்பிள்ளையும் அதில் கலந்துகொள்வான். அப்படியே மாப்பிள்ளைக்கும் மண்டகப்படி நடக்கும். அதில் பெண் சேர்ந்து கொள்ளும். அப்படியானால், கும்மாளிக்குக் கேட்பானேன். இந்த வேடிக்கைகளைப் பார்க்க ரூ.5 கொடுத்து டிக்கெட் வாங்கலாம். இப்படியெல்லாம் கோலாகலமாய் இருக்கிற சந்தர்ப்பத்தில், கரடியை பிராமண போஜனத்தில் விட்டமாதிரி, பத்துப் புரோகிதர்கள் இன்று காலை வந்து மாப்பிள்ளைக்காக ஒரு கிரியை நடத்தினார்கள். ஓமம் வளர்த்தார்கள். காற்றுவாக்கில் மாப்பிள்ளை, சதாசிவம், எம்.எஸ். மூன்று பேரையும் ஓம குண்டத்தை ஒட்டி உட்காரச் செய்தார்கள். ஓமாக்கினியும், புகையும் மூவரையும் வேண்டுமென்றே தாக்கின; அவைகளோடு வர்மம் நிற்கவில்லை. புரோகிதர் சம்ஸ்கிருதத்தில் மந்திரங்களை அசுரக் குரலில் உச்சரித்தார்.

அனேகமாய், "இங்கே உட்காரு, எழுந்திரு, உட்காரு, கையை நீட்டு, என் கையில் போடு, கிழக்கே பார்த்து உட்காரு, அவர் கையில் இதைப் போடு" என்பதற்கான மந்திரங்கள். வளைத்து, வளைத்து சொல்லிக்கொண்டே இருந்தார்கள். 2-மணி நேரம் எல்லாரையும் பாடாய்ப்

படுத்திவிட்டார்கள். பொருளோ இல்லை, மடக்கி மடக்கிச் சொல்லலாம், யாருக்கும் விளங்குவதில்லை. இப்படி ஒரு சமுதாயத்தைப் பல நூற்றாண்டுகளாக, ஹிம்சைக்கு உள்ளாக்கியிருக்கிறார்கள். பிறகு, யோசனை ஏது? எல்லாம் கிளிப்பிள்ளை மயம். சம்ஸ்கிருதம் விட்ட பாக்கியை, இங்கிலீஷ் வந்து பூர்த்தி செய்துவிட்டது. ஆனால், சங்க நூல்கள் வந்து அவர்களை ஒன்றும் செய்யவில்லை. அவ்வளவுக்கு அவர்கள் தப்பினார்கள்.

நமக்கோ, ஓமகுண்டம், சம்ஸ்கிருதம், இங்கிலீஷ், சங்கத்தமிழ் நாலுமே வந்து குட்டிச்சுவர் அடித்துவிட்டன.

உண்மையில், கிரியைகள் சந்தோஷத்தை உண்டுபண்ண வேண்டும். பொருள் இருக்க வேண்டும். எல்லாரும் அனுபவிக்க வேண்டும். இதற்கெல்லாம் நேர்மாறாக நம்மை ஹிம்சைக்கு உள்ளாக்குகின்றன.

கிரியைகள், அலங்காரமாய் ஆனந்தத்தை விளைக்கக்கூடியனவாய் இருந்துவிட்டால், நம்முடையவர்களுக்கு புத்தியே வந்துவிடும். எல்லாத் துறைகளிலும் நிபுணர்கள் ஆகிவிடுவார்கள். உண்மையோடு ஒட்டிப் பேசுவார்கள். தில்லை நடராஜர் கோயில் திருவாதிரை உத்ஸவத்தில் பக்த ஜனங்களுக்கு இரண்டு மணி நேரம் ஒரு ரிட்டயர்ட் ஜில்லா ஜட்ஜ் ஆங்கிலத்தில் பேசினார் என்ற அபவாதம் ஏற்படுமா!

அர்த்தமில்லாமல் பேசுகிறது என்பது அளவற்ற கேட்டுக்கு விளைநிலம்.

“நயனில சொல்லினும்
சொல்லுக, சான்றோர்
பயனில சொல்லாமை
நன்று”

என்றார் குறளாசிரியர். இப்போது எங்கே பார்த்தாலும் பயனில் சொல்லைத்தானே காண்கிறோம். காரணம், மேலே சொன்னபடி மூன்று: வடமொழி, இங்கிலீஷ், செந்தமிழ்.

டி.கே.சி. சொன்னதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது மூன்று:

(1) சடங்குகள் பொருள் பொதிந்தனவாய் இருக்க வேண்டும்.
(2) கேட்பவர்களுக்குப் புரியக்கூடிய மொழியில் சடங்கு மந்திரங்கள் அமைய வேண்டும்.
(3) மேற்சொன்னவாறு சடங்குகள் அமைந்துவிட்டால், சமுதாயத்தில் ஆனந்த வளம் பெருகும். விஞ்ஞானம், தத்துவம், கலை, கல்வி எல்லாம் மேலோங்கி வளரும்.

“மொத்தத்தில், ஆனந்தத்தை வளர்ப்பதற்குரிய வழிகளையறிந்து பிராமணர்கள் தம் சமுதாயப் பழக்கங்களையும், சடங்குகளையும் அமைத்திருக்கிறார்கள். ஆனால், பிராமணரல்லாதாரோ, துன்பத்தை நீடிக்கச் செய்யும் வகையில் பல பழக்கங்களை மேற்கொண்டிருக்கிறார்கள்” என்று, அடிக்கடி டி.கே.சி. சொல்லுவார்கள்.

“உதாரணமாக, ஒரு பிராமணன் வீட்டிலே சாவு ஏற்பட்டால் உடனே பிரேதத்தை ரேழியில் இழுத்துக்கொண்டுவந்து போட்டு, அக்கம்பக்கத்தாரை எதிர்பார்க்காமல் தகனக் காரியங்களை முடித்துவிடுவான். ஆனால், பிராமணரல்லாதவன் இழவுச் சடங்கை 16 நாள் இழுத்துக் கடத்தி, தன்னைத் துன்புறுத்திக்கொள்வதோடு மற்றவர்களையும் துன்புறுத்துவான். கலியாண காரியம் ஆனந்தத்தைக் கொடுப்பதால், பிராமணன் அதை நாலைந்து நாள் நீட்டிவைத்து அனுபவிப்பான். ஆனால், “நம்ம பயல்” ஒரே நாளிலே அதை, சட்புட்டென்று முடித்துவிடுவான்” என்று ஆற்றாமைப்படுவார்கள் டி.கே.சி.

ஆனால், சைவ மடங்களிலாவது ஆனந்தம் கொடுக்கும் சடங்குகளைக் காப்பாற்றி வருகிறார்களே என்று டி.கே.சி. திருப்தியடைவார்கள். தருமபுரம் மடத்திலே தங்கியிருந்தபோது அவர்கள் எழுதிய கடிதம் வருமாறு: "இரண்டு நாளாக மடத்தில் தங்குகிறோம். தமிழ் நாட்டுப் பண்பாடு நிறைந்த நிலையத்தில் தங்குகிறோம். மகாசந்நிதானம் நடத்துகிற பூஜையும், பக்தியும் வெகு ரம்மியம் ஆனவை. சைவத்தின் அழகும், ஆனந்தமும் மனசுக்கு உவந்தவை. இத்தகைய சமயப் பண்பாட்டை வேறு எங்கும் காணமுடியாதுதான்.

சாந்தி நிகேதனத்துக்குப் போய்த்தானிருக்கிறேன். சமயப் பண்பாடு என்றால், வறண்ட நிலைதான். கிறிஸ்து மார்க்கத்தின் சாயல்தான். பிரார்த்தனைக்கான இடத்தைச் சுற்றிக் கல்லறைகள் இல்லை. அவ்வளவுதான்.

இங்கோ, மூர்த்தி என்ன, தீபாராதனையின் அழகு என்ன, பாடல் என்ன, எல்லாம் கண்ணையும், மனசையும் கவர்ந்துவிடுகின்றன. சாந்திநிகேதனில் எல்லாம் லெக்சர்தான்."

கவி ரவீந்திரநாத் தாகூர், ஆனந்த அனுபவம் நிறைந்தவர்தான். ஆனாலும் அவருடைய ஆனந்தத்தை அவருக்குப் பின்வரும் சந்ததியாருக்கு அவரால் வழங்க முடியவில்லை. ஆகவேதான் சாந்தி நிகேதனத்தில் எஞ்சி நிற்பதெல்லாம் விருதா லெக்சர்தான் என்பது டி.கே.சி.யின் கருத்து.

அப்படியானால், ஆனந்தத்தை ஒரு சமுதாய அனுபவமாக நிலைநிறுத்துவதற்கு வழியென்ன என்பதை "சரஸ்வதி அல்லது மனோ தத்துவம்' என்ற "இதய ஒலி' கட்டுரையில், மிகுந்த நுணுக்கத்தோடும் கலைப்பாங்கோடும் டி.கே.சி. எடுத்து விளக்கியிருக்கிறார்கள். அவர்களுடைய விளக்கத்தைச் சற்று காது கொடுத்துக் கேட்போம்.

டி.கே.சி. பேசுகிறார்கள்: "இயற்கை தன் மடிக்குள் ஒளித்து வைத்திருக்கிற அதிசயங்களைக் கண்டு பிடிக்க முயல்வதிலும், கண்டுபிடிக்கிற திறத்திலும், கண்டுபிடித்தவுடன் உண்டாகும் ஆனந்தத்திலும் மனிதன் தனித்தே நிற்கிறான். இதோடு நிற்கவில்லை; அந்த ஆனந்தத்தை மற்ற மக்களுடன் கூடி அனுபவிப்பதிலும், தலைமுறை தலைமுறையாக மக்கள் சமுதாயம் அனுபவிக்கும்படியான விழாக்கள் ஏற்படுத்துவதிலும், நூல்கள் எழுதி வைப்பதிலும் அப்படியே தனித்து நிற்கிறான்.

சூரிய கிரகணம் பத்து நாழிகைக்கு ஆரம்பிக்கும் என்றால், ஒன்பதரை மணிக்கே முற்றத்திலும், தெருவிலும் வந்து அண்ணாந்து பார்க்க ஆரம்பித்து விடுவார்கள்.

கிரகணம் பிடிக்க ஆரம்பித்தவுடன் ஐந்து வயதுப் பேரன் அறுபது வயதுப் பாட்டனுக்குச் சுட்டிக்காட்டுகிறான். அப்படியே மாறி, பாட்டன் பேரனுக்குக் காட்டிப் பரவசமாகிறான். பெண்டுகள் தாளிதத்தையே விட்டுவிட்டு முற்றத்துக்கு ஓடிவந்து அண்ணாந்து பார்க்கிறார்கள். அடுத்த வீட்டு அக்காளையும், பாட்டியையும் உரக்கக் கூப்பிட்டுப் பார்க்கச் சொல்லுகிறார்கள். அவர்களும் அண்ணாந்து பார்த்து கன்னத்தில் கைவைத்த வண்ணமாய் அதிசயித்து நிற்கிறார்கள். இவையெல்லாம் உண்மை ஒன்றைக் கண்டுகொள்ளுவதில் உண்டாகும் உவகையிலிருந்து நிகழ்கின்றன.

இப்படி உண்டாகிற சமுதாய உணர்ச்சியிலும், உத்ஸாகத்திலும் இருந்துதான் சூரிய கிரகணத்தையே விழாவாக ஏற்படுத்தி ஆயிரக்கணக்கான வருஷங்களாக கொண்டாடி வந்திருக்கிறார்கள்.

சூரியன் தெற்கு ஓரத்திலிருந்து வடக்கு முகமாகச் செல்ல ஆரம்பிக்கும் முறைமையைக் கண்டு அனுபவித்து சங்கராந்திக் கொண்டாட்டம் ஏற்பட்டது. அப்படியே, ஆடி மாதம் காவேரிக்கரையெல்லாம் பதினெட்டாம் பெருக்கின் விழாக் கொண்டாட்டம்.

ஆகவே, இயற்கையில் நிகழும் நிகழ்ச்சிகளில் பதுங்கிக் கிடக்கும் உண்மையைக் கண்டுகொண்ட மாத்திரத்தில் மக்களுக்கு மனம் பூரிக்கிறது.

மக்கள் ஒழித்த மற்றப் பிராணிகளிடத்தில் முடியாத காரியம் இது. எந்த மாட்டு மந்தையாவது சூரிய கிரகணத்தை அண்ணாந்து பார்க்குமா? அண்ணாந்து பார்க்கத்தான் அதால் செய்ய முடியுமா?"

இவ்வாறு விளக்கம் கொடுத்துவிட்டு, சரஸ்வதியை வெண்தாமரை மலர்மேல் உட்கார்த்தி வைத்திருக்கிறோமே, அந்தச் சடங்கின் மர்மத்தை டி.கே.சி. சொல்லுகிறார்கள்: "பேரண்டத்திலுள்ள பொருள்களிலெல்லாம் சிறந்த பொருள் மனிதன். மனிதனிடத்தில் உள்ள பொருள்களிலெல்லாம் சிறந்தது மனசு. இத்தகைய அதி அற்புதமான பொருள்-- மனசு -- எப்படி உற்பத்தியாயிற்று, ஏன் மற்ற ஜீவராசிகளிடத்து காணப்படுதல் இல்லை என்றெல்லாம் மக்களில் சிலர் எண்ண ஆரம்பித்தனர். ஜடப் பொருளான நம் உடலுக்குள் மனசின் தத்துவங்கள் ஒவ்வொன்றாக வளர்ந்து தெளிவடைந்து பிரகாசிப்பதை நோக்கும்போது, "இருள் மயம்' என்று சொல்லக்கூடிய தண்ணீர்த் தடாகத்திலிருந்து முளைத்து எழுந்து மலர்ந்த வெண்தாமரை மலர் ஞாபகத்துக்கு வருதல் இயல்பு. வெண்தாமரை ஒன்று பூப்பதில் எவ்வளவோ அற்புதம், எவ்வளவோ தெய்வீகத் தத்துவம். அப்படியே, உள்ளுணர்வு முளைத்தெழுந்து வளர்ந்து பிரகாசிப்பதிலும் எவ்வளவோ அதிசயமும் தெய்வீகத் தத்துவமும் நிறைந்து கிடக்கின்றன. இத்தகைய கருத்துக்களிலிருந்து "சரஸ்வதி' என்ற தெய்வத்தை உள்ளத்தின் பாவனை செய்யவும், அத்தெய்வத்தைச் சமரசப்படுத்தி அந்த வெண்தாமரை மலரின்மீதே ஏற்றிவைக்கவும் ஏற்பட்டது. நாளாவட்டத்தில் வெள்ளைக் கலையும், வெள்ளைப் பணியும் அவளுக்குக் கிடைத்தன."

இப்படியாக, சமயக் குறியீடுகளுக்கும், அடையாளங்களுக்கும், சடங்குகளுக்கும் டி.கே.சி. வியாக்யானம் கொடுப்பார்கள். பிறைச்சந்திரனையும், கங்கையையும் சிவன் தலைமேலே ஏற்றிவைத்ததற்குள்ள காரணங்களைத் தெளிவு செய்வார்கள். நடராஜ மூர்த்தியின் ஆனந்த நடனத்தை விளக்கிவிட்டு, அவர் காலடியிலே முயலகனை இடைச்செருகலாகச் செருகிவிட்டார்கள் பிற்காலத்தார் என்று சொல்லிக் கண்டிப்பார்கள்.

ஒரு மரப்பொந்து கிடைத்துவிட்டால் போதும். அதற்கு மாணிக்கவாசகர் ஒரு திருவிழாவே நடத்திவிடுவார் என்று சொல்லுவார்கள். மருத மரத்தைப் பார்த்தாராம் திருவாசக ஆசிரியர். அந்த மரத்தில் கடவுள் தத்துவம் நிறைந்திருப்பதை உணர்ந்தார். மருத மரத்தின் கம்பீரியமும் தொன்மையும் அவருக்குக் கடவுளை ஞாபகப்படுத்தின. அதுவும், பொந்து விழுந்த மிகத் தொன்மையான மரமாக இருந்தது. ஆகையால்தான், பழமைக்கும் பழமையான பரம்பொருளை அது நினைவுறுத்தியது. உடனே பாடுகிறார்:

"அந்த இடைமருதில்
        ஆனந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவிநாம்
        பூவல்லி கொய்யாமோ!"

இப்படியாக, பொந்துக்கும், அறுகம்புல்லுக்கும் விழாக் கொண்டாடினார்கள் நம்முடைய மூதாதையர் என்பதை அடிக்கடி உணர்ச்சியோடு எடுத்துச் சொல்லுவார்கள் டி.கே.சி.

அவர்கள் மறைவதற்குச் சில நாட்களுக்கு முன் திருவாதிரையன்று காலை 5-30 மணிக்கு, சித்திரசபையிலிருந்து வரும் நாதஸ்வர இசையைக் கேட்டுக்கொண்டே டி.கே.சி. எழுதிய ஒரு கடிதத்தைக் குறிப்பிட்டு இந்தக் கட்டுரையை முடித்துவிடுகிறேன்.

கடிதம் கீழ்க்கண்டவாறு பேசுகிறது: “இன்று இங்கே அழகாக திருவாதிரை உத்ஸவம். சித்திரசபையில் நடராஜமூர்த்தி பச்சை சாத்தி எழுந்தருளுகிறார். நடனதீபம் எல்லாம் வெகு அழகாய் இருக்கும். பக்த கோடிகளுக்கு என்றே அருவி ஓடிவந்து “திம்திம்’ என்று விழுந்துகொண்டிருக்கிறது. நடனத்துக்கான தாளத்துடன் விழுகிறது.

“அம்பலத்தில் ஆடுகின்றார்
பாங்கிமா ரே-- அவர்
ஆட்டங்கண்டு நாட்டங்கொண்டேன்
பாங்கிமா ரே
இன்பவடி வாய்ச் சபையில்
பாங்கிமா ரே-- நடம்
இட்டவர்மேல் இட்டம் வைத்தேன்
பாங்கிமா ரே.

கற்பனைஎல் லாம்கடந்தார்
பாங்கிமா ரே-- என்தன்
கற்பனைக்குள் படுவாரோ
பாங்கிமா ரே
கல்மனம்எல் லாம்கரைப்பார்
பாங்கிமா ரே-- மனம்
கரையார்என் அளவிலே
பாங்கிமா ரே”

மண்ணையும், விண்ணையும் சேர்த்து அனுபவிக்கிறார் ராமலிங்க சுவாமிகள். பாடலும் விண்ணுக்கும் மண்ணுக்குமாய்த் துள்ளிப் பாய்கிறது.

சித்திரசபையிலிருந்து எழுந்தருளி கோயிலுக்கு இறங்குகிறார் நடராஜப் பெருமானார். காலை 5-30 மணி. மேள வாத்தியம் கேட்கிறது.

*1970-இல் எழுதியது.

**20 தமிழ் நாட்டில் சாக்தம்**

வடிவமற்றதாய், குணமற்றதாயிருக்கும் பர தத்துவத்தோடு உறவாடுவது கடினம். ஆனால், அந்தப் பரம்பொருளுக்கு ஒரு வடிவத்தைக் கற்பித்து, அதைத் “தாயே’ என்று வணங்கி உறவாடத் தொடங்கிவிட்டால், நம்முடைய உணர்வோடு குலாவும் பொருளாகி விடுகிறது அது. அப்பாலுக்கு அப்பாலாயிருக்கும் பொருள் இப்பாலுக்கு இப்பாலாக நெருங்கி நம்மை ஆட்கொள்ளுகிறது.

இறைவனைத் தாயாகக் கருதி ஊடாடுகிறவர்களுக்கு சோதனைகளும் அதிகமாக ஏற்படுவதில்லை. தனயனுக்குத் தாயிடமிருக்கும் உறவு பாதுகாவல் நிறைந்த உறவு. அதில் ஆபத்துக்களும், அபாயங்களும் இல்லை.

“உச்சி தனைமுகர்ந்தால் -- கருவம்
ஓங்கி வளருதடி!
மெச்சி யுனைஊரார் -- புகழ்ந்தால்
மேனி சிலிர்க்குதடி”

என்று தகப்பன் சொல்ல மாட்டான். தாய்தான் சொல்லுவாள். அவ்வளவு கருணை நிறைந்தது தாய் உள்ளம். நாம் என்ன குற்றம் செய்தாலும் அவள் மன்னிக்கக் காத்திருக்கிறாள். நாம் காலால் உதைத்தாலும், உதைத்த காலுக்கு ஒரு தோடா போட்டு மகிழ்பவள் தாய். சகிப்புத் தன்மையும், எல்லையற்ற அன்பும் தாய்க்கு இருக்கிறபடியால், அச்சமின்றி அவளோடு நாம் பழகலாம்.

இந்த உறவை இறைவனிடத்திலே இணைத்து, இறைவனைத் தாயாகக் கற்பனை செய்து அவளோடு நாம் ஊடாடும்போது, நம் உணர்வு பெருகுகிறது, நம் ஆணவம் மெல்ல மெல்லக் கரைகிறது; ஆனந்தம் மேலிடுகிறது.

இறைத் தத்துவத்துக்கு நாமமில்லை, உருவம் இல்லையென்று நம் முன்னோர்களுக்குத் தெரியும். ஆனால், நமது புலன்களுக்கும், அறிவுக்கும் எட்டாத அந்தத் தத்துவத்தோடு நெருங்க வேண்டுமே. அதற்காக ஒரு தந்திரம் செய்தார்கள். அப்பொருளுக்கு நாமத்தையும், உருவத்தையும் கற்பித்தார்கள். அதோடு நிற்கவில்லை. மனித வாழ்க்கையில் நாம் நேரடியாக அனுபவிக்கிற, தாய்--உறவை ஏணியாகக்கொண்டு எட்டிப்பிடிக்க முடியாத வஸ்துவை உணர்வினால் எட்டிப்பிடித்தார்கள். அவ்வாறு எட்டிப்பிடித்த பிறகு, கற்பனையும், பாவனையும் அவசியமில்லாமல் போய்விடுகிறது; கற்பனையை உதறித் தள்ளிவிட்டு பர தத்துவத்தோடு ஒன்றிவிடலாம், திருமூலரைப் போல்.

“கற்பனை உதறிய பாழில் ஒடுங்குகின்றேனே”

என்று ஒடுங்கிவிடலாம்.

ஆனால் இறைத் தத்துவத்தை உணரும் வரை, கற்பனையின் உதவி நமக்கு வேண்டியிருக்கிறது. அதை சக்தி தேவியாகக் கற்பனை செய்து வழிபடும் சமயத்தையே “சாக்தம்’ என்று சொல்லுகிறோம்.

சக்தி வழிபாடு எவ்வளவு சுகத்தைக் கொடுக்கிறது, எப்படி அபயம் அளிக்கிறது என்பதை ஒரு பாடல் காட்டுகிறது. யம பயத்திலிருந்து என்னைக் காப்பாற்று என்று கோமதித் தாயைப் பார்த்துக் கேட்கிறார் ஒரு பக்தர்.

“கேடா வருநமனைக்
கிட்ட வராதே தூரப்
போடா எனஓட்டி, உந்தன்
பொற்கமலத் தாள்நிழற்கீழ்
வாடா எனஅழைத்து
வாழ்வித்தால், அம்ம, உனைக்
கூடாதென்றார் தடுப்பார்,
கோமதித் தாய் ஈஸ்வரியே.”

திருநெல்வேலி அழகிய சொக்கநாதப் பிள்ளை என்ற பக்தர் பாடிய பாடல் இது. இப்படியெல்லாம் தாயிடத்திலே துணிந்து வரங்கேட்கலாம். உரிமையோடு கேட்கலாம், இடித்துக் கேட்கலாம், அடித்தே கேட்கலாம். “கொடுக்கமாட்டேன்’ என்று சொல்ல, தாய்க்கு மனம் வராது.

தமிழகத்திலே பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக தாய் வழிபாடு புழக்கத்தில் இருந்து வந்திருக்கிறது. கி.பி. 80-இல், அதாவது, 19 நூற்றாண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட Periplu of the Erythrean Sea என்ற கிரேக்கப் பயண நூலிலும், கிறிஸ்து பிறந்து 75 ஆண்டுகள் வரை வாழ்ந்த Pliny என்ற கிரேக்க ஆசிரியருடைய நில நூலிலும் தமிழகத்தில் சக்தி வழிபாடு இருந்தது என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

தொல்காப்பியத்திலும், சங்க காலத் தமிழ் இலக்கியத்திலும், தெய்வத் தாய்க்குக் “கொற்றவை’ என்றும், “ஐயை’ என்றும் நாமம் சூட்டியிருக்கிறார்கள். கொற்றவையின் கோலத்தை, சிலப்பதிகார வேட்டுவ வரியில் இளங்கோவடிகள் வருணிக்கிறார்:

“ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரிஉடுத்து,
கானத் தெருமைக் கருந்தலைமேல் நின்றாயால்,
வானோர் வணங்க, மறைமேல் மறையாகி,
ஞானக் கொழுந்தாய், நடுக்கின்றி யேநிற்பாய்.”

காட்டெருமைத் தலைமேல் நின்றவள் மகிஷாசுர மர்த்தினிதான் என்பது அடுத்த பாட்டில் தெளிவாகிறது.

“வரிவளைக்கை வாள்ஏந்தி, மாமயிடற் செற்றுக்
கரியதிரி கோட்டுக் கலைமிசைமேல் நின்றாயால்
அரி, அரன், பூ மேலோன் அகமலர்மேல் மன்னும்
விரிகதிர்அம் சோதி விளக்காகி யேநிற்பாய்.”

இப்பாடலில் கொற்றவையை லக்ஷ்மியாகவும், பார்வதியாகவும், சரஸ்வதியாகவும் போற்றுகிறார் இளங்கோவடிகள். மரக்கால் மேல் நின்று வாட்கூத்து ஆடுகிறாள் கொற்றவை. அதைக் கண்டு அவுணர்கள் அழிந்துபடுகிறார்கள், வானோர்கள் மகிழ்கிறார்கள் என்றும் சிலப்பதிகார ஆசிரியர் கூறுகிறார்.

மணிமேகலையில் துர்க்கையைக் காடமர்ச் செல்வி என்று கூறப்பட்டிருக்கிறது. அவளுடைய கோயில் முன்றிலில் பலிபீடங்கள் இருக்கின்றன; நெடுமரங்களும் இருக்கின்றன; தலைகள் மரக்கிளைகளினின்றும் தொங்கிக்கொண்டிருக்கின்றன; உலையாத உள்ளத்தோடு காளிக்குப் பலியாகத் தம் தலைகளைத் தாமே அரிந்துகொடுத்த வீரர்கள் தமிழ் நாட்டிலிருந்தார்கள் என்று மணிமேகலை சொல்லுகிறது.

குரூரமும், வன்கண்மையும் நிறைந்த சாக்தர்கள் தமிழகத்தில் இருந்தார்கள் என்பதைக் கலிங்கத்துப்பரணி உறுதிப்படுத்துகிறது. தேவிக்கு நரபலி கொடுத்து வழிபடும் காட்சியை ஒரு பாடல் விவரிக்கிறது:

சொல்லரி ஓமத்தீ வளர்ப்பராலோ,
தொழுதிருந்து பழஎலும்பு தொடர வாங்கி
வல்ளரியின் விறகுஆக இடுவராலோ,
வழிகுருதி நெய்ஆக வார்ப்ப ராலோ.
அடிக்கழுத்தி னுடன் சிரத்தை அரிவராலோ
அரிந்தசிரம் அணங்கின்கைக் கொடுப்ப ராலோ
கொடுத்தசிரம் கொற்றவையைப் பரவு மாலோ
குறைஉடலம் கும்பிட்டு நிற்கு மாலோ

சக்தி தேவியிடமிருந்த பக்திவெறியில் இப்படியெல்லாம் மக்கள் அலங்கோலத் தியாகங்கள் செய்திருக்கிறார்கள்; ஆணவத்தைத் தியாகம் செய்வதற்குப் பதிலாகத் தலையையும், கையையும் அரிந்து தியாகம் செய்திருக்கிறார்கள். வெறுக்கத்தக்க இப்பழக்கங்களையெல்லாம் சீனாச்சாரம் என்று சில அறிஞர்கள் கருதுகிறார்கள். அதாவது, சீனாவிலிருந்து இறக்குமதியான பழக்கங்கள் என்று.

சாக்தத்திலேயிருந்த குரூரமான அம்சங்களையெல்லாம் களைந்துவிட்டு, அதிலுள்ள மெய்ப்பொருளை மாத்திரம் ஏற்றுக்கொண்டு, சைவத்தையும், சாக்தத்தையும் சமரசப்படுத்திவிட்டார்கள் தமிழ் நாட்டிலேயிருந்த ஞானிகள். சிவனை உமையொரு பாகனாக்கி, அவனுக்கு அர்த்தநாரி வடிவத்தைக் கொடுத்து இந்தக் கொள்கையை மேலும் வலியுறுத்திவிட்டார்கள். தீயிலிருந்து எப்படிச் சூட்டைப் பிரிக்க முடியாதோ, அப்படியே சில தத்துவத்தினின்றும் சக்தி தத்துவத்தைப் பிரிக்க முடியாது என்று முடிவுகட்டினார்கள். இதையே திருமந்திரத்திலும்,

"அண்ண லிருப்பது அவளக் கரத்துளே
பெண்ணின் நல்லாளும் பிரான்அக் கரத்துளே
எண்ணி யிருவர் இசைந்தங் கிருந்திடம்
புண்ணியவாளர் பொருளறி வார்களே"

என்று சொல்லியிருக்கிறது.

இறைவன் அம்மையப்பனாகக் காட்சியளிக்கிறார் என்ற கருத்தை நாயன்மார்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள். இந்தக் கருத்தையொட்டியே கம்பரும் ஒரு அரிய கவி பாடியிருக்கிறார்.

"தாய்தன்னை யறியாத கன்றில்லை, தன்கன்றை
ஆயும் அறியும்; உலகின் தாய்ஆகி, ஐய,
நீஅறிதி எப்பொருளும், அவைஉன்னை நிலையறியா
மாயைஇது என்கொலோ! வாராதே வரவல்லாய்"

"உலகின் தாய்' என்று இறைத் தத்துவத்தை வருணித்துவிட்டு, "ஐயனே" என்று விளிக்கிறார். தாய்த் தத்துவமும், தகப்பன் தத்துவமும் பின்னிக்கிடந்த நிலையையே மேற்சொன்ன பாட்டில் கம்பர் சுட்டிக்காட்டுகிறார்.

ஒரு முஸ்லிம் சித்தர் எழுதிய ஞான ரத்னக் குறவஞ்சியென்ற நூலிலே தாய் சம்மதிக்கவில்லையென்றால், தகப்பன் இந்தப் பிரபஞ்சத்தை உற்பத்தி செய்திருக்க முடியாது என்று சொல்லியிருக்கிறது.

"எப்படி யுலகத்தில் இப்படி உருவானோம்--சிங்கி--அது
அப்பன்தன் நட்புக்கு ஒப்பிய தாயாலே--சிங்கா"

இந்தக் கருத்தையே திருமூலரும்,

"ஒருவன் ஒருத்தி விளையாட லுற்றார்
இருவர் விளையாட்டும் எல்லாம் விளைவிக்கும்'

என்று சொன்னார்.

"சிவம்' என்பது செயலற்ற தத்துவம் என்றும், மகா மாயையாகிய சக்தி தேவி சிவத்தைத் தொட்டவுடன் ஆணவ மாயை பிறக்கிறதென்றும், ஆணவத்திலிருந்து "மனசு' என்ற தத்துவம் உதயமாகி, மனசிலிருந்து ஆகாசம், ஆகாசத்திலிருந்து காற்று, காற்றிலிருந்து தீ, தீயிலிருந்து நீர், நீரிலிருந்து மண்-- இவ்வாறாகப் பஞ்சபூதச் சேர்க்கையால் பிரபஞ்சமும், உயிர்களும் தோன்றுகின்றன என்றும், இந்தப் பரிணாம நெறியே (Evolution) சக்தியின் விளையாட்டு என்றும் சித்தர்கள் கருதுகிறார்கள். பிரளய காலத்தில், மண்ணை நீர் உண்ணுகிறது, நீரைத் தீ உண்ணுகிறது, தீ காற்றில் ஒடுங்குகிறது, காற்று ஆகாசத்திலும், ஆகாசம் மனசிலும், மனசு ஆணவ சக்தியிலும், ஆணவ சக்தி சிவத்திலும் ஒடுங்குகிறது. இதையே (ஐணதிணிடுதtடிணிண) அல்லது "ஒடுக்கம்' என்று கூறுகிறார்கள்.

"ஊழிக் கூத்து' என்ற பாடலில் சுப்பிரமணிய பாரதியார் பிரபஞ்ச ஒடுக்கத்தில் காளியின் கூத்து எவ்வாறு நடக்கிறதென்பதை உணர்ச்சியோடு பாடியிருக்கிறார்.

"வெடிபடு மண்டத் திடிபல தாளம் போட-- வெறும்
வெளியில் இரத்தக் களியொடு பூதம் பாட -- (பாட்டின்
அடிபடு பொருளின் அடிபடு மொலியிற் கூட -- (களித்
தாடும் காளீ! சாமுண்டீ! கங்காளீ!

ஐந்துறு பூதம் சிந்திப் போயொன்றாகப் -- பின்னர்
அதுவும் சக்திக் கதியில் மூழ்கிப் போக -- அங்கே
முந்துறும் ஒளியிற் சிந்தை நழுவும் வேகத் -- தோடே
முடியா நடனம் புரிவாய், அடுதீ சொரிவாய்!

பாழாம் வெளியும் பதறிப் போய்மெய் குலையச் -- சலனம்
பயிலும் சக்திக் குலமும் வழிகள் கலைய -- அங்கே
ஊழாம் பேய்தான் "ஓஹோ ஹோ" என்றலைய -- வெறித்
துறுமித் திரிவாய், செருவெங் கூத்தே புரிவாய்.

சக்திப் பேய்தான் தலையொடு தலைகள் முட்டிச் -- சட்டச்
சடசட சட்டென் றுடைபடு தாளங் கொட்டி -- அங்கே
எத்திக் கினிலும் நின்விழி அனல்போய் எட்டித் -- தானே
எரியும் கோலம் கண்டே சாகும் காலம்.

காலத் தொடுநீர் மூலம் படுமு வுலகும் -- அங்கே
கடவுள் மோனத் தொளியே தனியாயிலகும் -- சிவன்

கோலங் கண்டுன் கனல்செய் சினமும்விலகும் -- கையைக்
கொஞ்சித் தொடுவாய் ஆனந்தக்கூத் திடுவாய்.

அன்னை! அன்னை! ஆடுங்கூத்தை
நாடச் செய்தாய் என்னை."

இவ்வாறு பஞ்சபூதங்கள், காலம், இடம், மனம், ஆணவம் என்ற தத்துவங்கள் எல்லாம் ஒடுங்கிய நிலையில் சிவன், சக்தி தேவியின் கர்ப்பப்பையிலே சொகுசாக ஜாக்ர நித்ரை செய்துகொண்டிருக்கிறான். இந்த நிலையில் சிவனுக்கும் தாயாகக் காட்சி கொடுக்கிறாள் சக்தி தேவி. பிறகு, மறுபடியும் பிரபஞ்சம் உற்பத்தியாகும்போது சிவனுக்குத் தாரமாக இருக்கிறாள் தேவி. பிரபஞ்சம் தோன்றி அதன் மூலம் கோடானு கோடி சக்திகள் இயங்கும்போது, தேவி சிவனுடைய மகளாகக் காட்சியளிக்கிறாள். இந்தக் கருத்தை திருமந்திரம் விளக்குகிறது--

"வாயும் மனமும் கடந்த மனோன்மணி
பேயும் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயும் அறிவும் கடந்த அரனுக்குத்
தாயும் மகளும் நற்றாரமும் ஆமே."

பேரண்டத்தில் இவ்வாறு ஞான நாடகமாடிய பெண் பிள்ளை, சிற்றண்டத்திலும் பலவித நிலைகளிலிருந்து உயிர்களுக்கு உதவுகிறாள். கொங்கணநாயனார் வாலைக்கும்மியில் இதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

மாதா வாய்வந்து அமுதம் தந்தாள் மனை
யாட்டி யாய்வந்து சுகங்கொ டுத்தாள்
ஆதர வாகிய தங்கை யானாள்--நமக்
காகக் கொழுந்தியு மாமி யானாள்.

இவ்வாறு இயங்கும் சக்தியை திரோதாயி சக்தி அல்லது மறைப்பு சக்தியென்று சைவ சித்தாந்தத்தில் சொல்லுவார்கள். பேருண்மை நமக்குப் புலப்படாமல் திரையைப் போட்டு நம் கண்ணை மறைப்பதும் அவள். திரையைக் கிழித்துச் செம்பொருளைக் காட்டுகிறவளும் அவள். மாயா சக்தியாக நின்று நம்மை அறியாமையில் அழுத்திவைக்கிறாள். ஞான சக்தியாக நின்று நமக்குப் பேரின்பத்தை நல்குகிறாள். அவளுடைய கருணை இல்லையென்றால், நாம் பர தத்துவத்தை அணுக முடியாது. பக்குவம் நமக்கு ஏற்பட்டுவிட்டால், முக்தியை நாம் விரும்பாவிட்டாலும் நம்மை வலிய இழுத்து நமக்கு முக்தியைக் கொடுத்துவிடுவாள். இதை மறக்கருணையென்று சொல்லுவார்கள்.

"இருட்டறை மூலை இருந்த குமரி
குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்து
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
மருட்டி அவனை மணம்புரிந் தானே"

என்பது திருமந்திரம். நம்மை மிரட்டியும் மருட்டியும் நமக்கு அருள்பாலிக்கிறாள் அவள்.

அஞ்ஞானத்திலிருக்கும் நாம் ஜட தத்துவத்தை, கேவலம் ஜட தத்துவம் என்றே எண்ணுகிறோம். உண்மையில் ஜடமாகத் தோன்றுவதெல்லாம் இறைத் தத்துவத்தின் வெளியீடுதான். சாம்பல் பூத்த நெருப்பிலே, நெருப்பின் சிவந்த நிறமும் வெப்பமும் தெரிவதில்லை, வெண் சாம்பல்தான் தெரியும். ஆனால், ஒரு குச்சியினால் அதைக் கிளறிப் பார்த்தால் சாம்பலுக்கப்பாலுள்ள நெருப்பு தெரிகிறது. தாய், ஞான சக்தியாக நின்று ஜட தத்துவத்தைக் கிளறிக்காட்டும்போது, நெருப்புருவமாக உள்ளேயிருக்கும் சிவ தத்துவம் நம்

உணர்வுக்குப் புலப்படுகிறது. இந்த அரிய உண்மையை அழகோடும், உணர்ச்சியோடும் "நந்திக் கலம்பகம்' நமக்கு விளக்குகிறது.

"பொருப்பரையன் மடப்பாவை
புணர்முலையின் முகடுதைப்ப
நெருப்புருவம் வெளியாக
நீறணிந்த வரை மார்பா"

சிவன் வெண்ணீறணிந்து தன் சிவந்த மேனியை மூடிக்கொண்டிருக்கிறான். ஆனால், பர்வதராஜனுடைய குமாரி தன் ஸ்தனங்களின் முகடுகளால் அவனுடைய நீறணிந்த மார்பைத் தைக்கும்போது, அவனுடைய மார்பிலேயிருந்த வெண்ணீறு உதிர்ந்து போகிறது; உள்ளேயிருக்கும் நெருப்புருவம் நமக்குத் தெரிகிறது. உண்மைக்கு அழகும், உணர்ச்சியும் கொடுப்பதற்காகக் காதல் துறையில் வைத்து அதைக் காட்டுகிறார் "நந்திக் கலம்பக' ஆசிரியர்.

அடையாள பாஷையிலே இவர் சொன்னதை நமக்குப் புரியக்கூடிய வெள்ளைத் தமிழிலே பலபட்டடை சொக்கநாதப்புலவர் சொல்லுகிறார்.

இவர் திருநெல்வேலியில் வாழ்ந்தவர். நெல்லையில் கோயில் கொண்டிருக்கும் வேய்முத்தரையும், வடிவம்மையையும் நித்தநித்தம் வணங்கியவர். தகப்பனைக் காட்டிலும் தாய்க்கு கருணை அதிகம் என்ற உண்மையைத் தன் குடும்ப வாழ்க்கையில் உணர்ந்தவர். தம்முடைய குறைகளையெல்லாம் வேய்முத்தரிடத்திலே சொல்லிச் சொல்லிக் கதறினார். ஆனால், வேய்முத்தருடைய மனம் இளகுவதாக இல்லை. என்ன செய்வது? தாயிடம் முறையிட்டால் தகப்பனிடம் சிபாரிசு செய்ய மாட்டாளா என்று எண்ணுகிறார். "அவர் திரிபுரத்தை எரிக்கப் புறப்பட்டுக்கொண்டிருக்கும்போது என்னைப்பற்றிச் சொல்லிவிடாதே. அம்மா, இளக்கமாக இருக்கும் நேரம் பார்த்து நயமாக அவரிடம் என்னைப்பற்றிச் சொல். அப்படிச் சொன்னால், உன் வாயில் இருக்கும் முத்து சிந்தியா போகும்?" என்று தாயிடத்திலே உருகிக் கேட்கிறார்.

"ஆய்முத்துப் பந்தரின் மெல்லணை மீதுஉன் அருகிருந்து
நீமுத்தம் தாவென் றவர்கொஞ்சும் வேளையில் நித்தநித்தம்
வேய்முத்த ரோடுஎன் குறைகளெல்லாம் மெல்லமெல்லச் சொன்னால்
வாய்முத்தம் சிந்திவிடுமோ, நெல்வேலி வடிவம்மையே."

பிரபஞ்சம் முழுவதுமே ஆண்--பெண் கோலத்தில், அர்த்தநாரி வடிவத்தில் இருப்பதை அப்பர் அடிகள் கண்டார். அதற்குமுன் கண்டறியாத இந்தக் காட்சியைத் திருவையாற்றில் கண்டுகளித்தார்.

"கண்டே னவர்திருப் பாதம்
கண்டறியாதன கண்டேன்"

என்று ஆனந்த மேலீட்டால் அவர் ஓலமிடுகிறார். எவ்வாறு கண்டார்?

"மாதர் பிறைக்கண் ணியானை
மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவார் அவர்பின் புகுவேன்
யாதும் சுவடு படாமல்
ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடும்
களிறு வருவன கண்டேன்."

ஆண் யானையும், பெண் யானையும் ஜோடியாகப் போவதைப் பார்த்தபோது, அம்மையப்பனின் இரண்டு திருப்பாதங்களுமே அவர் கண்ணுக்குப் புலப்பட்டு விட்டன.

“கோழி பெடையொடுங் கூடிக்
குளிர்ந்து வருவன கண்டேன்.
கண்டேன் அவர்திருப் பாதம்
கண்டறி யாதன கண்டேன்.”

என்றும்,

“வரிக்குயில் பேடையோ டாடி
வைகி வருவன கண்டேன்’
“பேடை மயிலொடுங் கூடிப்
பிணைந்து வருவன கண்டேன்’
“பைங்கிளி பேடையோ டாடிப்
பறந்து வருவன கண்டேன்’

என்றும் சொல்லி, பிரபஞ்சத்தில் எங்குமே, அணுவிலிருந்து பேரண்டம் வரை, சிவனும்-சக்தியும் ஜோடியாகப் பிணைந்து பின்னிக்கிடந்த நிலையை உணர்ந்து மகிழ்ந்தார் திருநாவுக்கரசர்.

அண்டத்தில் அவர் கண்ட ஆண்--பெண் கோலத்தைப் பிண்டத்திலும் கண்டார்கள் நம் சித்தர்கள். ஒவ்வொரு மனிதனுடைய உடம்பிலும் இவ்விரு சக்திகளும் இணைந்திருக்கின்றன. இடப்பாகத்தில் சக்தியும், வலப்பாகத்தில் சிவனும் இருப்பதைக் கண்டார்கள். மூச்சுப் பயிற்சியின் மூலமாகவும், யோக சாதனங்கள் மூலமாகவும், மந்திரச் சொற்களின் மூலமாகவும் சக்தியைச் சிவத்தோடு இணைத்து, ஆன்மாவைப் பர தத்துவத்திலே ஒடுக்கி முக்தியடைந்தார்கள்.

“வாயோடு கண்மூடி மயக்கமுற்று நில்லாமல்
தாயோடு கண்மூடித்தழுவி நிற்ப தெக்காலம்”

என்று புலம்புகிறார் பத்ரகிரியார்.

மூலாதாரத்திலிருக்கும் குண்டலினி சக்தியை வாலைப் பிடித்து எழுப்பி சஹஸ்ராரத்துக்குக் கொண்டுபோய், அங்கிருக்கும் சிவத்தோடு அணையச் செய்யவேண்டுமென்றும், அவ்வாறு செய்தால் முத்தி கிடைக்கும் என்றும் சித்தர்களும் யோகிகளும் நம்புகிறார்கள்.

“சிவராஜ யோகம்’ என்ற யோக முறையில், ஆறாதாரத்தை ஒப்புக்கொள்ளவில்லை. உடம்பிலே வெட்டாத சக்கரங்கள் இரண்டு இருக்கின்றன. இடப்பக்கத்திலுள்ள சக்கரத்துக்கு சக்தி சக்கரம் அல்லது சந்திரன் என்று பெயர். வலப்பக்கத்திலுள்ள சக்கரத்துக்கு சிவ சக்கரம் அல்லது சூரியன் என்று பெயர். இவ்விரண்டு சக்கரங்களையும், குருவின் துணை கொண்டு சேர்த்துவிட்டால், முக்தி கிடைத்துவிடும் என்று நம்புகிறார்கள். ஔவையார் குறளில் இதையே,

“சக்தியாம் சந்திரனைச்
செங்கதிரோ னூடுருவில்
முத்திக்கு மூலம் அது”

என்று சொல்லியிருக்கிறது.

நம் உடம்பிலே அம்மை இருக்கும் இடத்தை மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழில் குமரகுருபரர் குறிப்பிடுகிறார்--

"... துவாத சாந்தப் பெருவெளியில்
துரியங் கடந்த பரநாத
மூலத் தலத்து முளைத்த முழுமுதலே
முக்கட் சுடர்க்கு விருந்திடு
மும்முலையாய், முத்தம் தருகவே"

என்று சொல்லுகிறார்.

நம் உடலிலே அம்மையும், அப்பனும் கூடி விளையாடும் வீடு, அதிசயங்கள் நிறைந்த வீடு என்று கருவூரார் என்ற சித்தர் ஓலமிடுகிறார்.

"ஓசைமணி பூரமதில் உதிக்கும் வீடு
ஓகோகோ அதிசயங்கள் உள்ள வீடு
ஆசுகவி மதுரமது பொழியும் வீடு
அவனவளும் கூடிவிளை யாடும் வீடே"

என்றார்.

இராமலிங்க அடிகளும் தம் உடலுக்குள்ளேயுள்ள ஏழு மாடங்களைத் தாண்டித் திருவாயிலை அடைகிறார். அங்கு அம்மை அவருக்கு அருள்செய்த வண்ணத்தைப் பாடுகிறார்--

"அத்திரு வாயிலில் ஆனந்தவல்லி என்
அம்மை யிருந்தாளடி-- அம்மா
அம்மை யிருந்தாளடி"

"அம்மையைக் கண்டேன்
அவளருள் கொண்டேன்
அமுதமு முண்டேனடி-- அம்மா
அமுதமுமுண்டேனடி.
தாங்கும் அவளரு ளாலே நடராஜர்
சந்நிதி கண்டேனடி-- அம்மா
சந்நிதி கண்டேனடி."

"சந்நிதி யிற்சென்று நான்பெற்ற பேறு
சாமி யறிவாரடி-- அம்மா
சாமி யறிவாரடி."

யந்திரங்கள் மூலமாகவும் சக்தி வழிபாடு தமிழ் நாட்டில் நடந்து வருகிறது. திருமந்திரத்தில் திரிபுரைச் சக்கரம், ஏரொளிச் சக்கரம், வயிரவச் சக்கரம், சாம்பவி மண்டலச் சக்கரம், புவனாபதி சக்கரம், நவாக்கரி சக்கரம் முதலியவற்றைப் பற்றி விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆதிசங்கரர் போன்ற ஞானிகள் தமிழ் நாட்டிலுள்ள முக்கிய ஆலயங்களில் ஸ்ரீசக்கரத்தை ஸ்தாபித்திருக்கிறார்கள். காஞ்சி காமாட்சி அம்மை கோயிலில் உள்ள பிரசித்திபெற்ற காமகோடி பீடத்தில் ஸ்ரீசக்கரம் ஸ்தாபிதமாகியிருக்கிறது. திருக்குற்றாலத்தில் பராசக்தி பீடத்திலும் ஸ்ரீசக்கரம் பதிக்கப்பட்டிருக்கிறது. சிதம்பரத்தில் சிவ சக்கரமும், ஸ்ரீசக்கரமும் சேர்ந்த சம்மேளன

சக்கரம் இருக்கிறது. அண்ட பிண்டங்களையும், அவற்றிற்கு மூல காரணமாயிருக்கும் தத்துவத்தையும் முக்கோண, அட்சர பரிபாஷையில் இந்தச் சக்கரங்கள் குறிப்பிடுகின்றன.

கடைசியாக, தமிழ் நாட்டில் அரவிந்தர் சாக்தத்தை அனுஷ்டித்து வந்த முறையைப் பற்றிச் சில வார்த்தைகள்--

தெய்வத்தாய் ஒருத்திதான். ஆனால், அவளுக்குப் பல அம்சங்கள் உண்டு. முக்கியமாக நான்கு உருவங்களில் வந்து பூலோக வாழ்க்கையை அவள் வளப்படுத்துகிறாள்.

ஆதிசக்தியாயிருக்கும்போது அவள் பேரண்டத்தைக் கடந்து நிற்கிறாள். அபர நிலையிலிருக்கும் இறைத் தத்துவத்துக்கும், படைக்கப்பட்ட பேரண்டத்துக்கும் இடையே நின்று அவள் இரண்டையும் பிணைக்கும் சங்கிலியாகத் தொழில் புரிகிறாள். மகா சக்தியாக இருந்து பேரண்டத்திலுள்ள பொருள்கள், உயிர்கள் யாவற்றையும் படைத்துக் காத்து கோடிக்கணக்கான சக்திகளை முடுக்கிவிடுகிறாள். ஆதிசக்தியையும், மகா சக்தியையும் ஆன்மாக்களுக்குப் புலப்படுத்தி, மனிதத் தத்துவத்துக்கும், இறைத் தத்துவத்துக்கும் இடையில் பஞ்சாயத்காரியாக நின்று அவள் சமரசப்படுத்துகிறாள்.

எல்லாம் கடந்து நிற்கும் ஆதிசக்தியானவள், எல்லா உலகங்களுக்கும் அப்பால் நின்றுகொண்டு, இறைத் தத்துவத்தைத் தன் உணர்வில் தியானப்பொருளாகக் கொண்டு தவம் செய்கிறாள். அவள் மூலம் இறைத் தத்துவமானது சச்சிதானந்தமாக வெளிப்படுகிறது. ஈஸ்வர--சக்தியாகவும், புருஷ பிரகிருதியாகவும் இருந்து அவள் பிரபஞ்ச லீலையை நடத்துகிறாள்; எல்லாம் அவள், அவளன்றி அணுவும் அசையாது.

ஆதிசக்தி உதவிய பொருளை உருவாக்குவது மகா சக்தியின் வேலை. இயற்கையிலிருக்கும் சக்திகளை ஒழுங்குபடுத்தியும், நியதிப்பஜ இயக்கியும், பிரபஞ்ச நாடகத்தில் வரும் காட்சிகளை வகுத்தும், தொகுத்தும், இதர தெய்வீக சக்திகளின் உதவியால், அவள் நாடகத்தை நடத்துகிறாள். ஆனால், சூத்திரதாரியைப் போல், தன்னை மறைத்துக்கொண்டே இயங்குகிறாள் மகாசக்தி. அவளுடைய குழந்தைகளாகிய நம்மிடத்திலே அவளுக்கு எல்லையற்ற அன்பிருக்கிறது. அசுர சக்திகளினின்றும் அவள் நம்மைக் காப்பாற்றுகிறாள்.

அவளுடைய நான்கு அம்சங்களுக்கும் நான்கு பெயர்கள்: மகேஸ்வரி, மகாகாளி, மகாலக்ஷ்மி, மகாசரஸ்வதி.

மகேஸ்வரி மனித மனசுக்கு அப்பாலிருக்கும் வெட்டவெளியில் அமர்ந்திருக்கிறாள். மனித மனசைப் படம் போட்டுப் பொன்னாக்குகிறாள். நம் உள்ளத்தைத் திறந்து, பராபரத்தின் ஜாஜ்வல்லியத்தைப் பார்க்கச் செய்கிறாள். அவள் அமைதி நிறைந்தவள், ஞானம் நிறைந்தவள், பிரபஞ்ச ரகசியம் தெரிந்தவள், முக்காலமும் உணர்ந்தவள், கருணைக் கடல். எல்லோரும் அவளுடைய குழந்தைள். அசுரர்களையும், அரக்கர்களையும்கூட அவள் கருணையோடு பார்க்கிறாள். அவள் கொடுக்கும் தண்டனைகூட அருளிலிருந்து பிறக்கும் தண்டனை.

இனி, மகாகாளியின் குணங்கள் மகேஸ்வரியின் குணங்களினின்றும் வேறுபட்டவை. அவளுக்குரியது சக்திதான், ஞானம் அல்ல. எல்லையற்ற வல்லமை படைத்தவள் அவள். எந்த இடையூற்றையும் தகர்த்து நொறுக்கி, எந்த எல்லையையும் மீறி இயங்குபவள். அசுரர்களுக்கு அவள் தன் கோர உருவத்தைக் காட்டுகிறாள். பொய், புலைமை, கயமை-- இவற்றையெல்லாம் தயை தாட்சண்யமில்லாமல் உடனுக்குடனே சம்ஹாரம் செய்கிறவள். அவளுடைய வெஞ்சினமும், ஆங்காரமும் எல்லையற்றவை.

மூன்றாவதாக இருப்பது மகாலக்ஷ்மி. இனிமையே வடிவானவள் இவள். இங்கிதம் நிறைந்தவள். இவள் பக்கத்திலிருந்தாலே நமக்கு ஆனந்தம் பொங்கும். அழகும், அன்பும், இசைவும் (Harmony) இருக்கும் இடமெல்லாம் இவள் இருப்பாள். அவை இல்லாத இடங்களை விட்டு சட்டென்று நீங்கிவிடுவாள். அன்பினாலும் அழகாலும் ஆன்மாக்களை இறைவனுக்கு அடிமையாக்குகிறாள் இவள்.

கடைசியாக மகா சரஸ்வதி. நான்கு சக்திகளிலும் இளமையானவள் இவள். இவளே பிரபஞ்சத்தை நிர்வாகம் செய்கிறாள். மகேஸ்வரி பிரபஞ்ச சக்திகள் எப்படி இயங்க வேண்டும் என்று திட்டம் போட்டவள். மாகாளி அந்தச் சக்திகளைச் செலுத்தி வேலை வாங்குவாள். மகாலக்ஷ்மி அந்தச் சக்திகளைச் சுருதி சேர்த்துத் தாளம் தப்பாமல் இயங்கும்படிச் செய்கிறாள். ஆனால், மகா சரஸ்வதியோ ஒவ்வொரு சிறு துறையிலும் இறங்கி, சக்திகள் ஒத்துழைக்கின்றன என்று கண்காணித்து, அவற்றின் தொழிலால் எதிர்பார்க்கும் விளைவுகள் உண்டாகின்றனவா என்று பார்க்கிறாள். பொறுமையோடு, களைப்புக் கொள்ளாமல் வெகு கவனமாக வேலைகள் நடந்தேறும்படி செய்கிறாள்.

மனித வாழ்க்கையென்ற வீணையை மீட்டி, அதை பேரின்பத்தோடு சுருதி சேர்க்க விரும்புவோமேயானால், நாம் நம்மைத் தாயின் கையில் ஒப்படைத்துவிட வேண்டும். நம் இதயத்தின் ஒரு பாகத்தை மாத்திரம் அவளிடம் ஒப்படைத்துவிட்டு மிச்சமுள்ள பாகத்தை நம் பொறுப்பில் வைத்துக்கொள்ளலாகாது. நிபந்தனையற்ற ஸம்பூரண சரணாகதியாக இருக்க வேண்டும். அப்போதுதான் அவள் நம் இதயத்தில் இருந்துகொண்டு அவள் வேலையை அனாயாசமாகச் செய்ய முடியும். நாம் அவளைப்பற்றி நினைக்காமலிருக்கும்போதும் அவள் நம்முள்ளிருந்து தொழில்படத்தான் செய்கிறாள். ஆனால், நாம் அவளை விரும்பித் தியானம் செய்யும்போது, அவள் மிகுந்த ஆனந்தத்தோடும், உல்லாசத்தோடும் இயங்குகிறாள். நாம் அவள் கைக் களிமண்ணாக மாற வேண்டும். எப்படி எப்படியெல்லாம் அவள் நம்மை உருட்டினாலும் அப்படி அப்படியெல்லாம் நாம் வளைந்து கொடுத்துக்கொண்டே இருக்க வேண்டும். நம்முடைய உள் மனசையும், வெளி மனசையும் மிச்சம் கிச்சம் இல்லாமல் அவள் கையில் ஒப்படைப்போமாக. அப்படிச் செய்தால், ஞானமும், ஒளியும், வல்லமையும், இசைவும், அழகும், பரிபூரணமும் சித்தாகாசத்திலிருந்து நம் இதயத்தினுள் இறங்கும்; நம் இதயத்திலிருந்து பூலோக வாழ்க்கையில் அவை இறங்கும். ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய ஜீவன் முத்திக்காக மட்டுமே பாடுபடுவது சுயநலத்தின் பாற்படும். சக்தி தேவியின் அருளை நாம் பெற்று, நம் மூலமாக அதை உலகத்துக்குப் பாய்ச்சி, வானுலகத்தை மண்ணுலகத்துக்கு இழுத்துவந்து, மனிதச் சாதியை கந்தர்வ ஜாதியாக உயர்த்த வேண்டும். இதுவே அரவிந்தருடைய சாத்தம்.

இதையேதான் பாரதியாரும் சொன்னார்:

“ஆழ்க உள்ளம் சலனமில்லாது
அண்ட வெளிக்கண், அன்பினையே
சூழ்க! துயர்கள் தொலைந்திடுக!
தொலையா இன்பம் விளைந்திடுக!
வீழ்க கலியின் வலியெல்லாம்!
கிருத யுகந்தான் மேவுகவே!”